Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 27 சனிக்கிழமை (13-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:17

## பாதுகாப்பு அமைச்சைத் தாம் வைத்துக்கொண்டு

# சமாதான முன்னெடுப்புக்கு வேண்டிய அதிகாரங்கள் மட்டும் பிரதமரிடம்!

### இந்த அடிப்படையில் பேசிச் சிக்கலைத் தீர்க்க ஜனாதிபதி ஆர்வம் என்று சரத் அமுனுகம தகவல்

கொழும்பு, டிசெம்பர் 13

**பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமே இருக்கும். ஆயினும், சமாதான முயற்சிகளின் நலன்கருதி, சமாதான முன்னெடுப்புக்கு வேண்டிய அதிகாரங்களை மட்டும் பிரதமருக்கு வழங்க ஜனாதிபதி தயாராக விருக்கிறார். இந்த அடிப்படையில் பேசி அரசியல் நெருக்கடிச் சிக்கலைத் தீர்க்கலாம் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளரான கலாநிதி சரத் அமுனுகம கூறினார்.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இவற்றைக் கூறிய அவர், பிரதமர் முன்னெடுத்துச் செல்லும் சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி தமது பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவார் எனவும் குறிப்பிட்டார்.

நிமால் சிறிபால டி சில்வாவும் பங்குபற்றிய இச்செய்தியாளர் மாநாட்டில் சரத் அமுனுகம மேலும் கூறியதாவது:-

அரசமைப்புச் சட்டப்படி பாதுகாப்பு அமைச்சு முழுமையாக ஜனாதிபதிப் பதவி வகிப்பவரிடமே இருக்க வேண்டும். ஆனால், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லத் தேவையான பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்களை ஜனாதிபதி பிரதமருக்கு வழங்கத் தயாராகவுள்ளார். சமாதான முயற்சிகளின் பால் உள்ள அக்கறையினாலேயே ஜனாதிபதி இதைச் செய்யவிருக்கிறார். வழங்கப்படும் அதிகாரங்கள் குறித்துக் கலந்துரையாடலாம்.

பாதுகாப்பு அமைச்சையும் உள்துறை அமைச்சையும் அரசு இரண்டாகப் பிரித்து வைத்ததன் மூலமே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் மிலேனியம் சிற்றி வீடு சோதனைச் சம்பவம் நடைபெற்றது. எனவே, இந்த இரண்டு அமைச்சுக்களும் ஒரு வரிடமே இருக்க வேண்டும்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான அதிகார மட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு

(18ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அதிகாரி வருகை

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தில் இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளின் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நிக்கலஸ்டீன் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல்பிரிவு ஆலோசகர் கிறிஸ் லோங் சகிதம் யாழ். வரும் அவர் யாழ். அரச அதிபர் மற்றும் அதிகாரிகளையும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் பற்றி நேரில் அறியவுள்ளார். (ம-3-5)

## ஊடக அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றபின் வழங்கிய நியமனங்கள் சட்டவிரோதமானவை

### அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு,டிசெ.13

மக்கள் தொடர்பாடல் அமைச்சை ஜனாதிபதி கையேற்ற பின்னர் 'லேக் ஹவுஸ்' நிறுவனத்துக்கும் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கும் (ஐரி.என்) மேற்கொள்ளப்பட்ட சகல நியமனங்களும் சட்ட விரோதமானவை எனக் கருதி நடவடிக்கை எடுப்பதென அமைச்சரவை கடந்த புதனன்று தீர்மானித்துள்ளது.

இவ்விரு நிறுவனங்கள் மீதான சட்டபூர்வ பொறுப்பை வகிக்கவேண்டிய அமைச்சு குறித்தும் சட்ட ஆலோசனை பெற்றதையடுத்தே அமைச்சரவை இத்தீர்மானத்தை மேற்கொண்

(18ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்கு இராணுவம் இடையூறு செய்யவில்லை

### சென்னையில் தளபதி பலகல்ல நிருபர்களுக்குப் பேட்டி

சென்னை,டிசெ.13

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்கு இராணுவம் எந்த இடையூறும் செய்யவில்லை என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல சென்னையில் கூறினார்.

புதுடில்லியிலிருந்து இலங்கை திரும்பும் வழியில் சென்னை வந்த அவர், விமான நிலையத்தில் நிருபர்களுக்குப் பேட்டியளித்த போதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

(18ஆம் பக்கம் பார்க்க)



# ஜனாதிபதி தரப்பிலிருந்து அரசுக்கு திடீரென புதியதொரு யோசனை!

### மலிக் - மனோ குழு மீண்டும் கூடி ஆராய்வு

கொழும்பு,டிசெ.13

பாதுகாப்பு அமைச்சு தொடர்பான பிரச்சினைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பிலிருந்து புதியதொரு யோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சுக்குரிய சில விடயங்களைப் பிரதமரிடம் அல்லது தேசிய பாதுகாப்பு அமைச்சரிடம் ஒப்படைப்பதே அந்த யோசனையாகும்.

நேற்றுமுன்தினம் அவசரமாகக் கூடிய மலிக் சமரவிக்கிரம - மனோ தித்தவெல குழு அந்த யோசனையை ஆராய்ந்திருக்கிறது. இக்குழுவின் கூட்டம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

புதிய யோசனை குறித்து சுமார் ஒன்றரை மணி நேரமாக ஆராயப்பட்டது எனத் தெரிகிறது.

பாதுகாப்பு அமைச்சை மீண்டும் கையளிக்க ஜனாதிபதி முன்வராததால் பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையே புதனன்று நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் இணக்கப் பேச்சுக்கள் முறிவடையும் நிலை உருவானது. மலிக் - மனோ குழுவின் சந்திப்புக்களும் முடிவுக்கு வரவிருந்தன.

இந்தநிலையிலேயே, ஜனாதிபதி தரப்பிலிருந்து கிடைத்த திடீர் அறிவிப்பின்பேரில் மலிக் - மனோ குழு நேற்றுமுன்தினமிரவு மீண்டும் கூடியது.

இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவை ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் அதேவேளை, தேசிய பாதுகாப்பு அமைச்சர் பதவி உருவாக்கப்பட்டு, வடக்கு - கிழக்கில் முப்படைகளின் நடவடிக்கைகள் மீதான முழு அதிகாரமும் தேசிய பாதுகாப்பு அமைச்சரிடம் அல்லது பிரதமரிடம் ஒப்படைக்கப்படும் என்று புதிய யோசனையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த யோசனையை ஆராய்ந்த மலிக் - மனோ குழுவின் கருத்து சாதகமாக அமையுமேயானால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே மற்றொரு சந்திப்பு நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, மலிக் - மனோகுழு புத்துயிர் பெறுவதற்கு முன் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென் ஜனாதிபதியையும் பிரதமரையும்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சாளம்பைக்குளம் முக்கொலை வழக்கில் எதிரியான சிப்பாய்க்கு மரண தண்டனை!

### வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கினார்

வவுனியா சாளம்பைக்குளம் முக்கொலை வழக்கில் எதிரியான இராணுவ வீரருக்கு நேற்று மரணதண்டனை விதிக்கப்பட்டது. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் இத்தீர்ப்பை வழங்கினார்.

வவுனியா மேல்நீதிமன்ற வரலாற்றில் எதிரி ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

இவ்வழக்கின் முதலாவது எதிரியான ஜெயந்த திலகபாலவுக்கு மரண தண்டனை விதித்த நீதிபதி, சிவயோகராணி என்ற பெண்ணை கடும் காயங்களுக்கு உள்ளாக்கிய குற்றத்துக்காக 10 வருட சிறைத்தண்டனையும் வழங்கினார்.

வழக்கின் 2ஆம் எதிரி ஏற்கனவே இறந்துவிட்டார்.

நீதிபதி தீர்ப்பு வழங்கும்போது நீதிமன்றத்தில் மின் விளக்குகள் அணைக்கப்பட்டு மின் விசிறிகள் நிறுத்தப்பட்டன. தீர்ப்பை அறிவித்த நீதிபதி, எதிரியிடம் கடைசி ஆசை என்ன என்று வினவினார். தான் ஒரு அரச பணியாளன் என்றும் தனக்கும் இந்த கொலைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் எதிரி கூறினார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.13

திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர்சிவப் பிரகாச தேசிக பிரம்மாசாரிய சுவாமிகள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

இந்து கலாசார அமைச்சரின் அழைப்பை ஏற்று நேற்று கொழும்பு வந்துள்ள ஆதீனம் இன்று காலை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வருகிறார். அவர் நயினை நாகபூசணி

(18ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி கையேற்ற மூன்று அமைச்சுகளின்

# அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியை இச்சபைக்கு அழைக்கும் அதிகாரம் உண்டு

### சபாநாயகரின் கருத்தால் பெரும் சர்ச்சை, குழப்பம்

ஜனாதிபதியினால் கையேற்கப்பட்ட மூன்று அமைச்சுகள் தொடர்பான சர்ச்சை நேற்று நாடாளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியை சபைக்கு அழைக்கும் அதிகாரம் தனக்கு உண்டு என்று சபாநாயகர் கூறியதாலேயே குழப்பம் ஏற்பட்டது.

பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடக அமைச்சு என்பன தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது யார்? அங்கு எழுப்பப்படும் பிரச்சினைகளுக்குப் பதில் அளிப்பது யார்? என்ற விடயங்கள் சபையில் முதலில் சர்ச்சையை ஏற்படுத்தின. இச்சர்ச்சைகள் 40 நிமிடங்கள் நீடித்தன. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான கம்ஹா மாவட்ட எம்.பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இவ் விடயங்கள் தொடர்பான பிரச்சினையைக் கிளப்பினார்.

மேற்படி மூன்று அமைச்சுகள் தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடைபெறுவதில்லை. கூட்டங்களுக்குத் தலைமை தாங்க அமைச்சரும் இல்லை. பிரதி அமைச்சரும் இல்லை. எனவே, யாராவது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இக்கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் வகையில் நிலைமையை ஏற்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி விமான நிலையத்தில் விமானங்கள் நேற்று தரையிறங்கவில்லை

யாழ்ப்பாணம், டிசெ.13

பலாலி விமான நிலையத்தில் நேற்றுக் காலை 10 மணிக்குப் பின்னர் பயணிகள் விமானங்கள் எதுவும் தரையிறங்க அனுமதிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நேற்றுக் கொழும்பில் இருந்து பலாலி நோக்கி வந்த பயணிகள் விமானங்கள் தரையிறங்காமல் திரும்பிச் சென்றன.

விமானங்கள் தரையிறங்கும் போது அவற்றிற்கு உதவி வழங்குவதற்காக விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் இயங்காமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-8)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சர்வதேச சமூகத்தின் ஆதரவு இதுபோன்று இன்னொரு தடவை கிடைக்கப்போவதில்லை!

## 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.13

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் முழு ஆதரவு வழங்கிவருகிறது. இன்னொரு தடவை இதுபோல சர்வதேச சமூகத்தின் ஆதரவு கிடைக்கப் போவதில்லை.

-இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கின்றார்.

'ரைம்' சஞ்சிகையின் பிந்திய இதழுக்கு வழங்கிய இப்பேட்டியில் தற்போதைய சமாதான சூழ்நிலை பற்றி பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

பேட்டியில் பிரதமர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ரைம்:- சமாதானப் பேச்சுக்கள் கடந்த ஏப்ரல்மாதம்முதல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. புலிகள் உண்மையிலேயே இரத்தம் சிந்துவதை நிறுத்துவதில் அக்கறையாக உள்ளனரா?

✦ ரணில்:- புலிகள் வரலாற்றில் முதல்தடவையாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். அவர்கள் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்புகின்றனர். அதற்கான வேலைகளைத் தொடங்கவுள்ளனர்.

★ரைம்:- யுத்தநிறுத்த காலத்தைப பயன்படுத்தி புலிகள் தம்மைப் பலப்படுத்திக்கொள்வார்கள் என்ற ஓர் அச்சம நிலவுகின்றதே?

✦ரணில் :- புலிகள் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பார்கள் என்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. நாங்களும இராணுவத்தைக் கட்டி எழுப்புவதற்கு அனுமதித்துள்ளோம். இது தொடர்பாக இராணுவத்தளபதிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம் அவர்கள் எந்தவொரு சூழலையும் எதிர் கொள்ளத் தயாராகவுள்ளனர்.

★ரைம்:- சமாதானத்துக்கெதிரான சக்திகளின் பலம் எந்த அளவில் உள்ளது?

✦ரணில்:- நாடு பிரிந்துவிடும் என்று எண்ணும் ஒரு பகுதியினர் சமாதானத்தை எதிர்க்கின்றனர். நாங்கள் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருகிறோம் ஆயினும, இறுதியில் அவர்களது ஆதரவையும் பெற்றுக் கொள்வோம்.

★ரைம்:- யுத்தத்தால் இழந்த பொருளாதார சீர்குலைவை இலங்கை மீளக் கட்டியெழுப்புமா?

✦ ரணில்:- இதில் கேள்விக்கே இடமில்லை.இனப்பிரச்சினை காரணமாக நாங்கள் தகவல் தொழிலநுட்பத்தின் பயன்களை இழந்து விட்டோம். ஆயினும், சந்தைப்படுத்தல்,நிதி போன்ற துறைகளில் தகவல் தொழில் நுட்ப சேவைகளை உருவாக்கியுள்ளோம் அத்துடன், மென்பொருள், வன்பொருள் சந்தை ஒன்றையும் உருவாக்கவுள்ளோம்

★ரைம்:- தற்போதைய சூழ்நிலை செல்வந்தர்களுக்கு மட்டும் நன்மை பயக்கக் கூடியதா?

✦ ரணில்:- செல்வந்தர்கள் மூலமாக சமூகத்துக்கு நன்மை பயக்க கூடிய திட்டமே தந்திரோபாயம். அதன் மூலம் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடையும் எல்லோரும் பயன் பெறுவார்கள்.

★ரைம்:- இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இது இறுதிச் சந்தர்ப்பமா?

✦ரணில்:- இம்முறை சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஆதரவு வழங்கிவருகின்றது. அடுத்த தடவை அவர்கள் பெரும்பாலும் திரும்ப வரமாட்டார்கள். (ஐ)

## மறியல் போராட்டம் இன்று நடைபெறாது

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கத்தினால மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ்.அலுவலகத்துக்கு முன்பாக இன்று நடத்தப்படவிருந்த மறியல் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

எனவே, சங்கத்தின் அங்கத்தவர்கள் எவரும் இன்று மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு வர வேண்டாம் எனவும் - போராட்டத்துக்கான புதிய திகதி பின்னர் அறியத்தரப்படும் எனவும் அவர் மேலும் கேட்டுள்ளார். (4)

## எதிரிகள் மூவருக்கு மரண தண்டனை!

அந்தானகல கொலை வழக்கில பதுளை மேல் நீதிமன்ற நீதிபதி எதிரிகள் மூவருக்கும் நேற்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். அந்த பானகலயைச் சேர்ந்த விவசாயியான கடவத்த ஆராச்சிகே குமாரசேன என்பவரை 1996ஆம் ஆண்டு மே மாதம 5ஆம் திகதி கத்தியினால் வெட்டிக் கொலை செய்தனர் என்று அதே கிராமத்தைச் சேர்ந்த மூவர் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

## வவுனியா - கொழும்பு பஸ்ஸில்

# தேநீரில் மயக்கமருந்து கலந்து பணம், கடவுச்சீட்டு அபகரிப்பு!

## வடலியடைப்பு வாசிக்கு நேர்ந்த கதி

சண்டிலிப்பாய்,டிசெ.13

வவுனியாவிலிருந்து இரவு கொழும்புக்குப் புறப்பட்ட பஸ்ஸில் பயணம் செய்த வடலியடைப்பு வாசி ஒருவர் பக்கத்திலிருந்த ஒருவர் வலிந்து கொடுத்த மயக்கமருந்து கலந்த தேநீரை உட்கொண்டதால் தமது முக்கிய உடைமைகளைப் பறிகொடுத்தார்.

கடந்தவாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இவர், வவுனியா பஸ் நிலையத்தில் தனியார் பஸ் வண்டி ஒன்றில் ஏறி கொழும்புக்கு பயணம் செய்துள்ளார். அப்போது அவருக்கு அருகில் இருந்த இருக்கையில் இருந்து வந்த நபர் ஒருவர் இவரை புத்தளத்தில் வைத்து தேநீர் பருகுமாறு கேட்டுள்ளார். வேண்டாம் என்று மறுத்தபோதிலும், அந்த நபர் இவரை விடவில்லை. மீண்டும், மீண்டும் வற்புறுத்தி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இதனை அடுத்து எதுவும் செய்ய முடியாத நிலையில் வடலியடைப்பு வாசி தேநீரை அருந்தினார் எனக் கூறப்பட்டது.

இதனால் மயக்கமுற்ற மேற்படி நபர் கொழும்பைச் சென்றடைந்ததும தனது கைப்பை மற்றும் பொதிகளைத் தேடியுள்ளார். அப்போதே அவை அனைத்தும் சூறையாடப்பட்டமை தெரியவந்தது.

தேசிய அடையாள அட்டை, மகனின் பாஸ்போட், ஐயாயிரம் ருபா ரொக்கப்பணம் மற்றும் உடுபுடைவைகள் போன்ற பொருள்களை அந்த ஏமாற்றுப் பேர்வழியிடம் பறிகொடுத்த இவர் பெரும் கவலையடைந்துள்ளார்.

இதேவேளை - அண்மையில் இளவாலை மாரீசன் கூடலைச் சேர்ந்த நபரொருவர் கொழும்பிலிருந்து யாழ். வரும் வழியில் பஸ்ஸில் வைத்து முன்பின் தெரியாத நபர் ஒருவர் கொடுத்த தேநீரை பருகியதால் தமது முக்கிய உடைமைகள் அடங்கிய பொதியைப் பறிகொடுத்துள்ளார்.

புத்தளம் வீதியில் ஆராய்ச்சிக் கட்டு என்ற இடத்தில் சக பயணி ஒருவர் இவருக்கு மயக்கமருந்து கலந்த தேநீரைக் கொடுத்ததாகவும் பின்னர் இவர் மயக்கமடைந்ததை அடுத்து உடைமைகள் சூறையாடப்பட்டதாகவும் இது பற்றி தகவல் தருகையில் தெரிவிக்கப்பட்டது.

பிரயாணத்தின்போது முன்பின் தெரியாதவர்களிடம் தேநீர், பிஸ்கட் வகைகளை வாங்குவதில் பயணிகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப் படுகின்றது. (எ-135)

## இந்திய மீனவர்களின் 7 படகுகளும் விடுவிப்பு

வவுனியா, டிசெ.13

இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப் பட்டிருந்த 7 படகுகளும் இராமேஸ்வரம் கடற்பரப்பிற்கு கொண்டு செல்லப்பட்டு விடப்பட்டதாக இராமேஸ்வரம் செய்திகள தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 27 ஆம் திகதி விடத்தல்தீவு மீனவர்களினால் 32 இந்திய மீனவர்களும், 8 படகுகளும் இலங்கை கடல் எல்லைக்குள் வைத்துக கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

பின்னர் விடத்தல்தீவு மீனவர்களினால் ஒரு படகுடன் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். எனினும்,7 படகுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

அப்படகுகளின் உரிமையாளர்கள், இலங்கைக் கடற்பரப்பில் மீண்டும் மீன்பிடிக்கமாட்டோம் என்றும், இலங்கை மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களைச் சேதப்படுத்த மாட்டோம் என்றும் உறுதி வழங்க வேண்டும் என்று விடத்தல் தீவு மீனவர்கள் கோரியிருந்தனர்.

எனினும், நேற்றுக் காலை அந்த ஏழு மீன்பிடிப்படகுகளும் இராமேஸ்வரம் கடற்பரப்பில் விடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

# குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டம் தயாரிக்க பிரதமர் பணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

குடாநாட்டு மக்களுக்கான அவசியத் தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பூர்த்திசெய்வதன்மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம் ஒன்றினைத் தயாரிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்.செயலக அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தத் திட்டத்தைத் தயாரிக்கும் போது சமூக நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வாறு தயாரிக்கப்படும் திட்டத்தினை எதிர்வரும் 2004 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் பணித்துள்ளார் என்று யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

மேற்படி திட்டத்தினைத் தயாரிப்பதற்காகத் தத்தமது பிரதேச மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்களது உடனடி கஷ்ட நிலையை நீக்குவதற்குமான செயல் திட்டத்தை 25 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ம-4)

# அம்பாறை முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று வழமைபோல அலுவல்கள்!

## ஹர்த்தால் அழைப்புக்கு ஆதரவில்லை ; பொலீஸாரின் வேண்டுகோள் ஒலிபரப்பு

சாய்ந்தமருது, டிசெ.13

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நேற்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்த போதிலும், பொலீஸாரின் வேண்டுகோள் மற்றும் உடனடி நடவடிக்கை காரணத்தால் ஹர்த்தால அனுஷ்டிக்கப்படவில்லை.

நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை நாளாகையால் இப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் கடைகள் வழமைபோன்று பூட்டப்பட்டிருந்தன. ஆயினும், ஏனைய நடவடிக்கைகளால அனைத்தும் எதுவித தடங்கலுமின்றி நடைபெற்றன. கல்முனை நகரத்திலிருந்து சகல இடங்களுக்கும் போக்குவரத்துக்கள் இடம்பெற்றன. அரச காரியாலயங்கள், வங்கிகள் என பலவும் வழமைபோன்று செயற்பட்டன.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலைக் கண்டித்து " வடக்கு-கிழக்கு முஸ்லிம இளைஞர் எழுச்சிப் பேரணி மன்றம் என்ற பெயரிலான துண்டுப்பிரசுரத்தில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபட்டும், போக்குவரத்துக்களைத் தடைசெய்தும், பரீட்சை நடைபெறும் இக்காலகட்டத்தில் மாணவர்களின் கல்விக்கு இடையூறு செய்யவேண்டாம் என்று பொலீஸார் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். இவ்வேண்டுகோள் இப்பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல் ஒலிபெருக்கிகள மூலம் நேற்றுமுன்தினம் மாலை அடிக்கடி ஒலிபரப்பப்பட்டது.

பொலீஸார் முக்கிய இடங்களில் நிறுத்தப்பட்டும், ரோந்து நடவடிக்கையில ஈடுபட்டும் ஹர்த்தால் நடவடிக்கைகளைத் தடைசெய்தனர். ஒரு சில வீதிகளில் ரயர் போட்டு எரித்து போக்குவரத்துக்களைத் தடைசெய்ய முயற்சித்தனர். ஆனால், பொலீஸார் உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டு எரிக்கப்பட்ட ரயர்களை அப்புறப்படுத்தினர். அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை.

அக்கரைப்பற்றுப் பகுதியில் வாகனப் போக்குவரத்துக்களைப் பொறுத்தமட்டில் இ.போ.ச., தனியார் பஸ் சேவைகள் நடைபெறவில்லை. ஆயினும், மக்கள் வீதிகளில் ஓடிய வாகனங்களில் தாராளமாகப் பிரயாணங்களை மேற்கொண்டனர்.

அரச திணைக்கள, கூட்டுத்தாபன அலுவலகங்கள் காலையில் திறந்திருந்தன. இருப்பினும், சில ஊழியர்கள், பெயரளவிலான ஹர்த்தாலை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டதை அவதானிக்கமுடிந்தது.

# தடுப்பு மருந்து வழங்கப்பட்டது தொடர்பாக குடாநாட்டில் ஆய்வு

## இன்று முதல் இரு நாள்கள் நடக்கும்

யாழ்ப்பாணம், டிசெ13

யாழ்.குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட தடுப்பு மருந்துகளால் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பாக இன்று முதல் இரு தினங்களுக்கு ஆய்வுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இதற்கென கொழும்பில் இருந்து தொற்று நோயியல் மருத்துவர் ரீஎஸ். ஜபீரிஸ் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். இவர்களுடன் யாழ்.தாதிகள் பயிற்சிக் கல்லூரியின் இறுதிவருட மாணவர்கள் 35 பேரும் இணைந்து செயற்படவுள்ளனர். அவர்களுக்கான பயிற்சிகள் நேற்றும், நேற்றுமுன்தினமும் வழங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட 30 இடங்களில் இவர்கள் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அண்மையில் யாழ்.குடாநாட்டில் ஜப்பான் மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்து 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்றப்பட்டது. இந்த மருந்து ஏற்றியபின்னர் ஏற்பட்டதாகக் கூறப்படும் மூச்சுத்திணறல், காய்ச்சல், வலிப்பு போன்ற அறிகுறிகளுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை ஒன்று உயிரிழந்தமையும் வேறு ஆறு குழந்தைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டமையும குறிப்பிடத்தக்கது.



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை திறந்து வைக்கப் படவிருக்கும் அறப்பணி நிலையத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

நாளை காலை 7 மணிக்கு திருவாவடுதுறை ஆதீன முதல்வர் சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் இந்த அறப்பணி நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

# கர்நாடகாவிலிருந்து வழக்கை பாண்டிச்சேரிக்கு மாற்றுங்கள்

## உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா மனு



தன் மீதான சொத்துக் குவிப்பு வழக்குகளை கர்நாடக மாநிலத்திலிருந்து பாண்டிச்சேரிக்கு மாற்ற வேண்டும் என்று கோரி தமிழக முதல்வர் ஜெயலலிதா உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செயத மனு நாளை மறுதினம் விசாரணைக்கு வருகிறது.

ஜெயலலிதா தனது மனுவில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்துக்கும் கர்நாடகத்துக்கும் இடையே நீண்ட காலமாகக் காவிரிப் பிரச்சினை நீடித்து வருகிறது. இது தொடர்பாக, உச்ச நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்தத் தவறியதற்காகக் கர்நாடக அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் தமிழகம் தொடர்ந்துள்ளது.

சந்தனக் கடத்தல் வீரப்பன் பிரச்சினை காரணமாகவும் இரு மாநிலங்களிடையேயும் சுமுக உறவு பாதிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில், கர்நாடகத்தில் நியாயமான விசாரணை நடக்க வாய்ப்பில்லை. அரசியல் சட்டப்பிரிவு 21இன் படி, நியாயமான விசாரணை என்பது, ஒவ்வொருவரின் அடிப்படை உரிமையாகும்.

அச்சம் சூழ்ந்த நிலையில், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக ஆஜராகும் சட்டத்தரணியால் சுதந்திரமாக வாதாட முடியாது. அதேபோல், சாட்சிகளும் சுதந்திரமாகப் பேசத்தயங்குவார்கள்.

பொது நீதிமன்ற வளாகத்துக்குப் பதிலாகச் சிறப்பு நீதிமன்றத்தைச் சிறை வளாகத்தில் அமைக்க கர்நாடக அரசு முடிவுசெய்துள்ளது. ஜெயலலிதாவின் பாதுகாப்புக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளது. இதன்மூலம், மனுதாரரின் கருத்து நியாயம் என்பது தெளிவாகிறது.

அதேபோல், நதி நீர்ப்பங்கீடு தொடர்பாகக் கேரளத்துடனும், சென்னைக்குக் குடிதண்ணீர் பெறுவது தொடர்பாக ஆந்திர மாநிலத்துடன் தமிழகத்துக்குப் பிரச்சினை உள்ளது.

ஆனால், சென்னையில் இருந்து 162 கி.மீ. தூரத்தில் உள்ள பாண்டிச்சேரிக்கு இவ்வழக்கை மாற்றினால், விசாரணை முறையாக நடைபெற வாய்ப்புக்கிடைக்கும். பாண்டிச்சேரியில் தமிழ் பேசப்படுவதால், அங்குள்ள நீதிபதிகளுக்கும் தமிழ் தெரியும். அங்கு ஆட்சியில் இருப்பது காங்கிரஸ். பிரதான எதிர்க்கட்சி தி.மு.க. ஆவணங்களைத் தமிழில் இருந்து மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழில் சாட்சிகள் சொல்வதை மொழிபெயர்க்க வேண்டிய நிலை இல்லை.

எனவே, விசாரணையை கர்நாடகத்திலிருந்து புதுவைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும். மேலும், கர்நாடகத்தில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கும் நடவடிக்கையை நிறுத்தவும் உத்தரவிடவேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் தமிழகக் கட்சிகளே செல்வாக்குப் பெற்றுள்ளன.

அங்கு ஜெயலலிதா வின் அ.தி.மு.கட்சிக்கும் கணிசமான செல்வாக்கு உள்ளது.

# நாடாளுமன்றத்துக்குச் செல்ல வைகோவுக்கு அனுமதி மறுப்பு



சென்னை,டிசெ.13

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நாடாளுமன்றம் செல்வதற்கு பொடா சிறப்பு நீதிமன்றம் அனுமதியளிக்கமறுத்துவிட்டது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பொது மேடையில் பேசியதால் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் வைகோ. தன்னை நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பங்குகொள்ள அனுமதிக்கக் கோரி பொடா நீதிமன்றத்தில் அவர் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவை நேற்று விசாரித்த பொடா நீதிமன்ற நீதிபதி அவ்வாறு அனுமதியளிக்க பொடா நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று தீர்ப்பளித்தார். இதுதொடர்பாக வைகோவை உயர்நீதிமன்றத்தை அணுகுமாறு நீதிபதி கூறினார்.

பொடா சட்டம் மற்றும் மறுசீராய்வுக் குழுவின்' அதிகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் தற்போது விவாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் ஜனவரி முதல் புதிய பாதுகாப்புத் திட்டம்

வெளிநாட்டுப் பயணிகள் அமெரிக்காவில் தரையிறங்கும்போது, பாதுகாப்பு ஏற்பாடுகளை வேகமாகச் செய்வதற்கு புதிய பாதுகாப்புத் திட்டத்தை அந்நாட்டு அரசு எதிர்வரும் ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தும்.

இத்திட்டத்திற்கு 'யு.எஸ்.விசிட்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலைத் தடுக்கும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் உயர்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். குறிப்பாக, கடவுச்சீட்டு மோசடி செய்து அமெரிக்காவுக்குள் நுழைபவர்களைக் கண்டுபிடிக்க இது உதவும் என்று அமெரிக்க உள்துறை அதிகாரி அஸாஹுட் சின்சன் தெரிவித்தார்.

அனைத்து விமான நிலையங்களிலும், துறைமுகங்களிலும் முதற்கட்டமாக இத்திட்டம் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி உலக வர்த்தக மைய இரட்டைக்கோபுரங்கள் தீவிரவாதிகளால தகர்க்கப்பட்டதையடுத்து பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவரும் அமெரிக்கா, தற்போது உரிய முறையில் கடவுச்சீட்டைப் பெற்று அங்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளிடமும் கடுமையாக நடந்துகொள்கிறது. இது உலக நாடுகள் மத்தியில் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்நிலையில், மேற்படிதிட்டத்தை நடைமுறைப்படுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. உரிய முறையில் கடவுச்சீட்டுகளைப் பெற்றுவரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் இந்தத் திட்டத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

### ஐரோப்பிய ஒன்றிய மாநாடு

ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய அமைப்பு விதிகள் குறித்து ஆராய்வதற்காக ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரெசெல்ஸில் கூடியுள்ளனர். இந்த மாநாட்டில் அங்கத்துவ நாடுகளின் வாக்குரிமை தொடர்பாக பலத்த விவாதம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தோழி சந்திரிகாவைத் திருப்திப்படுத்தவே புலிகள் மீது பழி சுமத்துகிறார் ஜெயலலிதா

## சிறையிலிருந்து நெடுமாறன் கண்டனம் தெரிவிப்பு

விழுப்புரம்,டிசெ.13

தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் கடத்துவதாகத் தமிழக முதல்வர் ஜெயலலிதா வீண் பழி சுமத்தியிருப்பதைக் கண்டிக்கிறார் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன்.

பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்டுக் கடலூர் மத்திய சிறையில் உள்ள அவரை, மக்கள் உரிமைக் கூட்டமைப்பு விழுப்புரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கா.பாலமுருகன் சந்தித்தார்.

அவர் மூலம் நெடுமாறன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் கடத்துவதாக ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆதாரமற்ற குற்றச்சாட்டு. இதன் மூலம் அவர் பிரச்சினையைத் திசை திருப்பும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளில் சுமார் ஆயிரம் தடவைகளுக்கு மேல் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்கியுள்ளது. 300இற்கும் மேற்பட்ட மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படைத் தாக்குதலில் பல கோடி ரூபா மதிப்புள்ள, தமிழக மீனவர்களின் படகுகள், வலைகள் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக 2001இல் அ.தி.மு.க. அரசு பதவியேற்ற பிறகு சுமார் 30 முறை தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டனர்.

இலங்கை அதிபர் சந்திரிகா, ஜெயலலிதாவின் நெருங்கிய தோழி. சென்னையில் சந்திரிகாவுக்கு வரவேற்பு அளித்தபோது இலங்கைக்கடற்படையின் தாக்குதல் குறித்து, முதல்வர் என்ற முறையில் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்திருக்கவேண்டும். ஆனால், அப்படிச் செய்யாமல் தனது தோழியைக் காப்பாற்றுவதற்காக விடுதலைப் புலிகள் மீது பழிசுமத்துகிறார் ஜெயலலிதா.

விடுதலைப் புலிகளின் கடற்படையான கடற்புலிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதன் மூலம் மட்டுமே அக்கடற் பகுதியில் போர் நிறுத்தத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும் என நோர்வே உள்ளிட்ட சில நாடுகள் வலியுறுத்துவதை சந்திரிகா ஏற்கமறுக்கிறார்.

கடற்புலிகளை ஒடுக்குவதற்கு இந்தியக் கடற்படையின் உதவியைப் பெற சந்திரிகா பலமுறை முயற்சி செய்தும் அந்தச் சூழ்ச்சி வலையில் இந்திய அரசு சிக்க மறுத்துவிட்டது. எனவே, தனது தோழியான சந்திரிகாவின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, இலங்கைக் கடற்படையும், இந்தியக் கடற்படையும் கூட்டாக ரோந்துபுரியவேண்டும் என்ற கோரிக்கையை ஜெயலலிதா முன்வைத்துள்ளார்.



அதற்காகவே விடுதலைப் புலிகள் மீது அபாண்டமான பழியை ஜெயலலிதா சுமத்தியுள்ளார்

-இவ்வாறு கூறியுள்ளார் பழ. நெடுமாறன்.

# ஈராக் இராணுவத்திலிருந்து விலகுவோர் அதிகரிப்பு

## திண்டாடுகிறது அமெரிக்கா



ஈராக் இராணுவத்தில் பணியாற்றும் ஈராக்கியர்கள் பெரும் எண்ணிக்கையில் இராணுவத்தைவிட்டு விலகி வருகின்றனர். இதனால் அமெரிக்கா திண்டாடி வருகின்றது.

ஈராக்கில் சதாம் ஆதரவாளர்களின் தாக்குதல்களால் அமெரிக்கா தலைமையிலான கூட்டுபபடையினர் அதிகஉயிர் இழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். இதனால் ஈராக்கியர்கள் அடங்கிய சுதேச இராணுவம் ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் ஈராக்கில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்காக அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னராக 40 ஆயிரம் பேரை ஈராக்கிய இராணுவத்தில் சேர்க்கும் இலக்குடன் அமெரிக்கா நடவடிக்கை மேற்கொண்டும் வந்தது. அதில் முதற்கட்டமாக 700 பேர் அடங்கிய முதல் சுதேச இராணுவப் பிரிவை ஈராக்கில் அமெரிக்கா உருவாக்கியது.

இந்நிலையில் கடந்த சில வாரங்களில் மட்டும் சுமார் 300 ஈராக்கியர்கள் இராணுவத்தைவிட்டு வெளியேறியுள்ளனர். இதனால், அமெரிக்காவின் எண்ணம் ஆட்டம் கண்டு வருவதாகக்கூறப்படுகிறது.

சமீபகாலமாக சதாம் ஆதரவாளர்கள் கூட்டுப்படையினர் மீது தாக்குதல் நடத்திப் பெரும் சேதங்களை ஏற்படுத்திவருகின்றனர்.

இது ஈராக்கிய இராணுவத்தில் உள்ளவர்களுக்கு மனரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாலும், அத்துடன், கூட்டுப்படையினர் ஈராக்கியர்களை அடக்கி ஆளவந்தவர்கள் என்ற எண்ணம் அதிகரித்துள்ளதாலும், இராணுவத்திலிருந்து விலகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# அணுத்திட்டங்கள் அடங்கிய ஆவணம் அமெரிக்க ஆய்வகத்திலிருந்து மாயம்!

அணு ஆயுதத் திட்டங்கள் அடங்கிய ஆவணம் அமெரிக்க அணு ஆயுத மையம் ஒன்றிலிருந்து மாயமானது.

பல நாடுகளின் அணு ஆயுதத் திட்டங்கள் குறித்த விவரங்கள் இந்த ஆவணத்தில் பதியப்பட்டிருந்தன.

இந்த விவகாரம் அமெரிக்க நிர்வாகத்தினர் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. கணனி டிஸ்க்குகளில் (Computer Disk ) இந்த விவரங்கள் பதியப்பட்டிருந்தன.

இது தொடர்பாக அமெரிக்காவின் சான்டாபி மாநிலத்திலுள்ள 'லொஸ் அலமோஸ்' தேசிய ஆய்வக அதிகாரி ஒருவர் கூறுகையில்:

பல நாடுகளின் அணு ஆயுதத் திட்டங்கள் அடங்கிய பத்து டிஸ்க்குகள் ஆய்வகத்திலிருந்து மாயமாகியுள்ளன. அவற்றைத் தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம்.

மாயமான டிஸ்க்குகளால் நாட்டிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. அணு ஆயுதப் பரவல் தடுப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு மையத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களே அந்த டிஸ்க்குகளில் பதியப்பட்டுள்ளன.

இது குறித்து, அரசுக்கு அறிவித்துள்ள அதேவேளை பல்வேறு துறையினருக்கும் தகவல் கொடுத்துள்ளோம் - என்றார்.

"டிஸ்க்குகள் மாயமானதை ஏற்றுக்கொள்ளமுடியாது. பாதுகாப்பில் உள்ள ஓட்டையையே இது காட்டுகிறது. இனியாவது இவ்வாறான தகவல்கள் அடங்கிய ஆவணத்தைக் கவனமாகப் பாதுகாக்கவேண்டும்" - என்று அந்த ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் பீட்டர் நாநோஸ் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ)

# அணு விஞ்ஞானிகள் இருவர் பாகிஸ்தான் பொலீஸாரால் கைது!

பாகிஸ்தான் அணு ஆய்வு மையத்தில் பணியாற்றிய இரண்டு விஞ்ஞானிகள் கைது செய்யப்பட்டனர்.

தேசத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட அவர்கள் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

பாகிஸ்தானில் முன்னணி அணு ஆய்வு மையமான 'ஹாயுடா'வில் பணியாற்றிய இந்த ஆய்வு மையத்தின் இயக்குநர் பாருக் அகமது, அவரது உதவியாளராக இருந்த ஜெனரல் ஜாஸின் சோகன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் இவர்களின் வீடுகளுக்குச் சென்ற புலனாய்வுப் பொலீஸார், இவர்களைக் கைது செய்தனர்.

ஈரான் அணு ஆயுத விஞ்ஞானிகளுடன் இவர்கள் இரகசிய தொடர்பு வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஈரானுக்கு அணு ஆயுதங்கள் குறித்த இரகசியத் தகவல்களை இவர்கள் வழங்கியிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டதை அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், ஈரானுக்கும் தமக்கும் எதுவித அணு ஆயுத உடன்பாடும் இல்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

இவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு மேற்படி ஆய்வு நிலையத்தில் பணிபுரியும் ஏனைய விஞ்ஞானிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ஐ)




## தவறிவிட்டது

வடிவேலு செல்வரெத்தினம் என்பவரது தே.அ.அட்டை (இல.470202998 V) வங்கிப் புத்தகங்கள், காசோலைப் புத்தகம், ஸ்ரீ சன்முகா தச்சுத் தொழிற்சாலை பற்றுச்சீட்டுப் புத்தகம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பிரயாணப்பை நுணாவிலுக்கும் செம்மணி வீதிக்கும் இடையில் 11-12-2003இல் தவறிவிட்டன. தயவுசெய்து இதைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

திரு.வ.செல்வரெத்தினம்
17A, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P. NO: 0777 113050

(25747)(35-12-16-32)

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் காளிகோவில் பரிபாலனசபை செயலாளர்

திரு.செ.செல்வகுமார் அவர்களின்

அன்புத் தாயார்

### திருமதி பொன்னம்மா செல்வநாயகம்

அவர்கள் 10.12.2003 அன்று காலமானதையிட்டு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் காளி அம்பாள்
ஆலய பரிபாலன சபை.

(25756)(34-12-16-32)

## எழுதுமட்டுவாழில் மாடுகள் திருட்டு அதிகரிப்பு!

தென்மராட்சி,டிசெ.13

எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலையும் மாடுகள் இனந்தெரியாதோரால் பிடிக்கப்பட்டு இறைச்சிக்காக கடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க வருவோர் அப்பகுதியில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருக்கும் மாடுகளையும் கடத்திச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த இரு மாடுகளை திருடர்கள் அபகரித்துச் சென்றனர் என்றும - அப்போது அப்பகுதி கிராம அலுவலருடன் பொதுமக்கள் துரத்திச் சென்றார்கள் என்றும் திருடர்கள் ஒரு மாட்டைக் கைவிட்டு மற்ற மாட்டைக் கடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## தொலைபேசி இணைப்பு வழங்க கோரிக்கை

சண்டிலிப்பாய்,டிசெ.13

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு தொலைபேசி இல்லாதிருப்பதால் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தித்தருமாறு யாழ்.மாவட்ட தபால் சேவை அத்தியட்சகரை இப்பகுதி மக்கள் கடித மூலம் கேட்டுள்ளனர்.

ஏழு உப தபால் அலுவலகங்களை மேற்பார்வை செய்யும் 'ஏ' தரத்திலுள்ள இத்தபாலகத்திற்கு தொலைபேசிச் சேவையை பொதுமக்கள் நலன்கருதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-135)

**O/L எடுத்த மாணவர்களுக்கான கணனி கற்கை நெறிகள்**

விசேட ஆங்கில, சிங்கள மொழி வகுப்புகள்

கணனி தட்டச்சு வகுப்புகள்

ஆரம்பம்:

14.12.2003 4p.m. (S.L.T)

**திகழ் கல்வி நிறுவனம்**

K.K.S. வீதி, இணுவில்.

(25731)(35)

## பிள்ளையார் கதை ஒலிப்பேழை

ஒவ்வொரு பிள்ளையார் கதை விரதகாரர் வீட்டிலும் இருக்கவேண்டியது.

திருகோணமலை ஆலடி விநாயகர் தேவஸ்தானம் வெளியிட்டுள்ள பிள்ளையார்கதை ஒலிப்பேழை

பாடியவர் : அருந்ததி ஸ்ரீரங்கநாதன்
கிடைக்குமிடம் : பிள்ளையார் அச்சகம் நல்லூர்
தொ.பேசி- 222 6722
விலை : ரு .175

★ பிள்ளையார் கதைப்புத்தகம் இலவச இணைப்பு.

(25761)(32-12-16)

## SERAMPORE UNIVERSITY (INDIA)
## DIPLOMA IN CHRISTIAN STUDIES

மேற்படி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இரு வருடங்களில் 10பாடங்களில் சித்திபெற்றால் போதுமானது. எவ்வித வயதுக்கட்டுப்பாடும் இல்லை என்பதோடு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

விண்ணப்பம் 24.12.2003 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

பதில் அதிபர்,
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம், சுன்னாகம்.

(25734)(32-12-16)

## மரண அறிவித்தல்

### திருமதி யோசேப் மேரி நல்லம்மா

மாதகலைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி யோசேப் மேரி நல்லம்மா அவர்கள் 10.12.2003 புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மரியமுத்து ஆகியோரின் அன்பு மகளும் யோசேப் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யஸ்ரின் யேசுதாசன், பற்றிமா ஜசிந்தா, யூலியற் றஞ்சினி, சகாயமலர், பிரின்ஸ் ஜெயராஜ் (ஜெயம்), அன்ரனி ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பற்றிக் குணநாயகம், இராசநாயகம், யூலியற் றேமன் , அருள்மலர், விஜிதா (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற யஸ்ரின், ஸ்ரலின் றொபின்சன், ஜபின் கிறிஸ்ரன் பபிலியாண்டர், மரியடென்சியா, மரியஜோசப் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.12.2003) சனிக்கிழமை காலை 10 மணியளவில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயம் (மகன்)

மாதகல் (25752)(32-12-16)



உதயன்

# அரசியல் தலைவிதி எழுதப்படும் நாள்கள்

இலங்கையின் அரசியல் விவகாரத்தில் அடுத்து வரும் நாள்கள் மிக முக்கியமானவையாக அமையப் போகின்றன.

பாதுகாப்பு, உள்துறை உட்பட மூன்று அமைச்சுக்களைத் தாமே பிடுங்கி எடுத்துக்கொண்ட ஜனாதிபதியின் நடவடிக்கை காரணமாக ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' முடிவுகிட்டும் சூழ்நிலை உறுதியாகி வருகின்றது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகார இழுபறிக்கு இணக்கத் தீர்வு காணும் முயற்சியில் இருவரின் பிரதிநிதிகளையும் கொண்ட மலிக் சமரவிக்கிரம - மனோ தித்தவெல குழு தீவிரமாக ஈடுபட்டது. இப்போது பிணக்குக்கு இணக்கத் தீர்வு எதனையும் காணமுடியாமல் கையை விரிக்கும் நிலைக்கு குழு வந்துவிட்டதாகத் தெரியவருகின்றது.

மலிக் - மனோ குழுவினர் நேற்றுமுன்தினம் இரவும கூடிக் கதைத்தனர். அப்போது ஜனாதிபதியின் சார்பில மனோ தித்தவெல யோசனை ஒன்றை முன்வைத்தார்.

சமாதான நடவடிக்கைகளை பிரதமர் கையாள்வதால் வடக்கு - கிழக்கு பாதுகாப்பு விவகாரங்களில அதிகாரங்களையும் கொண்டதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சு என்ற அமைப்பை உருவாக்கி, அதனை பிரதமர் தரப்புக்கு ஒப்படைக்கலாம் எனவும், எனினும், ஒட்டுமொத்த பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே இருக்கும் எனவும் அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், முப்படையினர் மற்றும் பொலிஸாரைக் கையாளும் அதிகாரம் தமது தரப்பிடம் இல்லாதவரை சமாதான நடவடிக்கைகளைத் தம்மால் முன்னெடுக்க முடியாது எனக் கருதும் பிரதமர், அத்தகைய அதிகாரத்தை ஜனாதிபதி கைவிட்டுக் கொடுக்காதவரை எந்தத் தீர்வுக்கும் இணங்க முடியாது என்பதில் உறுதியாக உள்ளார் என்பதை மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் கூடிய குழுவின் கூட்டம் பயனேதும் இன்றி முடிவடைந்தது.

- இவ்வாறு பயனேதுமற்ற கூட்டங்களைத் தொடர்ந்து கூட்டி, கலந்துபேசிக் கலைவதை இத்துடன் நிறுத்துவதற்கும் குழு தீர்மானித்துள்ளது.

இறுதியாக, இணக்கத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பு ஏதும் உள்ளதா என்பதைப் பரிசீலிப்பதற்காக நேற்று இக்குழுவினர் மீண்டும் கூடவிருந்தனர். அந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு சமரசத் தீர்வுகாணும் முயற்சி குறித்து வெட்டு ஒன்று துண்டு இரண்டாக முடிவு எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 49 ஆவது வருடாந்த மாநாடு இன்று கொழும்பில் நடைபெறுகின்றது. அந்த மாநாட்டுக்கு முன்னர் தற்போதைய சமரச முயற்சி தொடர்பாக ஏதேனும் ஓர் இறுதி முடிவை எடுத்துவிட வேண்டும் என்பதில் ஐ.தே.கட்சித் தலைவர்களும், பிரதமரும் உறுதியாக உள்ளனர்.

அந்த முடிவின் அடிப்படையில், அடுத்த கட்ட நடவடிக்கைகளை வகுப்பது குறித்து ஐ.தே.கட்சி மாநாட்டில் - தலைவர்கள் மட்டத்தில் - ஆராயப்பட வேண்டும் என ஐ.தே.கட்சித் தலைமை தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

எனவே, தற்போது தென்னிலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடி தொடர்பாக பிரதான கட்சிகளான ஐ.தே.கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தங்களின் அடுத்த கட்டத் திட்டங்களை வகுப்பதற்கு வசதியாக மலிக் - மனோ சமரசக் குழுவின் இறுதி முடிவு இன்றைய தினத்துக்கு முன்னர் எடுக்கப்படவிருந்தது.

ஜனாதிபதி - பிரதமர் இடையே இணக்கத்தைக் காணமுடியாது என்ற முடிவுக்கு அவர்கள் வருவது பெரும்பாலும் உறுதியாகியுமிருந்தது.

எனவே, இந்நெருக்கடியின் அடுத்த கட்டம் என்னவென்பது அடுத்து வரும் நாள்களில் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் அரசியல் போக்கின் தலைவிதியை மாற்றி எழுதும் செயற்பாடுகள் - நடவடிக்கைகள் - முடிவுகள் - இந்த நாள்களில் மேற்கொள்ளப்பட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனாதிபதி தாமே பிடுங்கி எடுத்துக்கொண்ட அமைச்சுக்களுக்கான - அடுத்த வருடத்திற்குரிய - நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதமும் அடுத்து வரும் நாள்களில் நாடாளுமன்றத்தில் இடம்பெறவிருப்பதும் இச்சந்தர்ப்பத்தில் பொருந்தி வரும் அம்சமாகும்.

அச்சந்தர்ப்பத்தில் அரசுத் தரப்பு எடுக்கப்போகும் நடவடிக்கைகளும் நாட்டின் எதிர்கால அரசியல் தலைவிதியைத் தீர்மானிப்பதில் கணிசமான பங்கை வகிக்கப் போகின்றன என்று எதிர்பார்ப்பதில் தப்பில்லை.

# காரணம் எதுவாக இருந்தபோதிலும் சிறுவர்கள் மீது பலப்பிரயோகம் கூடாது!

## சிறுவர் பாதுகாப்புக் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.13

காரணம் எதுவாக இருந்தாலும் சிறுவர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளும்போது ஆயுத அல்லது வன்முறைப்பலத்தினைப் பிரயோகிப்பது அவர்களின் உடல், உள ரீதியான ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

யாழ். மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நகர்ப் பகுதியில் கந்தர்மடத்தைச் சேர்ந்த விஜயகுமார் செல்வராசா என்ற 16 வயதுச் சிறுவன் இராணுவத்தால் சுடப்பட்டுக் காயமடைந்தார் என்று கூறப்படும் சம்பவம் குறித்து அக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் கந்தர்மடத்தைச் சேர்ந்த விஜயகுமார் செல்வராசா எனும் சிறுவன் (வயது 16) இராணுவத்தால் தாக்கப்பட்ட சம்பவம் கவலைக்குரிய ஒன்றாகும்.

போரினது தாக்கங்கள், குடும்ப வறுமை, வீட்டு வன்முறை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள்மீது, தனிப்பட்ட அல்லது அரசியல் காரணங்களுக்காக வன்முறையைப் பிரயோகிப்பது கண்டிக்கப்படவேண்டிய சிறுவர் துஷ்பிரயோகமாகும்.

காரணம் எதுவாக இருந்தாலும் சிறுவர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளும்போது ஆயுத அல்லது வன்முறைப் பலத்தைப் பிரயோகிப்பதானது அவர்களது உடல், உள ரீதியான ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சிறுவர்களது உயரிய நலன்களைக் கருத்திலெடுக்காது அவர்களை அரசியல் அணுகு முறைகளினூடாகக் கையாள்வது அல்லது கண்ணோக்குவது சிறுவர் உரிமைகள் மீறலில் மிக முக்கியமானதொன்றாகும்.

இதேவேளை, எந்தவிதப் பிரச்சினைகள் தொடர்பாகவும் சிறுவர்களைக் கையாளும்போதும், தொடர்புகொள்ளும்போதும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை மீள ஞாபகப்படுத்த வேண்டிய தேவை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிற்கு எழுந்துள்ளது.

★ சிறுவர்களை விசாரணைசெய்யவேண்டிய தேவை ஏற்பட்டால் கட்டாயமாகச் சிறுவர் நலன் தொடர்பான அதிகாரிகளான சிறுவர் நன்னடத்தை அதிகாரி, சட்ட வைத்திய அதிகாரி, பயிற்றப்பட்ட பிள்ளைகள் - பெண்கள் பிரிவுப் பொலீஸ் அதிகாரி போன்றவர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

★ சிறுவர்களை விசாரணைசெய்யும் சூழல் பிரத்தியேகமானதாயும் அவர்களுக்கு ஒப்புதல் உடையதாயும் இருத்தல் வேண்டும்.

★ மேற்படி விசாரணைகளின்போது எந்தவிதத்திலும் சிறுவர்களை உடல், உள ரீதியாகப் பாதிப்படையச் செய்யலாகாது.

இவை சிறுவர்களை விசாரணை செய்திவதில் கடைப்பிடிக்கப்படவேண்டிய அவசியமான விதிமுறைகளாகும்.

எனவே, எதிர்காலத்தில் தவறான சிறுவர் கையாளுதல்கள் நடைபெறாது கண்காணிக்கவேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட உயர் பீடங்களின் முக்கிய கடமையாகும். - என்றுள்ளது.

# அதிக சக்தி மின்பிறப்பாக்கி இருந்தும் நெடுந்தீவில் மின் விநியோகம் சீரில்லை

## அப்பிரதேசப் பொதுமக்கள் விசனம்

நெடுந்தீவு,டிசெ.13

நெடுந்தீவில் அதிகசக்தி கொண்ட மின்பிறப்பாக்கி உள்ள போதிலும், மின்விநியோகம் சீரில்லாது உள்ளது. அப்பிரதேசப் பொதுமக்கள் இவ்வாறு தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாகக் கூறப்படுவதாவது:-

யுத்தச்சூழல் காரணமாக உதவி அதிபரின் கட்டுப்பாட்டில் நெடுந்தீவு இருந்த சமயம் 148 வீடுகளுக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. பிரதேச சபை செயற்பட்ட சமயம் 156 வீடுகளுக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. 65 கிலோவாட் வலுக்கொண்ட மின்பிறப்பாக்கியின் மூலமே இந்த மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தற்சமயம் இலங்கை மின்சார சபையினர் 250 கிலோ வாட்ஸ் சக்திகொண்ட மின்பிறப்பாக்கி மூலம் நெடுந்தீவில் 36வீடுகளுக்கு மட்டுமே மின்சாரம் வழங்குகின்றனர்.

பின்தங்கிய கிராமங்களுக்கான மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் பிரதேச சபையால் மின்சாரம் வழங்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் இலங்கை மின்சாரசபை மின் இணைப்பு வழங்கியிருக்கவேண்டும். எனினும் பிரதான வீதியில் உள்ள வீடுகளுக்கு மட்டுமே மின்விநியோகிக்கப்படுகிறது.

தற்போது உள்ள புதிய மின்பிறப்பாக்கியின் மூலம் நெடுந்தீவு முழுவதற்கும் மின்சாரம் வழங்கமுடியும் என்று நம்பப்படுகிறது. ஆனால், 36வீடுகளுக்கு மட்டும் தற்போது மின்விநியோகம் இடம்பெறுவது குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

இதேசமயம் தீவின் மேற்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான மதிப்பீடுகள் குறித்த விவரங்கள் உரிய சமயத்தில் வழங்கப்படாததால் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி மீளத்திரும்பி விடலாம் எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு நெடுந்தீவு மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-111)

# பல்கலை சுற்றாடலில் கழிவகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.பல்கலைக்கழகப் பெண்கள் விடுதிச் சுற்றாடலில் குவிக்கப்பட்ட கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகச் சுற்றாடலில் குவிக்கப்பட்டிருக்கும் கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகத் தரப்பு யாழ்.மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியவற்றிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இது தொடர்பான சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

இதன்போது பல்கலைக்கழகச் சுற்றாடலில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கும் -

அவ்விடத்தில் குப்பை போடுவதைத் தடுக்கும் வகையில் அறிவிப்புப்பலகைகளை நடுவதற்கும்-

தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-9)

**நாளை**

கார்த்திகை 28
ஞாயிற்றுக்கிழமை
(14.12.2003)
திதி : பஞ்சமி
முற்பகல் 8.29 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பிற்பகல் 12.50 வரை
சுபநேரம்: 9.21-10.51
ராகுகாலம்: 4.51-6.21
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அன்புக்கும் அறிவுக்கும் மதிப்புள்ள சமூகத்தில் பெண் அடிமைத்தனம் இருக்காது.

# மருத்துவர் பற்றாக்குறையை நீக்க உலக சுகாதார நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,டிசெ.13


குடாநாட்டில் நிலவும் மருத்துவர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உலக சுகாதார நிறுவனம் உதவ முன்வந்துள்ளது.

மருத்துவர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உதவும்படி சுகாதாரத் திணைக்களம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இதற்கான உதவியை வழங்க அந்த நிறுவனம் இணங்கியுள்ளது.

இதன்படி -

அனலைதீவு, நெடுந்தீவு கிராமிய வைத்தியசாலைகளுக்கு ஒவ்வொரு வைத்தியரையும் -

மந்திகை ஆஸ்பத்திரிக்கு சத்திரசிகிச்சை நிபுணர், மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர் ஆகியோரையும் - உலக சுகாதார நிறுவனம் வழங்கியுள்ளதாகச் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் தா.சிவபாதம் தெரிவித்தார். (ஒ-3)


## மீனா பாடசாலையில் இருந்து விலகுவாளா?

✦ கல்வி கற்கும் உரிமை பெண் பிள்ளைகளுக்கு உண்டு.
✦ வீட்டில் பணப்பிரச்சினை ஏற்படும்போது பெண்பிள்ளைகளைப் பாடசாலையில் இருந்து நிறுத்துவது தான் ஒரேயொரு வழியல்ல.
✦ கிராமிய மட்ட உதவுநர்களின் உதவியுடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வேறு வழிகள் கண்டுபிடிக்கலாம்.
✦ நெருக்கடி நிலைமைகளைத் தீர்ப்பதற்கு பெண் பிள்ளைகளும் பெண்களும் உதவலாம்.
✦ பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் தகைமையைக் கல்வி அவர்களுக்கு அளிக்கிறது.
✦ கல்வி கற்கும் அடிப்படை உரிமை எல்லாப் பிள்ளைகளுக்கும் உண்டு. மதம், மொழி, இன, வகுப்பு, பால் வேறுபாடின்றி எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வியால் பல பயனடையும் உரிமை உண்டு. வளர்ந்த பின் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்குத் தேவையான அறிவையும் திறன்களையும் கல்வி மூலம் வளர்த்துக்கொள்ளும் உரிமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு.
✦ கல்வி கற்பதற்கு எல்லாப்பிள்ளைகளுக்கும் சம வாய்ப்புக் கிடைத்தல் வேண்டும். கல்விக்கான சமவாய்ப்பு வாழ்க்கைக்குத் தேவையான சம சந்தர்ப்பத்தை உருவாக்குகிறது. சமத்துவமான சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கும் அது வழி வகுக்கிறது.
✦ குறிப்பாக, பெண் பிள்ளைகளுக்கு கல்வி சமத்துவத்துக்கான முதற்படி. எல்லாத்துறைகளிலும் சந்திக்கும் பாரபட்ச நடவடிக்கைகளை எதிர்த்து நிற்பதற்குக் கல்வி அவர்களுக்கு உதவுகிறது. பெண் கல்விக்கும் பெண்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் வகிக்கும் நிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.
✦ பிள்ளைகள் பாடசாலைக்குப் போனால் மட்டும் போதாது அவர்கள் தமது கல்வியைத் தொடர்தல் வேண்டும். வறுமையினாலும் வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளினாலும் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகாது கல்வியைத் தொடரச் செய்வதன் மூலமே கல்வி கற்கும் உரிமையை அர்த்தமுள்ளதாக்கமுடியும்.



அனுசரணை:
unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-31862)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

MF 240, 49-தொடரிலக்கமுடைய ரக்டரும், பெட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி. (25709)

5 கிலோவிற்கு உட்பட்ட நிறை கூடியதும், கொழுப்பற்ற மிக மிக சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட தர மான புறொயிலர் கோழிகள் விற்ப னைக்கு உண்டு. தொடர்பு: 61, இராம நாதன் வீதி, யாழ்ப்பாணம் (மிலேனியம றெஸ்ரோறன்ற் முன்பாக). (25731)

## வீடு விற்பனைக்கு

உதவி அஞ்சலக அதிபர் வீதி, சுன்னாகத்தில் 4½ பரப்புக்காணி யுடன் கூடிய 6 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- N.சுந் தரலிங்கம், 90/4, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (25734)

## நாய் விற்பனைக்கு

5 மாதம் நிரம்பிய அல்சேஷன் ஆண் நாய் (கறுப்பு நிறம்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- A.வசந்தன், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு. (25735)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி 1Kg 130/= சுத்தம் செய்தது 1Kg 200/= மற்றும் சேவல் கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. சுத்தம் செய் தல் இலவசம். மற்றும் லயன் பொம் மெறியன் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லயன் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (25644)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: அருமைநாயகம், போயிட்டி வீதி, சித்திரமேழி, இளவாலை.(25705)

## கோழிக்குஞ்சு விநியோகம

தரமான Prima Broiler குஞ் சுகள் விலை ரூபா 42/- தொகைக்கு 40/- அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 62/- 22.12.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்யவும் (நல்லூர் வீடியோ சென்ரா வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத திரைச் சந்தையடி, நல்லூர். (25739)

பகிரா இன புறொயிலர் குஞ்சு கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P.No.: 3529, 2867. (25691)

## இசைக் குறிப்புகள்

வீணை, வயலின், ஓகன், மெலோ டிக்கா போன்ற இசைக் கருவிகளுக் கான கிறிஸ்தவப்பாடல்கள், சினிமாப பாடல்கள், பக்திப்பாடல்கள் போன்ற வற்றுக்கான இசைக் குறிப்புகள் (பாகம் 1-19) வெளிவந்துள்ளன. தொடர்பு: S.S.ரஜீந்திரன், 75,கோவில் வீதி, நல்லூர். T.P.: 0777 031293 (பதிவுத் தபாலிலும் பெறலாம்). (25728)

## வகுப்புகள்

ஆங்கிலம், சிங்களம், இலக்கணம், பேச்சுமொழி அடிப்படையில் இருந்து 01.01.2004இல் ஆரம்பம் 5ஆம் ஆண்டு, க.பொ.த.(சாத.) மாணவர்களுக்கு கல் வியங்காடு, கச்சேரியடி, திருநெல் வேலியிலும் குறிப்பிட்ட அளவில் கற்பிக்கப்படும். சனி, ஞாயிறு வகுப்பு களும் உண்டு. தொடர்பு: அ.இராஜ ரட்னம், 56, விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (25713)


# SUBRA (14)

சித்தன்கேணி

## 2006 A/L

கலை - வர்த்தக - கணித - விஞ்ஞானப்பிரிவுகள்

ஆரம்பம்

ஞாயிறு காலை 8.30 மணிக்கு 14.12.2003

எமது ஆசிரியர் குழாம்

**வர்த்தகப்பிரிவு**

பொருளியல் - ஜெயக்குமார்
வர்த்தகம் - நந்தீஸ்
கணக்கீடு - தவா. சுபேஸ்
புள்ளிவிவரவியல் - தவரேகர்

**கணித, விஞ்ஞானப்பிரிவு**

இணைந்த கணிதம் - பிரதீபன்
பௌதிகவியல் - வர்ணன்
இரசாயனவியல் - நபோன்
உயிரியல் - கஜன்

**கலைப்பிரிவு**

தமிழ் - காந்தன்
இந்துநாகரீகம் - ஸ்ரீஸ்
அளவையியல் - E.S.பவன்
நாடகம் - கணேஸ்
அரசியல் - முகுந்தன்
புவியியல் - ஐங்கரன்
இந்துசமயம் - ஸ்ரீஸ்
கிறிஸ்தவம் - லிங்கேஸ்

IQ - தவரேகர்
பொதுஆங்கிலம் - சுப்பிரமணியம்.

(C/31855)(34-21-12-13-17)

பல்கலைக்கழக கல்வியைப் பெறவிரும்பும் ஒவ்வொரு மாணவரதும் சரியான தெரிவு

**SUBRA**



யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!!

வீட்டில் இருந்தவாறே

## சுயதொழில் வாய்ப்பு



பெற்றிட 15.12.2003 இற்கு முன்னதாக உதயன் பணிமனையில் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

- மட்பானை அலங்காரம் (Pot Painting)
- கிறிஸ்ற்றல் உபகரணம் ஆக்கல் (Crystal Orna ment making
- பப்றிக் பெயின்ரிங் (Fabric.Painting)
- கிளாஸ் பெயின்றிங் (Glass Painting)
- சாறி வேலைப்பாடுகள் (Saree Works)
- மலர் அலங்காரமும் பொக்கே வடிவமைத்தலும் (Floral Arrangement)
- மீன் செதில் கைவேலை (Fish Scale Craft)
- முத்துமாலை செய்தல் (Costume Jewellery Making)

ஆரம்பம்: 16.12.2003

நேரம்: காலை 9.00மணிமுதல் மாலை 5.00 மணிவரை.
இடம்: **NIIT கீழ் தளம்,**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம.
(உதயன் பணிமனை அருகில்)

- பயிற்சி வகுப்பு 2 நாள்கள் முழுமையாக நடைபெறும்.
- முழுவதற்குமான கட்டணம் 1500/= மட்டுமே.
- வயதெல்லை இன்றி ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றலாம்.
- அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை. எனவே

"குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற்றிட அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்".

மேலதிக விவரங்களுக்கு:-
021-2222330, 021-2227030, 077-6167729

பங்குபற்றுபவர்களுக்கு தகுதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

அழகுக்கலை நிபுணர்
**திருமதி மிதுனா ஆனந்தரமணன்,**
Dip.in.Cosmetology, Bridal Dressing, Hair dressing, Cum Therapast (India & SriLanka).
(C/31842) (34-21-13-17)





## பிறந்ததின வாழ்த்து

தொல்புரம் மத்தியைச் சேர்ந்த
திரு.திருமதி அரியபுத்திரன் - யோகேஸ்வரி
தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி பிரகாஜினி

தனது ஐந்தாவது பிறந்த தினத்தை இன்று (13. 12. 2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் வெகு குதூகலத்துடன் விமரிசையாகக் கொண்டாடு கின்றார்.

பிரகாஜினியை அப்பா, அம்மா, அப்பம்மா பர மேஸ்வரி, பெரியண்ணா நிஷாந்தன், சின்னண்ணா ஜசிந்தன், தங்கத்துரைச் சித்தப்பா, கிருஷாச் சித்தி, பிரான்ஸில் இருக்கும் தேவாச் சித்தப்பா, வதனிச் சித்தி, குமரு மாமா, காரைநகர் நேசன் மாமா, அத்தை, மச்சாள், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் விநாயகப்பெருமானதும் ஆதிமுத்துமாரி அம்மன தும் அருளோடு சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்போடு வாழ்த்து கின்றார்கள்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

-ந. அரியபுத்திரன்.
(தந்தை)

சிற்றூர்தி சேவைச் சங்கம், வடமராட்சி

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்திற்கு சமயாசமய நேரக்கணிப்பாளர்கள் தேவைப் படுகின்றனர். க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தி எய்தியவர் கள் 20.12.2003இற்கு முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

(C/31852)(35-21-17-13) - செயலாளர்

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 - 03 - 1941



விண்ணில் 26 - 11 - 1991

### அமரர் செல்லத்துரை கனகசபாபதி

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்)

திதி: 13-12-2003

புனித வாழ்வினில் புண்ணிய சீலராய்த் திகழ்ந்து!
உலகினில் மனிதரில் மாணிக்கமாய்
மாண்புடன் வாழ்ந்தீரே!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (25727)(21-17-13)

## நெஞ்சில் நீங்கா 2ஆம் ஆண்டு நினைவலை

மண்ணில் 20 - 06 - 1922



விண்ணில் 05 - 12 - 2001

### திருமதி முருகேசு தங்கம்மா

திதி: 13-12-2003

மண்ணதை விட்டேகி ஆண்டிரண்டு ஆனதம்மா!
ஆறுமா எம் துயர்? மாறுமா எம் காயங்கள்?

ஓம் சாந்தி!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

111/13, இராஜசிங்கம் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/31856)(21-17-13)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 - 07 - 1936



மறைவு 13 - 11 - 2003

### திருமதி சிவகுரு அன்னம்மா

13-11-2003 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத தலைவியின் மரணச் செய்திகேட்டு பல வழிகளிலும் உதவி செய் தோருக்கும், தொலைபேசி மூலம் மற்றும் நேரில் வந்து அனுதாபந் தெரிவித்தோருக்கும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதனுடன் இன்று (13-12-2003) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந் திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளு மாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

ஐயாகடையடி,
மீசாலை மேற்கு, மீசாலை. (25732)(35-21-17-13) -குடும்பத்தினர்.

# நிதியை ஒரு சமூகத்துக்கே ஒதுக்குகிறேனா? நிரூபித்தால் பதவியைத் துறப்பேன்!

## நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஹக்கீம் சவால்



கிழக்கு அபிவிருத்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நான் ஒரு சமூகத்துக்கே செலவிடுகிறேன் என்ற குற்றச்சாட்டை நிரூபித்தால் எனது அமைச்சுப் பொறுப்புக்களை ராஜினாமாச் செய்வேன். முடிந்தால் அதனை நிரூபியுங்கள் என்று துறைமுகங்கள் அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசுகையில் சவால் விடுத்தார்.

தனது அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தின்போது இந்தச் சவாலை விடுத்த அவர் மேலும் கூறியதாவது:-

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு பிரதேச சபைக்கும் அங்குள்ள இனவிகிதாசாரப்படி கிழக்குப் பிராந்திய அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட 30 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ள தேசிய மலாத் விழாவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் பகுதி முஸ்லிம் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒரு சமூகத்துக்கே செலவிடப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.சிவாஜிலிங்கம் பிரதமரிடம் முறையிட்டுள்ளார். கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தலைமையில் சென்ற குழுவே இவ்வாறு முறையிட்டுள்ளது. இதையிட்டு நான் கவலையடைகின்றேன். மேலும் மீன்பிடி அபிவிருத்தி துறைமுகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை தம்மிடம் ஒப்படைக்கும்படியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தூதுக்குழுவினர் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருமலை மாவட்ட பொ.ஐ.முன்னணி எம்பியான எம்.ஜே.டி.எஸ். குணவர்த்தன, அம்பாறையில் பிரதமர் கலந்துகொண்ட கூட்டமொன்றில் பேசினார். அவரும் கிழக்கு அபிவிருத்திக்கான நிதி, ஒரு சமூகத்துக்கே செலவிடப்படுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். நான் இனரீதியாகச் செயற்படவில்லை.

ஒரு சமூகத்துக்கே நான் நிதியைச் செலவிட்டேன் என்பதை நிரூபித்தால் நான் எனது அமைச்சுப் பொறுப்புக்களை ராஜினாமாச் செய்வேன் என்று மீண்டும் அறுதியிட்டுக் கூறுகிறேன்.

- இவ்வாறு அவர் சொன்னார்.



**வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சிறந்த முதியோர் பகல் பராமரிப்பு நிலையமாக காரை. மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையம் தெரிவு செய்யப்பட்டமையிட்டு அதற்கான கேடயத்தையும், சான்றிதழையும் காரைநகர் பிரதேச செயலர் வே. சாம்பசிவம், நிலையத்தின் ஸ்தாபகரான கிராம அலுவலர் கே. சிவலிங்கத்திடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். காரைநகர் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.அழகேந்திரனும் படத்தில் காணப்படுகின்றார்.**

*(படம்: காரைநகர் செய்தியாளர்)*

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு வாரத்தில் 15மிதிவெடிகள், 3குண்டுகள், ஷெல்கள் மீட்பு!

மட்டக்களப்பு,டிசெ.13

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நாலாம் திகதி முதல் நேற்றுவரை வெவ்வேறு இடங்களில் 15 மிதிவெடிகளும், மூன்று 81 எம்.எம்.ரக குண்டுகளும், வெடிக்காத பல்வேறு வகையான மோட்டார் ஷெல்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் குரு தேவராஜன் தெரிவித்தார்.

குறிஞ்சாமுனை என்ற இடத்தில் யூ.எக்ஸ்.ஓ.ரகத்திலான குண்டொன்றும், அதே இடத்தில் விமானத்திலிருந்து வீசப்பட்ட வறள் ரக குண்டொன்றும் கிணற்றுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வெல்லாவெளி, மயிலந்தனை, மகாவலிதென்ன, வந்தாறுமூலை, பெரியபுல்லுமலை, வவுணதீவு, குறிஞ்சாமுனை போன்ற இடங்களிலேயே இக்குண்டுகளும், மிதிவெடிகளும் கண்டெடுக்கப்பட்டன என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

# பலாலி ஆசிரிய கலாசாலையை இடம்மாற்றுவது குறித்து ஆராயக் குழு

## நேற்றுமுன்தினம் யாழ். வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.13

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இயங்கும் பலாலி ஆசிரிய கலாசாலையை இடம்மாற்றுவது குறித்து ஆராய மூவர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளது.

கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராசா தலைமையில் வந்துள்ள இக்குழு பலாலி ஆசிரிய கலாசாலையை கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றுவது தொடர்பாகவும் - அதற்கான வாய்ப்புக்கள், வசதிகள் தொடர்பாகவும் நேற்று ஆராய்ந்தது.

இதுவிடயமாக, ஆசிரிய கலாசாலை அதிகாரிகள் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுடனும் அக்குழு கலந்துரையாடியுள்ளது.

முத்துத்தம்பி வித்தியாலய நிர்வாகம், பாடசாலைக் கட்டடத்தை மீளக் கையளிக்கும்படி கோரியதை அடுத்தே, பலாலி ஆசிரிய கலாசாலையை இடம் மாற்றுவது குறித்து ஆலோசிக்க இந்தக் குழு வருகை தந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

# குடாநாட்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு நாடாளுமன்றில் மாவை எம்.பி. கண்டனம்

யாழ்.நகரில் 'சுழநாதம்' பத்திரிகை விற்றுக்கொண்டிருந்த இளைஞன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட அடாவடித்தனத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். நானும் அமைச்சர் மகேஸ்வரனும் அங்கு இருந்திருந்தால் மக்களுடன் சேர்ந்து கண்டனப் போராட்டத்தில் கலந்துகொண்டிருப்போம்.

கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

மாவை எம்.பி. பேசும்போது அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வர் எழுந்து பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கைகளிலேயே தற்போது இருக்கின்றது. நாடாளுமன்ற விவகார அமைச்சர் என்ற வகையில் உங்கள் கருத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வேன் என்று கூறினார்.

மாவை எம்.பி. தொடர்ந்து பேசுகையில், யாழ்.குடாநாட்டில் விளையாட்டு விழாவை நடத்தமுடியவில்லையே என்று விளையாட்டுத்துறை அமைச்சர் கவலை கொண்டுள்ளார். புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சு ஸ்தம்பித்ததால் இந்த விளையாட்டு விழா தடைப்பட்டது.

மட்டக்களப்பில் விளையாட்டுத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கும்போது வெளிமாவட்டத்திலுள்ளவர்கள் விளையாட்டுத்துறைப் பயிற்சியாளர்களாக அங்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்தும் அமைச்சர் கவனம் செலுத்தவேண்டும் -என்றார். (ஐ)




**ஊனமுற்றோர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் தொண்டர்களுக்கான பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த வடமராட்சி பிரிவு தொண்டர்களில் ஒருவருக்கு மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.**

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# பாடசாலைகளை அண்டியுள்ள படை முகாம்களை அகற்றுக!

## கல்விக் கழகப் பொறுப்பாளர் கோரிக்கை

உயர் பாதுகாப்பு வலயங்களில் பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றுவதற்குப் பயன்தரக்கூடிய நடவடிக்கைகளை சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார நிறுவனங்கள் மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன்.

நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி ஆய்வுப் பட்டறைக்கு அவர் அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தாயகத்தின் வடபகுதியில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இயங்கி வந்த 40 பாடசாலைகளில் 17 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எஞ்சிய 23 பாடசாலைகள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக இயங்கிவருகின்றன.

20 பாடசாலைகள் இராணுவ முகாம்களால் சூழப்பட்ட நிலையில் இயங்கிவருகின்றன. இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் நினைக்கமுடியாத அளவுக்கு அச்சத்துடனும் சஞ்சலத்துடனுமே பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். இந்த நிலை தொடர்கின்றமையானது குழந்தைகளின் அடிப்படை மனித உரிமைகளை மறுக்கின்ற செயலாகும்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# மிலேனியம் சிற்றி வீடு முற்றுகை: சட்டவிரோதச் செயல் என அறிக்கை

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு

கொழும்பு,டிசெ.13

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் இராணுவப் புலனாய்வுத்துறையினர் பயன்படுத்தி வந்த வீட்டை பொலிஸார் முற்றுகையிட்டமை சட்டத்துக்கு முரணான செயல் என்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துருகிரியவில் இரகசியமாக இயங்கி வந்த இராணுவப் புலனாய்வுத் துறையினரின் வீட்டை பொலிஸ் உயர் அதிகாரிகளின் பணிப்புரையின்றி பொலிஸ் அத்தியட்சகர் குலசிரி உடுகம்பொல தலைமையிலான குழுவினர் தான்தோன்றித்தனமாக முற்றுகையிட்டு அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றியமை சட்டத்துக்கு முரணான செயல் எனவும் -

அந்த இரகசிய வீடு பற்றிய தகவல்களை இராணுவ அதிகாரிகளே பொலிஸாருக்கு வழங்கினர் என்பது தெரிய வந்துள்ளதாகவும் - அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற காலத்திலேயே இந்த முற்றுகை இடம்பெற்றது. கேணல் பி.பி. தஹநாயக்கா, கேணல் பத்மசிறி உடுகம்பொல ஆகிய இராணுவ அதிகாரிகளே இந்த வீடு பற்றிய தகவல்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்துக்கு வழங்கியிருந்தனர் என்றும் - அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொள்வதற்காக இந்த இரகசிய வீட்டில் திட்டம் தீட்டப்பட்டு வருவதாகத் தவறான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன என்றும் - அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்குத் தனிப்பட்ட ரீதியில் செல்வாக்கை பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே இப்படியொரு செயலில் இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் ஆழமாக ஊடுருவித் தாக்கும் இராணுவ அணியின் பிரதான தளமாக இந்த வீடு இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எந்தவொரு யோசனைக்கும் ஒத்துழைப்பில்லை; தேசிய அரசு முயற்சியை இன்னும் கைவிடவில்லை

## வர்த்தக சமூகத்துடனான சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா

ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சுக்களின்போது, நாட்டின் நலன் கருதி நான் முன்வைத்த எந்தவொரு யோசனைக்கும் பிரதமரின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. ஐ.தே.கவுடன் இதுவரை நடத்தப்பட்ட பேச்சுக்களில் எந்தவொரு பலனும் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

தேசிய வர்த்தக சமூகத்துடனான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அப்போது ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

பிரதமருடன் கடைசியாக இரண்டு மணிநேர பேச்சுக்களில் ஈடுபட்டபோதும் தெளிவான ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியவில்லை. "நாம் சிறிது காலம் இணைந்து அரசு அமைப்போம்", "தேர்தல் ஒன்றின் போது விலகிவிடுவோம்" என்று நான் பிரதமரிடம் தெரிவித்தேன். தங்களின் அதிகாரம் குறைந்துவிடும் என்ற காரணத்தினால் ஐ.தே.க. இதனை விரும்பவில்லை. அவ்வாறானால் சமாதான தேசிய அரசு அமைக்கவும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருகின்றோம் எனத் தெரிவித்தேன். அதற்கும் இன்னும் நேரடியான பதில் தரப்படவில்லை; அதற்கும் விருப்பமில்லை போலும்.

தேசிய அரசு அமைக்கும் முயற்சியை நான் இன்னும் கைவிடவில்லை. தொடர்ந்து முயற்சி செய்கின்றேன். குறுகிய காலத்துக்குள் தீர்மானம் எடுக்கவேண்டும். இந்த ஸ்திரமற்ற தன்மை நாட்டுக்கு உகந்தல்ல. என்னால் புலிகளுடனான பேச்சுக்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இது பச்சைப் பொய். புலிகளுடனான பேச்சுக்கள் மார்ச் மாதம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. நான் பொறுப்பேற்றிருந்த பாதுகாப்பு அமைச்சை மீண்டும் வழங்க என்னால் முடியாது. சட்டரீதியாக வழங்க முடியாத அமைச்சு ஒன்றை தற்காலிகமாகவே நான் அரசுக்கு வழங்கியிருந்தேன்.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

# குண்டூசியை விழுங்கிய மாணவன் ஆஸ்பத்திரியில்

தவறுதலாக குண்டூசியை விழுங்கியதாகக்கூறி மாணவன் ஒருவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாயினுள் குண்டூசியை வைத்துக்கொண்டு படுத்திருந்து படித்துக்கொண்டிருந்த போதே இந்த மாணவன் குண்டூசியை விழுங்கியதாகக் கூறப்பட்டது.

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் பிரசாந்த் (வயது10) என்ற மாணவனே இவ்வாறு குண்டூசியை விழுங்கியவர் என்று தெரிவித்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.(எ-117)


## நூல்கள் விற்பனைக்கு

சகலரும் அறிந்திருக்க வேண்டியது
இலங்கை மீன்வளம் - பயன்படுத்தலும் அபிவிருத்தியும்

சகலரும் செய்யவேண்டியது
கால்நடை அபிவிருத்தி - இலங்கைத் தமிழர் பிரதேசம்

ஆசிரியர் - கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை
பி.ஏ., எப்.சி.ஏ., பட்டயக்கணக்காளர்

விலை: பிரதி ரூ.100/-

கழிவு: 10 பிரதிகளுக்குமேல் வாங்குபவர்களுக்கு 20%

கிடைக்குமிடம்:
மேர்ச்சன்ற் பிலான்ஸ் லிமிட்டெட்,
555, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
திங்கள் - வெள்ளி
காலை 9 - 12 மணிவரை. (24935) (34-21-12)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 29 - 04 - 1969
விண்ணில் 24 - 12 - 2002

அமரர் சதாசிவம் சுதாகரன்

(உதயசூரியன் விளை.க.முன்னாள் தலைவர்)

பாசத்தின் வித்தாய் பண்பின் உறைவிடமாய்
பார் போற்றும் உத்தமனாய் வாழ்ந்த என் ஒளி விளக்கே!
பல காலம் வாழ்வீரென நாமிருக்க பாதியிலே பிரிந்து சென்றதேனோ?
பாரினில் நாம் பரிதவிக்க காலனவன் கவர்ந்து விட்டான்
ஓராண்டு நாள்கள் உருண்டோடி விடினும்
என் கண்ணீரோ வற்றாது
காலமெல்லாம் உன் நினைவில்
வாழ்ந்திடுவோம் இப்பாரினிலே!

துன்பளை கிழக்கு,
பருத்தித்துறை.

உம் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர். (25630)(25-12-34-21)

## நீங்கா நினைவில்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

7 ஆம் ஆண்டு | 31 ஆம் நாள்



உதயம் 03 - 12 - 1928
அஸ்தமனம் 28 - 12 - 1996



உதயம் 16 - 05 - 1936
அஸ்தமனம் 12 - 11 - 2003

மு.ஆ.பிறேமதாசா | திருமதி பிறேமதாசா மேரி யோசேப்பின்

அன்புக்கோர் அணிகலனாய் அவனிதனில் வாழ்ந்தீர்கள்
இன்று உம் நினைவால் நெஞ்சம் உருகுகின்றோம்
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டு மறையாது.

12.11.2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி அறிந்து விரைந்து வந்து உதவி செய்த அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, தபால்மூலம் அனுதாபம் கூறிய வெளிநாட்டு, உள்நாட்டு உறவினர்கள், நண்பர்களுக்கும் இறுதியாத்திரையில் கலந்துகொண்டு மலர்வளையம் சாத்தி பல வகையிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (13.12.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 4, கப்சேர் கிழக்கு ஒழுங்கை,
சண்டிக்குளி. (சி-31839) (25-21-12-34)

உங்கள்நினைவில் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஈ.பி.டி.பி. அமைப்பாளர் காலமானார்

யாழ்ப்பாணம்,டிசெ.13

ஈ.பி.டி.பி. அமைப்பின் கோப்பாய் தொகுதி அமைப்பாளர் யு.எல்.ஏ.ரவி (வயது 32) நேற்று முன்தினம் காலமானார்.

இவர், ஆஸ்மா நோயினால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் உப தலைவரான இவரது இயற் பெயர் உமர் லெப்பை அப்துல் சலீம். இவர் ஏறாவூர் வீரக்கேணி என்ற இடத்தைச் சேர்ந்தவர். இவருக்கு மனைவியும் மற்றும் ஒரு பிள்ளையும் உள்ளனர்.

இவரது சடலம், ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. இதனை ஒட்டி ஸ்ரான்லி வீதியில் ஈ.பி.டி.பி. அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் கறுப்புக் கொடிகள் மற்றும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. சோக கீதமும் இசைக்கவிடப்பட்டிருந்தது. (ஐ-9)


| Available Canon NP1215 Parts | |
|---|---|
| OPC Drum | C 1200.00 |
| Cleaning Blade | C 400.00 |
| Drum Unit | K 8000.00 |
| Developer Unit | O 9900.00 |
| Developer Cylinder | C 3750.00 |
| Developer Spacer | O 450.00 |
| Developer Bearing | O 400.00 |
| Developer Seal | O 75.00 |
| Heater Roller | C 800.00 |
| Heater Roller Bush | O 650.00 |
| Oil Roller | C 400.00 |
| Separation Claws | K 125.00 |
| Lower Roller | K 1500.00 |
| Thermister | O 1000.00 |
| Thermo Switch | O 1000.00 |
| Springs | K 20.00 |
| Heater Roller Gear Set | C 900.00 |
| Main Motor Gear Set | C 900.00 |
| Paper Path Belt Set | C 800.00 |
| Heate Lamp | C 650.00 |
| Exposer Lamp | C 550.00 |
| Exposer Cable | C 600.00 |
| Scanner Cable | C 500.00 |
| Toner Cartridge | C 500.00 |
| Toner Bag | C 400.00 |
| Panel Sticker | C 400.00 |
| Top Sticker | C 250.00 |
| T.C.Assembly | C 2750.00 |
| Mirrors (Any) | O 2000.00 |
| D.C. Board | O 7500.00 |
| Power Supply Board | O 5000.00 |
| H.V.T.Board | O 6000.00 |
| A.V.R. Board | O 4000.00 |
| Cooling Fan | O 5000.00 |
| Main Motor with wheel | O 7000.00 |
| Fully Recon Machine | 55,000.00 |

ORIGINAL (O)
KATUN (K - USA)
COMPATIBLE (C)
Over 2,000.00 Purchase 1 Calendar
Over 10,000.00 Purchase 5%Dis.
Over 50,000.00 Purchase 10%Dis.

PEACE LANKA (PVT)LTD
No.26, Castle lane, Colombo - 04
2582320, 2586479,
0722 - 263778.



## சிறுவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி
CHILDREN'S PROGRAM

இவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

Duiration 3 Months

2003 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
பயிற்சி ஆரம்பம் 20.12.2003 02.01.2004

சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி - 2004
விண்ணப்பப் படிவம்
முழுப் பெயர் :..................
முகவரி :..................
..................
பிறந்த திகதி :..................
மேலே தரப்பட்ட விபரம் உண்மை யெனவும் J.T.I விதிமுறைகளுக்கேற்ப நடப்பேனெவும் இத்தால் கையொப்பம் இடுகிறேன்.
.............. திகதி
விண்ணப்பதாரரின் கையொப்பம்

Course Contents
Introduction, Word XP,
Excel XP, Power Point XP,
Encyclopedia,
Games & Drawings

பதிவாளர்
இல. 07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.
e-mail : jti@sltnet.lk T.P: 0777-292127



இழந்த சக்தியை மீண்டும் பெற டாக்டர்கள் சிபார்சு செய்வது
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்!
என்று கேட்டு வாங்குங்கள்!
Packed By:
Royal Industries, Colombo.
☎ 0112334603





ஏகவிநியோகத்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567


## JESUS LIVES

## இயேசு ஜீவிக்கிறார்

சர்வதேச சுவிசேஷ ஊழியர்



இம்மையில் 14 - 01 - 1949
மறுமையில் 28 - 10 - 2003

கலாநிதி சகோ.இராஜேந்திரம் ஐயா
அவர்களின் மறுமையின் ஆராதனை

காலம்: 14.12.2003

தற்காலிக இடம்:
இயேசு ஜீவிக்கிறார் கிளை ஆலயம்.
பருத்தித்துறை வீதி.
பொலிகண்டி.

இயேசு ஜீவிக்கிறார்.
திக்கம் சந்தி - அல்வாய் மேற்கு.
அல்வாய்-வடமராட்சி. யாழ்ப்பாணம்.

நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்
கொண்டேன். IIதிமோத்தேயு 4:7. (21-12-34) (25474)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா செல்வநாயகம்

*(இளைப்பாறிய ஆசிரியை, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)*

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா செல்வநாயகம் 10.12.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ப.சி.செல்வநாயகத்தின் அன்பு மனைவியும் திருமதி வி.பொன்விழி (சுவிஸ்), செல்வக்குமாரன் (ஓம்னி மெற்றல் உரும்பிராய்), திருமதி லோ.மலர்விழி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் விக்னேஸ்வரராஜா (சுவிஸ்), யசோதா (ஆசிரியை, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), லோகேஸ்வரன் (பிரபல வர்த்தகர் கொழும்பு, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாதங்கி, மதுராங்கி (சுவிஸ்), செந்தூரன்(பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய மாணவன்), ஜெனனி(யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி), கஜானன் (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவன்), சரண்யா, ஆஷா(சர்வதேச பாடசாலை, கொழும்பு மாணவிகள்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.12.2003) சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம். (25707) (25-21-12-34)

தகவல்:
கணவர்: ப.சி.செல்வநாயகம்
மகன்: செ.செல்வக்குமாரன்.

# சந்திரிகா – ரணில் இடையே பிணக்கு
# பிரபாகரனுக்கே சிறந்த வாய்ப்பு!

**தற்போதுள்ள நிலையில் பொதுத்தேர்தல் அவசியம்தானா? அப்படி ஒரு தேர்தல் நடைபெற்று நாடாளுமன்றத்தில் கட்சிகளின் நிலைமையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படாவிட்டால் அதாவது மீண்டும் ஐ.தே.முன்னணி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றினால் ஜனாதிபதி என்ன செய்வார்? இவை குறித்து 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஜனாதிபதியால் மூன்று முக்கிய அமைச்சுக்கள் கையேற்கப்பட்ட நிகழ்வானது, ஓர் அரசியல் சதியென்பதே சிலரது கருத்தாகவுள்ளது. சிலர் அதிகாரப் போட்டியின் பலாபலனே இது எனக் கருதுகின்றனர். பிறிதொருசாரார் நிறைவேற்று அதிகாரத்திற்கும் அரசமைப்பு அதிகாரத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதலே இதுவெனக் கருதுகின்றனர். இத்தகைய கருத்து மோதல்களின் மத்தியில் ஜனாதிபதி நாட்டைச் சிக்கலான நிலைக்கு உள்ளாக்கியுள்ளார் என்று அவர் மேல் குற்றவிசாரணைப் பிரேரணையை முன்வைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேசமயம் நீதிமன்றத் தீர்ப்பொன்றுக்கு விரோதமாகத் தவறான சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசருக்குக் குற்றவிசாரணைப் பிரேரணையொன்றை சமர்ப்பிக்க முயன்ற தமது செய்கையினால் அரசுத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் அடங்கிய குழுவினரே இக்குழப்பத்திற்கு வழிவகுத்துள்ளனர் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

## பெரும் நிழல்

இவற்றை நோக்கும்போது அனைத்தும் உண்மை போன்றே தோன்றுகின்றன. அவற்றுள் சில உண்மையைப் போன்று தோற்றமளிக்கும் பொய்களாகும். எவ்வாறாயின் இவையனைத்துக்கும் பின்னால் பெரும் நிழலொன்று உள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றிய புதுமையான அரசமைப்பு முறையே அதுவாகும். நாட்டிலுள்ள பெரும்பாலான புத்திஜீவிகள் இந்த அரசமைப்பின் நிழலைக் கூடத் தூற்றுகின்றனர். தற்போது பட்டிதொட்டி எங்கும் முக்கியமாகப் பேசப்பட்டு வருவதும் அரசமைப்பு முறை பற்றியேயாகும். இச்சந்தர்ப்பத்தில் முன்னெப்போதோ, பொதுவுடைமைவாதி கார்ல்மாக்ஸ் தெரிவித்துள்ள கருத்தொன்றை ஞாபகப்படுத்துவது உகந்ததாக அமையும்.

"விளக்கின் நிழலோடு, போரிடாதீர்கள். அதைவிட விளக்கை அணைத்து விடுங்கள்" இதுவே கார்ள்மாக்ஸின் கூற்றாகும்.

ஆயினும், இன்றுள்ள அரசமைப்பு முறையை மாற்றியமைப்பதன் மூலம் விளக்கை அணைத்துவிட்டுப் புதிய விளக்கொன்றை ஏற்றி வைப்பதற்கு எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை. குறைந்த பட்சம் நாட்டிலுள்ள சகல துறைகளும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பி. கூட அதைப்பற்றி உணர்வதாக இல்லை.

## அதிகார அரசியல்

அதிகார அரசியலின் தன்மை அத்தகையதே. எம்மைவிட நாடுதான எமக்கு முக்கியம் என்று வெளியே கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகள் உள்ளுக்குள் 'எமக்குப் பிறகே நாட்டின் நலன்' என்ற நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

இப்பிரச்சினை மிகுந்த அரசியல் நிலையைச் சமப்படுத்துவதற்கு தேசிய இணக்கத்துடனான ஒருங்கிணைந்த அரசொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி முன்வந்தார். அதற்கான பேச்சுகள் பிரதமரோடு சிலதடவைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், 129 நாடாளுமன்ற அங்கத்தவர்களின் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள தலைவரென்ற வகையில் இணைந்த அரசை உருவாக்க அல்ல, பதிலாக ஐ.தே.முன்னணி அரசை உருவாக்கவே மக்கள் அங்கீகாரம் அளித்துள்ளனர் என்று பிரதமர் வாதிடுகின்றார். இணைந்த அரசை உருவாக்க விரும்பும் ஒருவர் தமது அரசுடன் இணைந்து பொறுப்புக்களைப் பகிர்ந்துகொண்டு செயற்படுவதற்கு எந்தவிதத் தடையுமில்லையென்று பிரதமர் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளார். தற்போது இக்கருத்துவாத விவாதங்களை உருவாக்கும் தலைப்பாக மாறியுள்ளது. இவையனைத்தும் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் தன்னுடன் கலந்தாலோசிக்காது கையேற்றுள்ள மூன்று அமைச்சுகளும் மீண்டும் அரசிடம் கையளிக்கப்பட வேண்டுமென்பதே பிரதமரின் அபிப்பிராயமாக உள்ளது.

ஆயினும், பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் ஒருபோதும் மீண்டும் அரசிடம் கையளிக்கப்படமாட்டாது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும். அதேவேளை, உள்விவகார அமைச்சின் கீழுள்ள பொலீஸ் சேவையும் பாதுகாப்பு சம்பந்தப்பட்டதுதான் என்பதும் ஜனாதிபதியின் வாதமாகும். எஞ்சியுள்ள அமைச்சுக்களின் பொறுப்புக்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்வதற்குத் தாம் தயாராக உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## வேறு யோசனைகள்

இதற்கிடையில் மேலும் பல யோசனைகளும் அரசின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பிரதிப் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பை அரசு ஏற்க வேண்டுமென்பதும் ஒரு சாராரின் கருத்தாகும். ஜனாதிபதியும் கொள்கையளவில் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்புக்கான பொறுப்பு ஜனாதிபதியிடமும் புதிதாக உருவாக்கப்படும் தேசிய பாதுகாப்புத்துறை அரசிடமும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. இதற்கிடையில், அரசின் யோசனையாகப் பிரெஞ்சு அரசினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைக்கு அமையப் பாதுகாப்பு அமைச்சை அரசிடம் கையளித்து தேசியப் பாதுகாப்பு சம்பந்தமான சகல முக்கிய தீர்மானங்களையும் மேற்கொள்ளக்கூடிய உயர்பாதுகாப்புச் சபையொன்று ஜனாதிபதியின் தலைமையில் அமைக்கப்படவேண்டுமென்பதாகவுள்ளது. அதன்மூலம் இரு பகுதியினரும் பாதுகாப்பு சம்பந்தமான பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமென்பதே பிரதமரின் கருத்தாகும்.

இவை அனைத்திற்கும் மத்தியில் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வது சம்பந்தமான நடைமுறையொன்றை அமைத்துக்கொள்வதற்கான தேவையும் இருசாராருக்

**- சரா -**

கும் ஏற்பட்டுள்ளது. அது சம்பந்தமாக ஏதாவதொரு உயர்நிலை கொண்ட சபையொன்று அமைக்கப்பட வேண்டுமென்பதும் அதன்மூலம் சமாதான முயற்சிகளுக்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதும் ஒருசில அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும். கடந்த காலங்களில் சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்பட்டு வந்துள்ள தேசிய பௌத்த குருமார் சம்மேளனம் கூட, விடுதலைப் புலிகள் அமைப்பு முதன் முறையாகத் தமது இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகளை முன்வைத்துள்ள சந்தர்ப்பத்தில் பிரதமர் சமாதான முயற்சிகளிலிருந்து விலகுவது தவறான செயல் என்று தெரிவித்துள்ளது. ஆயினும், பாதுகாப்பு சம்பந்தமான தீர்மானங்களைத் தம்மால் மேற்கொள்ள இயலாத சூழ்நிலையொன்றின் மத்தியில் சமாதான முயற்சிகளைப் பயனுள்ள முறையில் முன்னெடுத்துச்செல்ல முடியாதுள்ளது என்பதே அரசின் கருத்தாகும்.

## குற்றவிசாரணைப் பிரேரணை

சாதாரணமாக இத்தகைய தீவிரமான அரசியல் சூழ்நிலைகளின் மத்தியில் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் கொந்தளிப்பான நிலையை உருவாக்கும். 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28 ஆம் திகதியன்று ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராகக் குற்றவிசாரணைப் பிரேரணை முன்வைக்கப்பட்ட சந்தர்பத்தின்போது அவர் உடனடியாகவே அடுத்து வரவிருந்த செப்ரெம்பர் 24 ஆம் திகதி வரையிலும் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார். அச்செயலானது சமர்ப்பிக்கப்பட்ட குற்றவிசாரணைப் பிரேரணையைத் தோற்கடிக்க காலஅவகாசத்தைப் பெறும் முயற்சியேயாகும். எவ்வாறாயினும் தமது அதிக பட்ச முயற்சிகளினால் அவர் சபாநாயகர் மூலமாகவே குற்றவிசாரணைப் பிரேரணையை நிராகரிக்கச் செய்து செப்ரெம்பர் 24 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தைக் கூட்டி அரசின் கொள்கை விளக்கப் பிரகடனத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அன்று, பிரேமதாஸாவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எதிரணியினரால் மேற்கொள்ளப்பட்ட குறுக்கீடுகள் கொஞ்சநஞ்சமல்ல. ஆயினும், அவர் அவற்றை அலட்சியப்படுத்திவிட்டு நாடாளுமன்றத்தை எதிர்கொண்டார். எவ்வாறாயினும் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததன் மூலம் அவர் தனக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றவிசாரணைப் பிரேரணையை வெற்றிகொண்டார்.

சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணி



அரசின் நிர்வாகத்தின்போது ஒரு சந்தர்ப்பத்தில் திடீரென நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கான தேவை ஜனாதிபதிக்கு ஏற்பட்டது. 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் முதல் வாரத்தில், முஸ்லிம் காங்கிரஸுக்கும் அரசுக்குமிடையே கருத்துவேற்றுமை உருவானது. அதனையடுத்து முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம், உடனடியாக அரசிலிருந்து விலகினார்.

ரவூப் ஹக்கீம் ஐ.தே.கட்சியின் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 115 பேரின் கையெழுத்துக்களுடன் கூடிய, நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைச் சபாநாயகரிடம் கையளித்தார். இப்பிரச்சினையிலிருந்து தற்காலிகமாக விடுபடும் நோக்கில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை அந்த ஆண்டின ஜூலை 10 ஆம் திகதிமுதல் செப்ரெம்பர் 07ஆம் திகதிவரையில் தமது அதிகாரப் பலத்தைப் பிரயோகித்து ஒத்திவைத்தார்.

ஜே.வி.பியுடன் தகுதிகாண் அரசொன்றுக்கான பேச்சுக்களை மேற்கொள்ளவே ஜனாதிபதி அந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்தினார். அதற்கமைய, தகுதிகாண் அரசு சம்பந்தமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு நாடாளுமன்றம் கூட்டப்பட்டு புதிய அரசொன்று நிறுவப்பட்டது. ஆயினும், அத்தகுதிகாண் அரசு சிலமாதங்களுக்கே நீடித்தது. பொ.ஐ.முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் ஐ.தே.கட்சியில் சேர்ந்து கொண்டதாலும் அமைச்சர் தொண்டமான் தனது ஆதரவை விலக்கிக் கொண்டதாலும் ஜனாதிபதி அரசைக் கலைத்து, பொதுத்தேர்தலை நடத்தினார். அதன் மூலம் ஐ.தே.கட்சியே ஆட்சிக்கு வந்தது.

நாடாளுமன்றம் சம்பந்தமான அரசியல் பிரச்சினைகள் உக்கிரமடையும் வேளைகளில் இவ்வாறு தந்திரோபாயமாக நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வதே கடந்த கால உதாரணங்களாகும். இம்முறையும் ஜனாதிபதி, நாடாளுமன்றத்தை ஒத்திவைப்பதன் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்லது தனக்குச் சாதகமாக வெற்றி வாய்ப்பைப் பெறுவதற்கு முயன்றார். ஆயினும், தனக்குச் சாதகமான விதத்தில் பிரச்சினைக்குத் தீர்வுகாண அவரால் இயலவில்லை. அரசின் அமைச்சுக்கள் கையேற்கப்பட்ட அக்கணத்தில் ஐ.தே.கட்சியினர் ஒரு தொகை நாடாளுமன்ற உறுப்பினர்களை பொ.ஐ.முன்னணியில் இணைய வைப்பதாகவும், ஐ.தே.கட்சியின் பெரும்பான்மையை இழக்கச் செய்து, அரசை அஸ்தமிக்கச் செய்வதாகவும் உறுதியளித்த, ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகர்களால் அவர்களது வாக்கை நிறைவேற்ற இயலாது போனது. அதனால் ஜனாதிபதி மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக வேண்டியதாயிற்று.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் ஜனாதிபதியால் ரணிலின் அரசு பற்றித் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படாதவிடத்து, தாம் அரசியலிலிருந்து விலகி, வேறு முயற்சியில் ஈடுபடவுள்ளதாக, இங்கிரிய 'பிரதேசமொன்றில் நிகழ்ந்த கூட்டமொன்றில் 5மாதங்களுக்கு முன்னர் மங்கள சமரவீர தெரிவித்தார். "தனக்கு ஐ.தே.கட்சியிலிருந்து பெற்றுத்தருவதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்குள்ளனர் என்ற வினாவைக் கடந்த வாரம் ஜனாதிபதி பகிரங்கமாகவே மங்கள சமரவீரவிடம் கேட்டார்.

ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சு மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற கனவும் தற்போது கலைந்துவிட்டது.

## பிரபாவுக்குப் பயன்

நமது நாட்டின் பொதுமக்களுக்கு நாடாளுமன்ற ஜனநாயகம் தொடர்பான போதிய நுணுக்கங்களோ அறிவோ இல்லை. அவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் இன்றையதைவிட நாளை நல்லதாக அமைய வேண்டும் என்பதேயாகும். எனவே, குறுகிய அரசியல் நோக்கங்களை மறந்து செயற்படாவிடின் எதிர்வரும் சில வாரங்களுக்குள் நாடு மீண்டுமொரு பொதுத்தேர்தலுக்குத் தள்ளப்படுவதைத் தவிர்க்க இயலாது போகலாம். தேர்தலொன்று நிகழுமாயின், அடுத்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களிலும் பொருளாதார மேம்பாடுகளில் மந்தநிலையே தோன்றும். சமாதான முயற்சிகள் சம்பந்தமாகப் பிரபாகரனின் பொறுமை எப்போது முடிவுறுமென்பதை எம்மால் எதிர்வுகூற முடியாது. அப்பொறுமை எல்லைமீறும் போது, கொதித்தெழும் பிரச்சினைகளுக்குப் பொறுப்பு வகிப்பவர் யாரென்பதை நாமறியோம். ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையில் ஏற்படும் சச்சரவுகள் மூலம் அதிக பலனைப் பெறுவது பிரபாகரனே. கடந்த சில வாரங்கள் பிரபாகரனுக்குத் திருப்தியான வாரங்களாகவே இருக்கலாம்.

நாடு இன்றுள்ள நிலையில் ஒவ்வொரு அடியையும் மிக அவதானமாகவே எடுத்துவைக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலுள்ள சச்சரவானது இரு மொட்டையர்கள் சீப்புக்குச் சண்டை பிடிப்பதற்கு ஒப்பானதாகும். இச்சச்சரவுக்குக் காரணகர்த்தா யார்? தாமா மங்களவா என்று காரணங்களையிட்டு வாதப்பிரதிவாதங்களை மேற்கொண்டு காலம் கடத்துவது அல்ல இன்றுள்ள பிரச்சினை. பதிலாக நியாயமான வகையில் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழிமுறையைத் தேடுவதேயாகும். இருசாராரின் மத்தியிலும் இடம்பெற்ற தவறுகளே பிரச்சினையின் இத்தகைய சிக்கலுக்குக் காரணமாயிருக்கவும் கூடும்.

## இணக்கம் அவசியம்

எனவே, இணக்கம் காண்பதன் மூலம பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது ஜனாதிபதியினதும், பிரதமரினதும் கடமையாகும். மக்கள் அங்கீகாரம் இருப்பதால் ஜனாதிபதி இன்னமும் இரு ஆண்டுகள் தமது பதவியை வகிக்கமுடியும். அரசுக்கு இன்னமும் நான்கு ஆண்டுகள் ஆட்சி செலுத்துவதற்கான அங்கீகாரத்தை மக்கள் வழங்கியுள்ளனர். நாட்டுமக்களும், முக்கிய அரசியல் கட்சிகளின் பெரும்பான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களும் திடீர் பொதுத்தேர்தலைக் கோரவில்லை.

தற்போது அரசியல்வாதிகள் எதிர்பார்த்திருப்பது அடுத்த ஆண்டில் நிகழவிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலையேயாகும். மாகாண சபைத் தேர்தல் சிறந்ததொரு சோதனையாக அமையும். நாட்டுமக்கள் நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு அது சிறந்ததொரு வாய்ப்பாகும். ஆயினும், இன்று பிரச்சினை உத்வேகமடைந்துள்ள நிலையில், பொறுமையுடன் இவற்றை நிர்வகித்துச் செல்வது, அரசியலில் மிகுந்த அனுபவங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் கடமையும் பொறுப்புமாகும். அதையிட்டு அனைவரும் நேர்மையுடனும், நாட்டுக்கான அர்ப்பணிப்பையும் நினைவிற்கொண்டு செயலாற்ற வேண்டியுள்ளது. அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுவினருக்கான கூட்டத்தில் உலக வங்கியின் உபதலைவியான மியெக்கோ நியிம்ஸுவின் கூற்றை அவரது வார்த்தைகளிலேயே கூறுவதாயின்,


"நாட்டின் அபிவிருத்தியை வெற்றியடையச் செய்வதற்கு நேர்மையான தலைமைத்துவத்தாலேயே முடியும்" என்றார் அவர்.

எனவே, நிலவும் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதியும் அரசும் நியாயமான அர்ப்பணிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அவ்வாறு செயற்படாவிடின் இப்பிரச்சினை மேலும் தீவிரமடைந்து பொதுத்தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். தேர்தல் இடம்பெற்றாலும் நாடாளுமன்றத்தில் கட்சிகளின் நிலைமை பெருமளவில் மாற்றமடையும் என எண்ணமுடியாது. அது எவ்வாறாயினும், பொதுத்தேர்தலின் பின்னர், ஆட்சிக்கு வரும் அரசுக்கு அதிகாரங்களை வழங்குவதிலும் ஜனாதிபதி தனது இன்றைய நிலைப்பாட்டையே கைக்கொள்வாராயின் அது இன்னுமொரு பிரச்சினைக்கே வழிவகுக்கும். அதனால் இவ்விடத்தில் தற்போதைய தேவை தேர்தலொன்றல்ல, இருகட்சிகளினதும் தலைவர்களின் பயனுள்ள மாற்றமாதும் முறையான அர்ப்பணிப்பாகும். *

# ஹர்த்தாலினால் முடங்கியது குடாநாடு!



மருதனார்மடம் சந்தை


யாழ். செயலகப் பகுதி


யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு

யாழ். பஸ்நிலையப் பகுதியில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் குடாநாடு அடங்கலாக நடத்தப்பட்ட ஹர்த்தாலின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. *(படம் : தேவா)*


சுன்னாகம் கடைகள்


திருநெல்வேலி சந்தை


சுன்னாகம் நகரப் பகுதி

## நல்லூர் பொதுச்சந்தை அருகே

# வீதியோரம் நிற்கும் அரசமரத்தின் கிளைகள் முறிந்து விழும் ஆபத்து

யாழ்ப்பாணம்,டிசெ.13

நல்லூர் பொதுச் சந்தைக்கு அருகே கல்வியங்காடு சந்திக்கு சமீபமாக உள்ள பெரிய அரச மரத்தின் கிளைகள் எந்தநேரமும் முறிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

பரந்து கிளை விரிந்து காணப்படும் இந்த மரத்தின் கீழே சிறிய வைரவர் ஆலயமும் கடைக்கட்டடங்களும் உள்ளன. அத்துடன் மின்சார சபையின் அதிவலு மின் இணைப்புகளும் வீதியோரமாகக் காணப்படுகின்றன. எனவே மரக் கிளைகள் முறிந்து வீழ்ந்தால் விபரீதங்கள் ஏற்படலாம் என்று அப்பகுதியைச் சேர்ந்தோர் அஞ்சுகின்றனர்.

மரத்தின் பெரிய கிளைகளை வெட்டி அகற்றுவதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் அடியபாதம் வீதி ஓரமாகவும் பாரிய மரங்கள் வளர்ந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தென்மராட்சியில் மேலும் பலருக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு

தென்மராட்சி,டிசெ.13

தென்மராட்சிப் பிரதேசத்தில் 15 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக குடியமர்ந்துள்ள மக்களுக்கு உடனடி மீள்குடியமர்வுக் கொடுப்பனவான ரூபா 25 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவு பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை யாழ். செயலக திட்டமிடல் பிரிவு தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளன.

சாவகச்சேரி நகரம், மீசாலை மேற்கு, கைதடி - நாவற்குழி, நாவற்குழி மேற்கு, நாவற்குழி கிழக்கு, பாலாவி, அல்லாரை, தாவளை - இயற்றாலை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய், மீசாலை வடக்கு மற்றும் இராமாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் கிழக்கு, கரம்பைக்குறிச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## உள்ளூராட்சி எழுதுவினைஞர்களின்

# இடமாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள்: ஆளுநரின் செயலாளரிடம் முறைப்பாடு!

வடக்கு - கிழக்கு மகாண பொது நிர்வாக அமைச்சினால் 01.01.2004 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இடமாற்றம் காரணமாக உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் பற்றி மகாண ஆளுநரின் செயலாளருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகள் கடந்த செவ்வாயன்று மாகாண ஆளுநரின் செயலாளர் அ.அமிர்தலிங்கத்தை சந்தித்துக் கலந்துரையாடினர்.

நல்லூரில் அமைந்துள்ள யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநரின் செயலாளரிடம் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

★ பத்து ஆண்டுகளுக்குள் சேவை செய்த எழுதுனர்களை அமைச்சுக்களுக்கு இடையே இடமாற்றம்செய்ய வேண்டும்.

★ 55வயதுவரை உள்ள எழுதுவினைஞர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே இடமாற்றுதல்.

★ 55வயதுக்கு மேற்பட்டவர்களை அவர்கள் சேவையாற்றும் இடங்களிலேயே தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கவேண்டும்.

இந்த வேண்டுகோள்களை ஆளுநரின் செயலாளர் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டார் என்று உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை, ஊனமுற்ற உத்தியோகத்தர்கள், தொடர் நோய்களினால் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் சார்பான மேன்முறையீடுகளையும் தற்போது வேலை செய்யும் நிலையங்களில் இரண்டு ஆண்டுகள் பூர்த்திசெய்யாத உத்தியோகத்தர்களின் மேன்முறையீடுகளையும் பரிசீலித்த ஆளுநரின் செயலாளர் மாற்று ஒழுங்கு செய்துதருவதாக உறுதியளித்தார் என்றும் எழுதுவினைஞர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)


உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அ.அமிர்தலிங்கத்தை சந்தித்துக் கலந்துரையாடிய சமயம் எடுக்கப்பட்ட படம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# கொத்மலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் எதிர்த்து சாகும்வரை போராடுவேன்!

## மனித உரிமைகள் நிறுவன இணைப்பாளர் ஆவேசப் பேச்சு

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திட்டத்தை அமைப்பதற்கு சில மலையக சக்திகள் ஆதரவளிக்கின்றன. இந்தத் திட்டம் அமையுமேயானால் இப்பகுதி மக்கள் சிதறடிக்கப்படுவர். எனவே, இத்திட்டம் ஆரம்பிக்கப்படுமானால் அதனை எதிர்த்து சாகும்வரை போராடுவேன் என்று மனித உரிமைகள் நிறுவன இணைப்பாளர் மேகலா சண்முகம் ஆவேசமாகக் கூறினார்.

தலவாக்கலையில், பெருந்தோட்ட சமூக மாமன்றம் கடந்த புதன்கிழமை பிற்பகல் மனித உரிமைகள் தினத்தையும், எழுச்சிக்கூட்டத்தையும் நடத்தியது. அதில் கலந்துகொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு மேகலா சண்முகம் கூறினார்.

கூட்ட ஏற்பாட்டாளர் செபஸ்டியன பிலிப் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் அருகிலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது. கண்டி, பூண்டுலோயா, பொகவந்தலாவை, டயகம, அட்டன் உட்பட பல பகுதிகளிலிருந்து வந்திருந்தோரும் தலவாக்கலை பகுதி மக்களும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறுத்தி, தோட்ட நீர் நிலையை அபகரிக்காதே, தோட்டத் தொழிலாளருக்கு காணி கொடு, சிறுவர் உழைப்பை நிறுத்து என்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி ஊர்வலத்தினர் தலவாக்கலை நகர சந்தியை வந்தடைந்தனர். பின்னர் கூட்டம் ஆரம்பமானது.

தொடர்ந்து பேசிய மேகலா சண்முகம் கூறியதாவது:-

மலையக மக்களை மேலும் சிதறடிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. அதனாலேயே மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை எதிர்க்கின்றோம்.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை அமைப்பதற்கு பல சக்திகள் ஆதரவு வழங்கி வருகின்றன. அந்தத் திட்டத்தினால் இந்தப் பகுதி அபிவிருத்தி அடையுமென்று கூறுகின்றனர். உண்மையில் இந்தப் பகுதி அபிவிருத்தியடையுமா? அல்லது அழியுமா? என்பதை அந்தச் சக்திகளும் அறியும்.

தலவாக்கலை நகரம் மௌனம் சாதிக்கின்றது. இந்த மௌனம் நீடிக்கக்கூடாது. 2003ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மேல்கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தினால் நாம் பாதிக்கப்பட்டோம் என்று எதிர்கால சந்ததி திட்டக்கூடாது. எனவே, மேல்கொத்மலை திட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு சாகும்வரை போராடுவேன்.

- இவ்வாறு அவர் கூறினார்.

அநுராதபுர தேசிய இயற்கைவள நிறுவன செயலாளர் மஹநாமன் கடவள பியரத்ன தேரர் பேசுகையில்,

இனிமேல் தண்ணீரை எவரும் இலவசமாகப் பெறமுடியாது. நீர் வளங்களை அரசு உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பனை செய்யப்போகின்றது. குளங்கள், ஆறுகளில் இறங்கினால் கூட தண்டனை கிடைக்கும் நிலை ஏற்படும். - என்றார்

# பயன்தரும் மரங்களைத் தறிக்க வலி. தென்மேற்கில் தடைவிதிப்பு

## பிரதேச செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

வலி.தென்மேற்கு - சண்டிலிப்பாய் பிரசேத செயலர் பிரிவில் பயன் தரும் மரங்களைத் தறிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிவிப்பை பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா விடுத்துள்ளார்.

இதுகுறித்து பிரதேச செயலர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்தரும் மரங்களான மா, பலா, வேம்பு, பனை, தென்னை என்பன தறிக்கப்பட்டுள்ளன எனப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பிரதேசங்களில் இயங்கும் சூழல் பாதுகாப்புக் குழுக்களும் இதுவிடயமாக எமக்கு அறிவித்துள்ளன.

எனவே, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இனிவரும் காலங்களில் மரந்தறிப்போர் உரிய காரணங்களை முன்வைக்கவேண்டும். இவ்வாறு தகுந்த காரணத்தை வலியுறுத்துவோருக்கு மரம் தறிப்பது தொடர்பாக அனுமதி வழங்கப்படும்.

எவ்வித முன் அனுமதியும் இன்றி மரம் தறிப்பதில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் - தீர்மானிக்கப்பட்டுள்ளது என பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் பிரதேச செயலர் தெரிவித்தார். (எ-185)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.13

நல்லூர் ரோட்டறக்ட் கழகம் நடத்தும் ஒளிவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு வண்ணார்பண்ணை சீனியர் லேனில் அமைந்துள்ள செவிப்புலன் அற்றோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ரோட்டரியன் ஏ.சாந்தி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வண.பிதா அமல் ராஜ் கலந்துகொள்கிறார். (எ-9)

# ஆளணி இன்றி வெறும் கட்டடங்களால் சுகாதார சேவையைச் சீராக்கி விடமுடியாது!

**அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

**இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன் படியான மக்களின் இயல்பு வாழ்க்கை தமிழர் தாயகப் பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தல் சொலலப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைபடுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.**

**அந்தவகையில், சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம் வழங்கிய செவ்வி இன்று வெளியாகின்றது.**




## சேவைநீடிப்புடன் பணியாற்றும் சுகாதாரப் பணிப்பாளர் ஆதங்கம்

■ கேள்வி: புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின் சுகாதார சேவையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

● பதில்: சில விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வேறு பல விடயங்களில் இன்னமும் பின்னடைவுதான் காணப்படுகின்றது.

ஏ-9 பாதை திறந்த பின் மருந்துப் பொருள்கள். திரிபோஷா போன்றவை நேரடியாக எமது வாகனங்கள்மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படுகின்றன. எமது திணைக்களத்துக்குப் புதிய வாகனங்கள் வழங்கப்படாததால் எமது பழைய வாகனங்கள் இத்தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக பொருள்கள் எடுத்துவருவதில் தாமதங்களும் தடங்கல்களும் ஏற்படுகின்றன.

ஆளணிப் பற்றாக்குறை விடயத்தில் புரிந்துணர்வு உடன் பாட்டுக்குப்பின்னரும் முன்னேற்றம் ஏற்படவில்லை. யாழ்.மருத்துவ பீடத்தில் கல்வி பெற்று வெளியேறுபவர்கள், இங்கு வேலை செய்ய விரும்பாமல் வெளிமாவட்டங்களுக்கே போகிறார்கள் இதனால். வைத்தியர் பற்றாக்குறை பெரியளவில் உள்ளது.

பயிற்சி அளிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கான பயிற்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், புதியவர்கள் நியமிக்கப்பட வாய்ப்பு இல்லை. இதன்காரணமாக ஓய்வுபெற்றவர்கள் மீள்நியமனம் மூலம் பணிபுரிகின்றனர். பெரும்பாலானவர்கள் 60வயதுக்கு மேற்பட்டவர்கள். நான்கூட மீள்நியமனம் பெற்றே பணிபுரிகின்றேன்.

முன்னர் மலேரியா தடுப்பு, தொற்றுநோய் தடுப்பு, தாய் - சேய் நலன் பேணல் ஆகிய பிரிவுகளுக்குத் தனித்தனி வைத்திய அதிகாரிகள் பணிபுரிந்தனர். ஆனால், இப்போது இந்தப் பணிகளை எல்லாம் நான் ஒருவனே செய்ய வேண்டியுள்ளது. இதனால் வேலைப்பளு கூடியுள்ளது.

அத்துடன் குடாநாட்டில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் பெரும்பாலான பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் இல்லை. 13பிரிவுகளையும் இரண்டாகப் பிரித்து 7பிரிவுகளுக்கு ஒருவரும் எஞ்சிய பிரிவுகளுக்கு ஒருவருமாக இரண்டுபேர் பணிபுரிகின்றனர். ஒரு பிரிவுக்கு மட்டும் வைத்தியர் சேவை புரிகின்றார். மற்றைய பிரிவுக்கு மீள்நியமனம் பெற்ற ஒருவர் பணிபுரிகின்றார். சுகாதாரப் பரிசோதகர்கள் பெரும்பாலான பிரிவுகளில் பணிபுரிய வேண்டியுள்ளது. வைத்திய பற்றாக்குறை மிகமோசமான நிலையில் உள்ளது.

■ கேள்வி: தற்சமயம் வசதிகள் இருக்கின்றபோதும் கூட இங்கு பணிபுரிய வைத்தியர்கள் பின்னடிக்கக் காரணம் என்ன?

● பதில்: இதற்குப்பல காரணங்கள் உண்டு. வைத்தியர்கள் தமது பட்டப்பின் படிப்புக்களை மேற்கொள்ள இங்கு வசதிகள் குறைவாக உள்ளன. மருத்துவபீடத்தில் சித்தியடைந்தவுடன். இளம் வைத்தியர்கள் பட்டப்பின் படிப்புகளை மேற்கொள்ள வெளிமாவட்டங்களுக்குச் செல்கின்றனர்.

■ கேள்வி: குடாநாட்டுக்கு மருந்துப் பொருள்கள் எடுத்துவருவதற்கு முன்னர் கட்டுப்பாடு இருந்தது. இப்போது அந்தநிலை தொடர்கின்றதா?

● பதில்: மருந்துப்பொருள்கள் எடுத்துவருவதற்கு தடை இருப்பதாகக் கூறமுடியாது. வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துகளை எடுத்துவரக்கூடிய நிலை காணப்படுகின்றது. கொழும்பில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவினால் அந்த மருந்துப் பொருளை இங்கு எடுத்து வரமுடியாத நிலை ஏற்படும். நாம் கேட்டாலும் மருந்துவகைகள் மருந்துக் களஞ்சியத்தில் சிலநேரங்களில் இருக்காது. கிடைக்கும் மருந்தைப் பகிர்ந்து கொடுக்கும் போது குறைந்த அளவு மருந்து மட்டும் இங்கு வரும். இதனால் நாம் கோரிய அளவு வராமல் போகும்.

தடுப்பூசிகள், திரிபோஷா ஆகியன தாமதம் ஏதும் இன்றி வந்துசேர்கின்றன.

■ கேள்வி: தொற்றுநோய் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளதா?

பதில்:- தொற்றுநோய்களைப் பொறுத்த மட்டில், நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முந்திய நிலையை ஒப்பிடும்போது, தற்சமயம் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. என்று தான் கூறவேண்டும்.

மலேரியாவைப் பொறுத்தமட்டில் 98ஆம் ஆண்டு 47ஆயிரம் நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை குறைந்து குறைந்து வந்துள்ளது. இந்த வருடத்தில் இது வரை 500 பேரே இனங்காணப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கு போலியோ, தொண்டைக்கரப்பன், குக்கல், பிரசவத்தின்போது ஏற்படும் ஈர்ப்பு ஆகியனவும் அற்றுப்போகும் நிலையை அவதானிக்க முடிகிறது.

விசர்நாய் மூலம் ஏற்படும் நோயைத்தான் கட்டுப்பாட்டில் கொண்டுவரமுடியாதுள்ளது. நாய்களைக் கொல்லும் நஞ்சு மருந்து, தடுப்பு ஊசி ஆகியன குறைவாகவே கிடைக்கின்றன. கட்டாக்காலி நாய்களைக் கொல்லும் நடைமுறையும் சீராக இல்லை. ஏனைய மாவட்டங்கள் போன்று 'காஸ்' வண்டிகள் மூலம் கொல்லும் நடைமுறை இன்னமும் இங்கு வரவில்லை.

கட்டாக்காலி நாய்களைக் கொல்லும் நடைமுறையை உள்ளூராட்சி மன்றங்களே மேற்கொள்ள வேண்டும். ஆனால், பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் அப்பணியை சீராக மேற்கொள்வதில்லை. இதனால், எமது சுகாதார ஊழியர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

■ கேள்வி: டெங்குக் காய்ச்சல் குடாநாட்டில் பரவுகின்றதா?

● பதில்: கொழும்பு, குருநாகல் மாவட்டங்களிலேயே இந்த நோய் தீவிரமாகப் பரவுகின்றது. தற்சமயம் வெளிமாவட்டங்களுக்கும் குடாநாட்டுக்கும் இடையிலான போக்குவரத்துச் சீராக இருப்பதால் இந்தநோய் இங்கும் பரவ வாய்ப்பு உள்ளது. இந்த நோயைப் பரப்பக் கூடிய நுளம்பு இனம் இங்கும் உள்ளது. என்பதை எமது பூச்சியியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வெளியிடங்களில் இருந்து இங்கு வருபவர்கள் மூலம் இந்த நோய் இங்கும் பரவ வாய்ப்பு உண்டு.

டெங்குவை பரப்பக்கூடிய நுளம்புகள் கூடுதலாக இருக்கும் இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ரயர்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள கோண்டாவில் போக்குவரத்துச் சபையின் சாலை மற்றும் பருத்தித்துறை போக்குவரத்துச் சாலை ஆகியன முக்கிய இடங்களாகும். அங்கு குவித்து வைக்கப்பட்டுள்ள ரயர்களில் தேங்கிநிற்கும் நீரில் இந்த நுளம்பின் குடம்பிகள் பெருமளவில் உள்ளன.

இந்த ரயர்களை அகற்றும்படி நாம் அவர்களிடம் கேட்டுள்ளோம். அதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். எப்படியாயினும் அவர்கள் இந்த நோய்த் தடுப்புக்கு உதவவேண்டும். பொதுமக்கள் தமது சுற்றாடலில் உள்ள கோம்பை, பழைய ரின்கள், சிரட்டைகளில் தேங்கியிருக்கும் நீரை அகற்றி நோய்த் தடுப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்த நோய் பீடிக்கப்பட்டதாக மாதாந்தம் 2அல்லது 3பேரே இனங்காணப்பட்டுள்ளனர். பெரிய அளவில் பரவ வாய்ப்புக் குறைவு.

■ கேள்வி: புற்றுநோயாளர்கள் எதிர் நோக்கும் கஷ்டங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

● பதில்: புற்றுநோயாளர் பிரச்சினைதான் பெரும் பிரச்சினையாக உள்ளது. முன்னர் இவர்களை மஹரகமவுக்கு சிகிச்சைக்கு அனுப்பினோம். தற்சமயம் அந்த நோயாளர்களுக்கு தெல்லிப்பழையில் உள்ள புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க முயற்சி எடுத்துள்ளோம். புற்றுநோய்சிகிச்சை நிபுணரைக் கொண்டு மாதம் ஒரு தடவை சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நடைமுறைச்சிக்கல் காரணமாக சிகிச்சை தற்சமயம் இடம்பெறவில்லை. கடந்த இரு மாதங்களாக இது தடைப்பட்டுள்ளது.

அந்த வைத்தியசாலை உயர்பாதுகாப்பு வலயத்துள் இருப்பதால் நோயாளர்களும் ஊழியர்களும் சென்று வருவது கஷ்டமாக உள்ளது. பல சந்தர்ப்பங்களில் எமது ஊழியர்கள் திருப்பியும் அனுப்பப்பட்டுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயத்தைப் பின்நகர்த்தினால் தெல்லிப்பழை வைத்தியசாலையையும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தையும் சீராக இயக்கமுடியும் என சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்தோம். ஆனால், இந்த விடயத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

■ கேள்வி: காச நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது. இதற்கு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்யப்பட்டுள்ளதா?

● பதில்: மயிலிட்டியில் காசநோய் வைத்தியசாலை முன்னர் இயங்கியது. கடந்த காலயுத்தத்தினால் அவ்வைத்தியசாலைக் கட்டடங்கள் அழிக்கப்பட்டன. பாதுகாப்பு வலயத்துக்குள் அந்த வைத்தியசாலை அமைந்துள்ளதால், அங்கு செல்ல முடியாது.

இதன் காரணமாக காச நோயாளர்களை சாவகச்சேரி வைத்தியசாலையில் வைத்துப் பராமரித்து வந்தோம். 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வுடன் கோப்பாய் வைத்திய நிலையத்திற்கு அவர்களை மாற்றினோம். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் காசநோய், பரவும் நோய் என எதிர்ப்புக் காட்டினர். இதன்காரணமாக சங்கானை வைத்தியசாலைக்கு மாற்றினோம். அங்கும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து அவர்களைத் தற்சமயம் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு மாற்றியுள்ளோம்.

காசநோய் பற்றிய அறிவு மக்களுக்கு இல்லாததாலேயே இந்த நோயாளர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். இந்த மன நிலை மக்கள் மனதில் இருந்து அகல வேண்டியது அவசியம்.

காசநோயாளர்களுக்குத் தனியாக பண்ணைப் பகுதியில் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைக்க தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தை அமைக்க ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட காணியை சிலர் ஆக்கிரமித்துள்ளனர். அங்கு தேவாலயம் ஒன்றும் சில வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்ற மாகாண சுகாதார அமைச்சு மூலம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். மிகவிரைவில் அங்கு கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும்.

■ கேள்வி: குடாநாட்டில் எய்ட்ஸ் நோயின் தாக்கம் எப்படி உள்ளது?

● பதில்: ஒருகாலத்தில் இந்த நோய்த் தாக்கம் இங்கு இருக்கவில்லை. 'வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் மூலம் இந்த நோய் இங்கும் சிலருக்குத் தொற்றியது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதால் எய்ட்ஸ் இங்கு பரவும் ஆபத்து உள்ளது என்பதை மறுக்கமுடியாது. கூடுதலானவர்கள் வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்துபோவதால் பாலியல் தொற்றுநோய்கள் இங்கு வரவாய்ப்பு உள்ளது. எனவே, மக்கள் இந்த நோய் ஏற்படாமல் அவதானமாக இருக்க வேண்டும். நாமும் இந்த நோய் தொடர்பாக விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

■ கேள்வி: குடாநாட்டில் சுகாதார சேவையைச் சீராக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

● பதில்: சுகாதார சேவைக்கு எவ்வளவு கட்டடங்களைக் கட்டினாலும் ஆளணி இல்லாமல் எதையும் செய்யமுடியாது. சேவை மனப்பான்மையுடன் பணிபுரிய வைத்தியர்கள் முன்வரவேண்டும்.

**புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப்பின் மருந்துப் பொருள்கள் எடுத்து வருவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் வைத்தியர் பற்றாக்குறை மிகமோசமான நிலைக்குச் சென்றுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஓரளவு சகஜநிலை உருவாகிய பின்பு கூட வைத்தியர்கள் இங்கு வந்து பணிபுரியத் தயக்கம் காட்டுவது, சுகாதார சேவைகள் ஸ்தம்பித நிலைலை அடைய வழிவகுக்கும் எனக் கருதுகிறேன்.**



**யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பட்டம் பெற்று வெளியேறுபவர்கள். தெற்கை நோக்கி ஓடுவது, இங்குள்ள மக்களை மதிக்காத செயலாகவே அமைகின்றது. பட்டப்பின் படிப்புகளுக்காக அவர்கள் போகலாம். ஆனாலும் இங்குள்ள மக்களின் நிலையையும் ஓரளவு சிந்திக்கவேண்டும்.**

**குடாநாட்டில் உள்ள 13 சுகாதார நிலையங்களுக்கு இரு வைத்தியர்களே மாறிமாறி பணியாற்றுகின்றனர். 13 நிலையங்களுக்கும் நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்பட்டால், மக்கள் சீரான மருத்துவ சேவையைப் பெறவாய்ப்புக்கிட்டும்.**

**குடாநாட்டில் தொற்றுநோய்கள் கடந்தகாலங்களை விட தற்சமயம் வெகுவாகக் குறைந்துள்ளன. மக்கள் தமது ஆதரவை முழுமையாக வழங்குவதன் மூலமே தொற்று நோய்களை முற்றாக ஒழிக்க முடியும்.**

**புற்றுநோயால் அவதிப்படும் மக்களுக்கு உதவ, தெல்லிப்பழை பாதுகாப்பு வலயத்தைப் பின்னகர்த்தி, தெல்லிப்பழை புற்றுநோய்ச்சிகிச்சை நிலையத்தை மீள இயக்க அனுமதிக்கப்பட வேண்டும். இது குறித்து பல தடவைகள் எடுத்துக்கூறப்பட்டபோதும் முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.**

### செவ்வி கண்டவர்: குகா

இங்கு வருபவர்களும் தமது வதிவிடங்களுக்கு அருகில் பணிபுரியவே விரும்புகின்றார்கள். பணிபுரியும் வைத்தியர்களிடமும் பொறுப்புணர்ச்சியைக் காணவில்லை. இங்கு பணிபுரியும் வைத்தியப் பொறுப்பதிகாரிகள் பலர் வைத்தியம் செய்கிறார்கள். ஆனால், நிர்வாகம் செய்யவில்லை. காலையில் நேரம் பிந்தி வேலைக்குச் செல்வதும் மாலையில் நேரத்துக்கு வீடு திரும்பும் பழக்கமுமே பலரிடம் இன்னமும் காணப்படுகின்றது.

இவர்களின் பழக்கம் அந்த வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களிடமும் ஏற்படுகின்றது. இந்த நிலை சுகாதார சேவை முன்னேற்றத்துக்கு உதவாது. கண்ணியமாக, கடமை உணர்ச்சியோடு வைத்திய சேவையை மேற்கொள்ள அவர்கள் முன்வரவேண்டும். அப்போதுதான் மக்கள் பயன் அடைவர்.

குடாநாட்டில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையை நீக்க இளம் வைத்தியர்கள் முன்வர வேண்டும். வைத்தியத்துறையை மக்கள் சீராக அனுபவிக்க சமூகப் பொறுப்புடன் வைத்தியர்கள் பணியாற்றவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்துக்குக் கீழ் 50இற்கும் மேற்பட்ட திணைக்களங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களையும், ஊழியர்களையும் ஒரு மாகாணப் பணிப்பாளரால் கையாள முடியாது. ஆகவே, மேல

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆளணி இன்றி...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக மாகாணப் பணிப்பாளர், பிரதி மாகாணப் பணிப்பாளர் என இருவர் நியமிக்கப்படவேண்டும். இளம் வைத்தியர் ஒருவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அனுபவம் உள்ள என்போன்றவர்கள் மூலம் அனுபவங்களைப் பெற்று ஒரு நிர்வாகத்தையும் திறம்பட நடத்த வாய்ப்புக்கிட்டும்.

இதுதொடர்பாக மாகாண சுகாதாரப பணிப்பாளருக்கு தெரியப்படுத்தியுள்ளேன். விரைவில் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் நாம் ஒதுங்க முடியும். தொடர்ந்து பணிபுரிவது என்பது கஷ்டமான விடயமாகும்.

கடந்த மூன்று வருடங்களில் குடாநாட்டில் சீரான நிர்வாகம் இடம் பெறாததால் பிரச்சினைகள் தற்சமயம் அதிகரித்துள்ளன. அவற்றைப் பல சிரமங்களுக்கு மத்தியில் சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளேன்.

குடாநாட்டில் சுகாதார சேவை முற்று முழுதாக மீள்நியமனத்தில் தங்கியுள்ளது. மீள்நியமனம் பெறுபவர்களும் வயதுமுதிர்ந்தவர்கள். ஆகவே, சுகாதார சேவையை கட்டிக் காத்து வளர்க்க இளம்சந்ததி முன்வரவேண்டும்.

தெற்கில் வைத்தியசாலைகளுக்குத் தேவையான கட்டட வசதிகளையோ, உபகரண வசதிகளையோ பொதுநிறுவனங்கள் அன்பளிப்பாகச் செய்துகொடுக்கின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் எல்லாவற்றுக்கும் அரசை நம்பியிருக்கும் நிலையே காணப்படுகின்றது. மக்களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். 'மக்களின் வைத்தியசாலை' என்ற எண்ணம் மக்கள் மனங்களில் உருவாகவேண்டும்.

## நேர்முகத் தேர்வு

வருவாய்ப்பகுதியால் 2003-12-11ஆம் நாள் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்விற்கு வருகை தராதவர்களுக்கு கீழ்வரும் கால ஒழுங்கில நேர்முகத்தேர்வு நடைபெறுமென்பதை அறியத் தருகின்றோம்.

காலம் : 2003 - 12 - 18
நேரம் : காலை 9.00 மணி
இடம் : வருவாய்ப்பகுதி செயலகம், யாழ்சாலை, பளை.

(25744) ஆளுநகை, (65-17-21-16)
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு, வருவாய்ப்பகுதி.

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
## Diploma in Agriculture
## விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி

ஒருவருட கால இலவச விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 17-25 வயதுக்கிடைப் பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**போதிக்கப்படும் பாடங்கள்**

விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்.

பயிற்சி நெறிக்காலத்தில் உதவுதொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 22.12.2003 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

*மேலதிக விபரங்களுக்கு:-*

அதிபர்,
**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,**
(34-17-21-16) மருதனார்மடம் - சுன்னாகம். (25745)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 ~ 08 ~ 1947



மறைவு 24 ~ 11 ~ 2002

எமது இல்லத்தின் ஒளிவிளக்கு
திருமதி **மகேஸ்வரி கனகசபை**
திதி: பஞ்சமி

காலமெல்லாம் எம் இதயத்தின் ஒளிவிளக்காய்த்
திகழ்ந்திடுவாய் என்றிருந்தோம். கலங்கி நிற்கும் எம்மை நிதம்
காத்திடுவாய் நீ ஆண்டு ஒன்று நீயின்றி வாழ்ந்திடம்
காலம் எத்தனை வாழ்விக்க நீ நினைந்தாயோ?
போற்றிடுவோம் நிதம் நின்னை பொறை அன்பின் திருவருளே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆவரங்கால் மேற்கு,
வங்கி வீதி, புத்தூர். (25759)(34-17-21-16)
கனகசபை
குடும்பத்தினர்.

## இளஞ்சைவப்புலவருக்கு வாழ்த்து



யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருத மாணவன்
இளஞ்சைவப்புலவர் ஐயப்பபக்தன்
**பிரம்மஸ்ரீ நாகரத்தின ஐயா கலாதர சர்மா**
அவர்கள், அண்மையில் அகில இலங்கை சமாதான
நீதிவானாக யாழ்.நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்து
நியமனம் பெற்றதையிட்டு வாழ்த்துக்கள் தெரிவிப்பதோடு
அவரது சமய, சமூகப்பணிகள் உயர்வடைய
யாழ்.கோண்டாவில் கிழக்கு சபரிச
ஐயப்பனை வேண்டுகின்றேன்.

திரு.கனகசபை கந்தரலிங்கம்
சமாதான நீதிவான் - காரை மணிகண்டன்.


SALE

## பண்டிகைக்கால மலிவு விற்பனை

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும் நவீனரக
ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர் சிறுமியருக்கான
சிறந்த ஆடைகளுக்கும் இளம் சிட்டுக்களின்
இதயம் கவர்ந்திடும் இன்பமயச் சோலையை
இன்றே நாடுங்கள்

SALE

## மகாநதி புடைவையகம்

இல.16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
☎ 021 222 2552

இல.04, நவீன சந்தை,
சாவகச்சேரி.
☎ 0712 370437

சாறி பிளவுஸ் பீஸ் வகைகளுக்க பிரத்தியேகக் காட்சி அறை:
இல.16, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.


## வேலணை பிரதேச சபை
## சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான
## கேள்வி அறிவித்தல் - 2004

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 01-01-2004 ஆம் திகதி முதல் 31-12-2004 ஆம் திகதி வரையான காலப் பகுதிகளுக்கு குத்தகை விடுவதற்கான கேள்விகள் 19-12-2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். 22-12-2003 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 10.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒருவர் சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் 15.12.2003 ஆம் திகதி, திங்கட்கிழமை முதல் 19.12.2003 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை வேலணை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கீழ் குறிப்பிடப்படும் கேள்வி வைப்புப் பணம் கேள்விப் படிவக்கட்டணம் ஆகியவற்றை பணமாகச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியினை *வேலணை பிரதேச சபை, தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலும்,* இணைப்பிரதியினை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.: 20, செட்டித்தெரு, நல்லூர்* என்ற முகவரிக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். இவை பற்றிய மேலதிக விவரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல.: குத்தகை விவரம் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 01. வேலணை துறையூர் மீன்சந்தை | 1000/- | 100/- | 125000/- |
| 02. செட்டிபுலம் மீன்சந்தை, வேலணை | 750/- | 100/- | 30000/- |
| 03. புங்குடுதீவு மீன்சந்தை | 750/- | 100/- | 25000/- |
| 04. நயினாதீவு தெற்கு மீன்சந்தை | 1000/- | 100/- | 25000/- |
| 05. நயினாதீவு வடக்கு மீன்சந்தை | 1000/- | 100/- | 25000/- |
| 06. அல்லைப்பிட்டி மீன்சந்தை | 750/- | 100/- | 10000/- |
| 07. புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை | 1000/- | 100/- | 40000/- |
| 08. வேலணை ஆட்டிறைச்சிக்கடை | 750/- | 100/- | 25000/- |

*முக்கிய குறிப்பு:-*

மீன் சந்தைகளுக்கான குத்தகைகள் எடுக்கப்பட்டு வேலணை பிரதேச சபை நிர்வாகத்துடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாவிட்டால் 01.01.2004 ஆம் திகதியிலிருந்து வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பிடிக்கப்படும் மீன்கள் விற்பனைக்காக வெளியிடங்களுக்கு கொண்டு செல்லுதல் முற்றாகத் தடைசெய்யப்படும்.

வேலணை ஆட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுப்போரே கடையினையும் நிலையத்தையும் சுயமாக அமைத்துக்கொள்ளல் வேண்டும்.


கேள்விப்பத்திரப்பணம், கேள்வித் தொகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 20% (வற்வரி) மேலதிகமாக செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையினை கொண்டுவருதல் வேண்டும்.

வேலணை பிரதேச சபை, வேலணை.
10.12.2003.

திரு.செல்லப்பா சண்முகராஜா (ஜே.பி.),
செயலாளர்,
வேலணை பிரதேச சபை.

(C/31857)(34-12-16)



போர்முலா கார் மன்னன் மைக்கேல் மாக்கருக்கும் இத்தாலி போர் விமானத்துக்கும் இடையே வினோதப்போட்டி நடந்தது. இதில் முதல் சுற்றில் முந்திய மாக்கர் அடுத்த இரண்டு சுற்றுகளில் விமானத்தின் அசுரவேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இதனை அடுத்து இவர் இப்போட்டியில் 1-2 என்ற கணக்கில் தோல்வியைச் சந்தித்தார். 6 முறை போர்முலா கார் போட்டியில் உலகச் சம்பியன் பட்டம் வென்றவர் ஜெர்மனியின் மாக்கர். போர் விமானத்தின் வேகத்தை முந்திக்கொண்டு செல்லும் மாக்கரின் காரைப் படத்தில் காணலாம். வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் மாக்கர் (உட்படம்). இத்தாலியின் கிராசட்டோ நகரில் உள்ள பக்காரினி இராணுவ விமான நிலையத்தில் நடந்த இந்தப் போட்டியை சுமார் 70 ஆயிரம் ரசிகர்கள் கண்டுகளித்தனர்.

# பாரிய கப்பல் உடைபடுவதால் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து

பாகிஸ்தானின் கராச்சித் துறைமுகம் அருகே உலகின் இரண்டாவது மிகப்பெரிய கப்பலை உடைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

கராச்சிக்கு 16கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள கதானி கப்பல் தளத்தில் இப்பணி நடைபெற்றுவருகிறது. அந்தக் கப்பலின் எடை 74ஆயிரத்து 400தொன்கள். நீளம் ஆயிரத்து 360 அடி. கப்பல் துண்டுதுண்டாக உடைக்கப்படுவதால் அரபிக்கடலின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று பல சர்வதேச அமைப்புக்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

இதேசமயம், வேலை கிடைக்கும் என்று பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கில் மக்கள் இங்கு வந்துள்ளனர்.

கப்பல் உடைக்கும் தளத்தில் 35ஆயிரம் தொழிலாளர்கள் தினமும் பணியாற்றி வருகின்றனர்.

இக்கப்பல் பெற்றோலியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் பணியில் ஈடுபட்டிருந்தது.

# ஹரிபோட்டர் பிரதிகள் ரூ.80லட்சத்துக்கு ஏலம்

பிரபல நாவலாசிரியை ஜே.கே.ரௌலிங் எழுதிய 'ஹரிபோட்டர்' நாவல்தொகுதியின் 4 முதல் பதிப்புப் பிரதிகள் ரூ 80லட்சத்துக்கு ஏலம் போயுள்ளன.

'Harry Potter and the Goblet of Fire' என்ற நாவலின் முதல் பதிப்பில் அச்சான 7 புத்தகங்களை ஜே.கே.ரௌலிங் தனது தந்தையார் பீட்டர் ரௌலிங்குக்கு அளித்தார். அந்நூலைத் தனது தந்தைக்கு அவர் அர்ப்பணித்திருந்தார். என்ன காரணத்தாலோ அப்புத்தகங்களை அவருடைய தகப்பனார் ஏல நிலையத்துக்கு அனுப்பிவிட்டார்.

7 புத்தகங்களில் 4தான் ஏலத்தில் விற்கப்பட்டன. 3 புத்தகங்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்று நினைத்த ஏல நிறுவனம் அவற்றை விற்காமல் வைத்துக்கொண்டிருக்கிறது. ஹரிபோட்டர் என்ற சிறுவனின் சாகசங்களை விவரிக்கும் 'ஹரிபோட்டர்' புத்தகங்கள் உலகெங்கிலும் விற்பனையில் சாதனை படைப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆத்திரத்துக்கு அடிமையானதால் கொலைகாரனாகிய இளைஞர்

ஆத்திரத்துக்கு அடிமையானதால் இளைஞர் ஒருவர் கொலைகாரன் ஆனார். இச்சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது.



கொலையாளி

அந்தமானில் இருந்து சென்னைக்கு வந்த கப்பலில் கடந்த 7ஆம் திகதி பயணித்த இஸ்ரேல் வாலிபர் கோகன் யோயல்(வயது 27) கொலைசெய்யப்பட்டார். நடுக்கடலில் நடந்த இந்தக் கொலைச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கொலையுண்ட வாலிபர், காதலி எலிசபெத்துடன் வந்திருந்தார். அவர் கப்பலின் 5ஆவது தளத்தில் காதலியுடன் படுத்திருந்தபோது, நள்ளிரவில் கொலைசெய்யப்பட்டார்.

கப்பலில் ஆயிரத்து 200 பயணிகளும், 100 ஊழியர்களும் இருந்தனர். இதனால், கொலையாளியைப் பிடிப்பதில் சிரமம் ஏற்பட்டது. ஆயினும் இறுதியாகக் கொலையாளி ராஜேஷ்பால் பொலீஸாரிடம் சிக்கினார்.

ராஜேஷ்பால் வாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது :-

நான் அதிகம் படிக்காததால் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு கப்பலில் சமையல்காரனாக வேலைக்குச் சேர்ந்தேன். கப்பலில் மீன், இறைச்சி வெட்டிக்கொடுப்பேன்.

எனக்கு முன்கோபம் அதிகம் உண்டு. யார் தவறுசெய்தாலும் அவர்களை அடித்துவிடுவேன்.

கடந்த 6ஆம் திகதி கப்பலில் பயணஞ்செய்த இஸ்ரேல் நாட்டு வாலிபர் கோகன் யோயல் மதியம் 4மணிக்குத் தடைசெய்யப்பட்ட பகுதியான கப்பலின்மேல் பகுதிக்குச் சென்று புகைபிடித்தார். நான் கஞ்சா குடிக்கிறார் என்று கருதி அவரை ஏசினேன. ஆனால், அவர் கஞ்சா குடிக்கவில்லை. பீடிதான் புகைத்தேன் என்று சொல்லி என்னை அடித்துக் கீழே தள்ளினார். இதனால், எனக்கு அவமானமாகிவிட்டது. இஸ்ரேல் வாலிபர்மீது கடுங்கோபத்தில் இருந்தேன்.

இரவு 1.30மணிக்கு இஸ்ரேல் வாலிபரும், அவரது காதலியும் கப்பலின் மேல் பகுதியான 5ஆவது தளத்தில் உறங்கினர்.

சமையல் அறையில் இருந்த மீன் வெட்டும் கத்தியை எடுத்துக்கொண்டு ஆவேசமாக மேல் தளத்திற்குச் சென்றேன். அங்கு படுத்திருந்த கோகன் யோயலை கத்தியால் கழுத்தில் ஓங்கி வெட்டினேன்.



கோகன் எலிசபெத்

இந்தச் சமயத்தில் அவரது காதலி எலிசபெத் எழுந்துவிட்டார். நான் அதற்குள் 2ஆவது தளத்தில் உள்ள எனது அறைக்கு ஓடி வந்துவிட்டேன்.

எலிசபெத் சொன்ன அடையாளத்தை வைத்து என்னைப் பொலீஸார் கைதுசெய்துவிட்டனர் என்றார் அவர்.



இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தின் முதல் பெண் முதல்வராக உமாபாரதி நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக்கொண்டார். தேர்தலில் வெற்றி பெற்றதற்காக மொட்டையடித்துக்கொண்ட உமாபாரதி, அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் கோமாதாவுக்கு வாழைப்பழம் கொடுத்து உபசரித்தார். இந்துத்துவக் கட்சியான பாரதிய ஜனதாவைச் சேர்ந்தவர் உமாபாரதி.

# 85 வயதில் 55ஆவது ஆண்டாக சபரிமலைக்குப் பயணம்

அச்சுதன் நாயர், இந்தியாவிலுள்ள ஐயப்ப பக்தர்கள் மத்தியில் மிகப்பிரபல்யமானவர்.

85வயதாகும் இவர் தொடர்ந்து 55ஆவது ஆண்டாக இவ்வாண்டும் விரதமிருந்து சபரிமலைக்குச் செல்கிறார்.

55ஆண்டுகால சபரிமலை யாத்திரைக்கான தனது அனுபவங்கள் குறித்து அச்சுதன் நாயர் கூறியதாவது:

இதுவரை நான் சென்று வந்துள்ள 54ஆண்டுகளில் மறக்க முடியாத சம்பவங்கள் ஏராளமாக உள்ளன. குறிப்பாக ஆனைமலையிலிருந்து சபரிமலைக்கு நான் நடந்து சென்ற பாதையில் வழியைத் தவற விட்டுவிட்டேன். அப்போது ஒரு நாய் எனக்கு முன்னால் சென்று வழிகாட்டியது. எனக்குப் பழக்கப்பட்ட இடம் வந்ததும் எனது பழைய பாதையைக் கண்டுபிடித்தேன். ஆனால் அப்போது அந்த நாய் மறைந்து விட்டது. இது போன்ற சம்பவங்கள் 2முறை சபரிமலையில் நடைபெற்றுள்ளன.

அதேபோல 25 வருடங்களுக்கு முன்னர் கூடலூர் மற்றும் நடுவட்டம் பகுதிகளைச் சேர்ந்தவர்களை அழைத்துக்கொண்டு சபரிமலைக் குச் சென்றிருந்தேன். அதில் கண்பார்வை தெரியாத ஒரு சிறுமியும் இடம்பெற்றிருந்தாள்.

பம்பை நதிக்குச் சென்று அங்கு குளித்துவிட்டு மலையேறத் தொடங்கியதும் அந்த சிறுமிக்குப் பார்வை கொஞ்சம் கொஞ்சமாகத் தெரியத் தொடங்கியது. 18படிகளை ஏறி முடித்தபின்னர் அச்சிறுமிக்குப் பார்வை முழுமையாகத் திரும்பிவிட்டது என்றார் அவர்.

# மரங்கள் நடுவதில் சீனா சாதனை!

இந்த ஆண்டில் மட்டும் சீனாவில் 19 உலக சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று கின்னஸ் சாதனைப் புத்தகப் பதிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனாவின் வடக்கு, வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் 40.69 லட்சம் சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவில் புதிதாக மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. உலகில் வேறெந்த நாட்டிலும் இத்தனை பெரிய பரப்பளவில் புதிதாக மரங்கள் நடப்படவில்லை.

'மக்லேவ்' என்ற பயணிகள் ரயிலின் வேகமும் குறிப்பிடத் தக்க உலக சாதனையாகும். லோங்யாங் சாலை என்ற இடத்திலிருந்து புடோங் சர்வதேச விமான நிலையத்தை 8 நிமிடங்களில் கடந்தது அந்த ரயில். மொத்தப் பயணத்தூரம் 30 கிலோமீற்றர்கள். உலகில் அதிவேக புல்லட் ரயில்கள் பல இருந்தாலும், சுற்றுலாவுக்காக விடப்பட்ட ரயிலில் அதிவேகம் உள்ள ரயில் இதுதான் என்று சான்றுரைக்கப்பட்டுள்ளது.

சீனர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் இதுவரை 500சாதனைகளைச் செய்திருப்பதாகக் கின்னஸ் புத்தகத் தயாரிப்பாளர்களுக்குக் கடிதங்களை எழுதியிருக்கின்றனர். அவற்றில் இதுவரை 40தான் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. மற்றவை குறித்து அதிகாரபூர்வமாகச் சான்றுரை கிடைக்காததால் அவற்றைச் சேர்க்கவில்லை.

கின்னஸ் சாதனை என்ற பெயரில் தனிப்பட்ட நபர்களுக்கு விளம்பரம் கிடைக்கும் வகையில் பல சாகசச் செயல்கள் நடைபெறும் வேளையில், சமுதாய முன்னேற்றத்தைச் சிந்தித்து பயன்தரும் வகையில் செயற்பட்டுள்ள சீனர்களின் முன்னுதாரணம் பின்பற்றத்தக்கதாகும்.

# அக்கரைச் சீமையிலே...

தொகுப்பு : மதுமிதா



உலக அழகியாகத் தெரிவுசெய்யப்பட்ட அயர்லாந்து அழகி ரோசன்னாடேவிசன் சொந்த ஊருக்குத் திரும்பினார். அவரை தந்தை கிறிஸ்டி பர்கா முத்தமிட்டு வரவேற்றார். அருகில் தாய் டயானா உள்ளார்.

# ரஜனிக்கு வயது

தனது ஐம்பத்தி நான்காவது வயதில் நேற்று அடியெடுத்து வைத்தார் நடிகர் ரஜனிகாந்த்.

தற்போது அவர் பெங்களூரில் உள்ளார். ரஜனிகாந்த் சென்னையில் இல்லாதபோதும் ரசிகர்கள் உற்சாகத்துடன் அவரது பிறந்தநாளைக் கொண்டாடினர். தமிழகம் முழுவதும் ரஜனியைப் பாராட்டி, வாழ்த்திச் சுவரொட்டிகளை ரசிகர்கள் ஒட்டியுள்ளனர்.

ரஜனியின் புதிய படம் குறித்த தகவல் அவர் பிறந்தநாளின்போது வெளியிடப்படலாம் என ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.


இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் அல்லது ஹரி இயக்கும் படத்தில் அவர் நடிக்கலாம் என சினிமா வட்டாரங்கள் தெரிவித்தன.




FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM

# மங்களகரமான திறப்பு விழா

## FUJI IMAGE SERVICE



நிகழும் மங்களகரமான சுபானு
வருடம் கார்த்திகைத் திங்கள்
27ஆம் நாள் இன்று (13.12.2003)
சனிக்கிழமை காலை 10.54
மணிமுதல் 11.32 மணிவரையுள்ள
(பழைய நேரம்) சுபவேளையில்
புதிதாக அமைக்கப்பெற்ற






# மூர்த்தி ஸ்ரூடியோ அன் கலர்லாப்

என்னும் ஸ்தாபனத்தைத் திறந்து ஆரம்பிக்கவிருப்பதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


3R


4R


5R


6 RW


A4


Index Print


Panorama Print


2 - UP & 4-UP Prints



Greeting Card Print

## MOORTHY STUDIO & COLOUR LAB

JAFFNA ROAD, MANIPAY.
☎ 021 222 2884

HAYLEYS Consumer

**Hayleys Consumer Products Ltd.**
*25, Foster Lane, Colombo - 10,*
*Sri Lanka.*
*Phone : 94 1 688956-9*
*Fax : 94 1 688971*

(C/31870) (22-11-14)

FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM - FUJI FILM

# சுயவிருப்பில் ஓய்வுபெறல்; மாத இறுதியில் சுற்றறிக்கை

## பொது நிர்வாக அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு,டிசெ.13

அரச ஊழியர்கள் விருப்பு அடிப்படையில் ஓய்வுபெறும் திட்டம் தொடர்பான சுற்றறிக்கை மாத இறுதியில் அரச திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன இதனை அறிவிததுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மேற்படி ஓய்வுபெறும் திட்டத்தின் பிரகாரம் ஓய்வுபெற இருப்பவர்களின் தகைமைகள், வயதெல்லை என்பன தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

மேலதிகமாக ஊழியர்களைக் கொண்டிருக்கும் அரசதுறை நிறுவனங்களில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும். ஆசிரியர் மற்றும் சுகாதார சேவையாளருக்கு இந்தத் திட்டம் பொருந்தமாட்டாது.

தாதிச் சேவையைப் பொறுத்த வரையில் பல வெற்றிடங்கள் உள்ளன. ஓய்வுபெற்ற தாதிமார் மீண்டும் சேவையில் அமர்த்தப்படுகின்றனர். பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது.

விருப்பு அடிப்படையிலான ஓய்வூதியத்திட்டம் அரச சேவையை பல வீனப்படுத்துவதற்கு அல்ல. அதனை வலுப்படுத்துவதற்காகவே அமுல் செய்யப்படுகிறது - என்றார். (எ-9)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு புதிய மின் பிறப்பாக்கி கொள்வனவு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ். ஆஸ்பத்திரிக்கு மின்பிறப்பாக்கி ஒன்று புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

200 கிலோவாட்ஸ் மின்சாரத்திணைப் பெறக்கூடிய மின்பிறப்பாக்கியே இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஆஸ்பத்திரியில் இருக்கும் மின் பிறப்பாக்கிகள் சிலவற்றில் மின்பெறுவதில் சிரமம் எதிர்நோக்கப்பட்டது என்றும் -

இதனை அடுத்தே தற்போது புதிய மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டது. (எ-6)

## பருத்தித்துறையில் நாளை பிரதேச சாகித்திய விழா

யாழ்ப்பாணம்,டிசெ.13

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் சாகித்திய விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் வட.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக பட்டயக் கணக்காளர் கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை, கரவெட்டிப் பிரதேச செயலர் க.கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர்.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்நிகழ்வில், காலை அமர்வில் நூல் வெளியீடு, கலைஞர் கௌரவிப்பு என்பனவும் - மாலை அமர்வில் சிறப்புரைகள் மற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நூல் வெளியீட்டு விழாவில் க.அருளானந்தனின் 'அரங்க ஆற்றுகைகளும், ஆய்வு வழிகாட்டியும்' என்ற நூல் வெளியிட்டுவைக்கப்படும். தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெறும். கலாநிதி திருமதி சரஸ்வதி கோபாலசாமி (கர்நாடக சங்கீதம்), கலாபூஷணம் ச.இராசதுரை (இசைநாடகம்) ஆகியோரும் -

நூலாசிரியர்களான கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன் (மஞ்சு காசினியம்), யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் (சர்வதேச நாணய முகாமைத்துவம்), யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வை.சுந்தரேசன் (சீனத்துக் கவிதைகள்), இரா.பஞ்சலிங்கம் (பாஞ்சாலி சபதம் ஆங்கில நாடகம்) ஆகியோரும் -

வீரதீர விளையாட்டுக்கள் என்ற வகையில் சி.தவராசா (சிலம்பக் கலை), செ.செல்வராசா (சாண்டோ), ஆ.செல்வவிநாயகம் (மல்யுத்தம்) ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சங்கீதவித்துவான்களான இசைமாமணி அமரர் க.துரைராசா, சங்கீத ஆசிரியர் அமரர் மு.சாம்பசிவம் ஆகியோருக்கான கௌரவப்பட்டங்களும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்படும். (எ-5)

## நோயாளர் சிரமம்

தென்மராட்சி,டிசெ.13

பளைப் பிரதேசத்தில் உள்ள ஆஸ்துமா நோயாளர்கள் உரிய வேளையில் சிகிச்சை பெறமுடியாத நிலையில் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளை ஆஸ்பத்திரியில் ஆஸ்துமா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய மருத்துவ வசதிகள் இல்லாததால் பெருஞ்சிரமங்களின் மத்தியில சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நோயாளர்கள் வருகை தரவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## கச்சாய் கடலில் படையினரால் பாலம் அமைப்பு

கச்சாய் துறைமுகத்திலிருந்து தாழம்பன் தீவு வரையிலான கடலோரியில் படையினர் பாலம் அமைத்துள்ளதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

மரக்குற்றிகளைப் பயன்படுத்தி இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் - பாலத்திற்கு அப்பால் தூரம் வள்ளத்தில் சென்று மீன்பிடித்து வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எ-117)

## சுகாதார தொழிலாளருக்கு பதவியுயர்வு

தென்மராட்சி,டிசெ.13

யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு சாதாரண தொழிலாளர்களாகப் பதவியுயர்வு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14ஆம், 15 ஆம் திகதிகளில் சுகாதாரசேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறுமெனப் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் க.தா.சிவராஜும் அறிவித்துள்ளார்.

ஐந்து வருட சேவையைப் பூர்த்து செய்த ஊழியர்களே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.(ஐ-117)

## வாசகர் திருமுகம்

### துணிச்சலாக மண் திருட்டு!

தற்போதைய நாட்டு நிலையில் மீள்குடியமர்வு, புனரமைப்பு என்ற தோரணையில் கட்டுமானப்பணிக்காக மண்ணின் தேவை அளப்பரியது. இதற்குப் பிரதியீடாக துன்னாலை வல்லிபுரக்குறிச்சிப் பகுதிகளில் அரச, தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் இரவில் களவாக வாகனங்களில், வண்டிகளில் மண் அகழ்வு நடைபெறுகிறது. இதைக் காணி உரிமையாளர்களே தடைசெய்யவேண்டும் என்ற நிலை.

அடியாள்களுடன் கைத்தொலைபேசிகளின் உதவியுடன் மோட்டார் சைக்கிளில் கண்காணிப்பில் ஈடுபட, மண்திருட்டு நடைபெறுகிறது. சிலர் இதற்காகவே டிராக்டர்களை வாங்கியுள்ளார்கள். கைதுசெய்யப்பட்டு நீதித்துறைக்கு முன் கொண்டுசெல்லப்பட்டவர்கள். ஒரு டிறாக்டர் மண்ணின் விலையைவிட குறைந்த பணத்தைத் தண்டமாகச் செலுத்திவிட்டு வரலாம் என்ற துணிச்சல் தனியார். காணிக்காரர் தனது மண்ணையே பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிலை.

இந்நிலை நீடிக்காமல் இருக்க உரிய நடவடிக்கை சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*துன்னாலை தெற்கு, கரவெட்டி.* **பாதிப்படையும் காணி உரிமையாளர்.**

### குடாநாட்டு விவசாயிகள் பெற்ற நீண்டகாலக்கடனின் நிலைப்பாடு என்ன?

குடாநாட்டு விவசாயிகள் பெற்ற நீண்டகாலக்கடனின் நிலைப்பாடு என்ன? என்ற தலைப்பில் சி.திருநாவுக்கரசுபிள்ளை (வலி.கிழக்கு பல நோ.கூ.சங்கப் பொதுச்சபைப் பிரதிநிதி) அவர்களால் தங்கள் 07.11.03 திகதிய 'உதயன்' பத்திரிகையில் மக்கள் மன்றம் பகுதியில் எழுதிய கட்டுரை என்போன்ற பல விவசாயிகளுக்கு, மிகமிக முக்கியமான ஒரு விடயமாகும்.

என்னைப் போன்று அதிகமான விவசாயிகள் 1978ஆம் ஆண்டில் தலா 5ஆயிரம் ரூபா வீதம் இந்த விவசாயக்கடன் எடுத்துள்ளோம். எங்களில் பலர் குறிப்பிட்ட தவணையிலும் பலர் தவணையில் கற்றுப்பிந்தியும் வட்டியும் முதலுமாக முழுப்பணத்தையும் செலுத்தி முடித்துவிட்டோம். பலர் அரைகுறையாகவும் செலுத்தியுள்ளார்கள். பலர் மிகப்பெரும் பகுதி செலுத்தியபின் மீதியாக ரூபா 200, 300 என்று சிறுபகுதி செலுத்த வேண்டியுள்ளது.

இந்த விடயத்தில் கவலை அளிப்பது என்னவென்றால், கடன் பூராகவும் - ஒழுங்காகச் செலுத்தியவர்கள்கூட கடந்த 25 வருடகாலமாக விவசாயக்கடன் எடுக்கமுடியாமல் இருப்பதுதான். வட்டியில்லாமல் முதலில் 25வீதமான பணத்தைச் திரும்பச் செலுத்தியவர்கள், 75 வீதமான கடனில் இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்கள் என்றும், 25 வீதமான கடனைக்கூட திரும்பச் செலுத்தத்தவறியவர்களின் விவகாரம் கிராம நடுவர்மன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுமென்றும் அமைச்சர்கள் கூறியுள்ளார்கள். இது சங்க நிர்வாகத்துக்கும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளுக்கும் நன்கு தெரியும். அப்படியிருந்தும் நான்கு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற அச்சுவேலி ப.நோ.கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இந்த விவசாயக்கடன் பிரச்சினை ஆலோசிக்கப்பட்டு கடன் பணத்தை மட்டும் வட்டியின்றி செலுத்தி அதனை முடிக்க வேண்டும் என்றும் - சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சங்கம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் - ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், சங்க நிர்வாகம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் ஏழை மக்களாகிய - விவசாயிகளாகிய நாங்களே பாதிக்கப்படுகின்றோம். ஆகவே, இயக்குநர் சபையும் இனியும் காலத்தைத் தாமதிக்காமல் ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களாக.

*நவக்கிரி, புத்தூர்.* **ஒரு விவசாயி.**

## மக்கள் முகம்



புங்குடுதீவைச் சேர்ந்தவரும் சிறந்த சமூக சேவையாளருமான துரைச்சாமி குருநாதசிவம் 06.11.2003 இல் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணஞ் செய்து பதவி யேற்றுள்ளார். யாழ்ப்பாணம் சிவா நறுமணப் பூங்கா, கொழும்பு றோயல் இன்டஸ்றீஸ் ஆகிய நிறுவனங்களின் உரிமையாளரான இவர், புங்குடுதீவிலுள்ள பல ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், தொண்டர் நிறுவனங்கள் முதலானவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துவருகின்றார்.

ஆயுர்வேத வைத்தியத்துறையை விரும்பி ஆதரித்து வரும் இவர் ஆயுர்வேத மூலிகைகளையும் மருந்து வகைகளையும் சேகரிப்பதில் மிகுந்த ஆர்வங்காட்டி வருகின்றார். (ஐ)

* * *



காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வரத்தினம் செல்வராசா அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சிரேஷ்ட சாலை பரிசோதகராகிய இவர், தேசிய ஊழியர் சங்க உப தலைவரும் சிவகௌரி சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் சிறந்த சமூக சேவையாளருமாவார். (ஐ-5)

* * *



நீர்வேலி தெற்கைச் சேர்ந்த தம்பிமுத்து சோதிலிங்கம் அண்மையில் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டார்.

இவர், 1965 ஆம் ஆண்டில் நீர்வேலி, ஊரெழு, உரும்பிராய் கிராமசபை உபதலைவராக இருந்து அரச சேவையில் நியமிக்கப்பட்டு, இலங்கையில் பல பாகங்களிலும் கடமையாற்றியவர். நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் முகாமையாளராகவும் பொருளாளராகவும் பணியாற்றியவர். சிறுவயதுமுதல் சமய, சமூகத் தொண்டராகவும் இருந்து வருகின்றார். அத்துடன், அரச அங்கீகாரம்பெற்ற சத்திய மொழி பெயர்ப்பாளரும் ஆவார். (ஐ)

* * *



மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொடிகாமம் அஞ்சல் அலுவலக சிரேஷ்ட அஞ்சலருமான வே.இரத்தினசிங்கம் அண்மையில் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர், யாழ். மாவட்ட சமாதான நீதிவானும், மந்துவில் மேற்கு சூரியகுமாரன் சனசமூக நிலையத் தலைவரும், மந்துவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், மந்துவில் கூட்டுறவுச் சங்கக் கிளை இல. 6 இன் தலைவரும், மந்துவில் கேலம் அம்பாள் ஆலய பரிபாலன சபை உபதலைவரும் தென்மராட்சி கிராம அபிவிருத்திச் சங்க சமாசத்தின் நிர்வாக உறுப்பினரும் ஆவார். (ஐ-170)

* * *



சுதுமலை வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை முன்னாள் அதிபர் சி.சிவகுரு, 2003 நவம்பர் 4 ஆம் திகதி அன்று யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் யாழ். நீதி நிர்வாகப் பகுதிக்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், தன் சேவைக்காலத்தில் வண்ணேரிக்குளம் மகா வித்தியாலய அதிபராகவும் பூநகரி மகா வித்தியாலய அதிபராகவும் கடமையாற்றினார். பூநகரி கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளராகவும், மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உப தலைவராகவும் கடமையாற்றினார். யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் கடமையாற்றியுள்ளார். இவர் சிறந்த சொற்பொழிவாளர். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்தவராகவும், மானிப்பாய் சுகாதார, கற்றாடல் விவகார சபை ஆளுநர் உறுப்பினரில் ஒருவராகவும் பணிபுரிகிறார். (ஐ-90)

* * *



கரவெட்டி தெற்கைச் சேர்ந்த ஆ.வன்னியசிங்கம் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டார்.

தெங்கு, பனம்பொருள் அபிவிருத்திச் சங்கத்தில் பணிபுரிந்துவரும் இவர், கரவெட்டி தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் தலைவர், சர்வோதய சிரமதான சங்கத்தின் செயலாளர் மற்றும் கரவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப செயலாளர் பதவிகளையும் வகித்து வருகின்றார். (எ)

* * *



அச்சுவேலி - தம்பாலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, பூநாறி லேனைப் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் வேலாயுதம் (தங்கவேல்), 19.08.2003 அன்று யாழ். மேலதிக நீதிவான் பரமலைசுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கொக்குவில் மேற்கு கலைவாணி சனசமூக நிலையத்தின் தலைவரான இவர், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப செயலாளராகவும் பதவி வகித்து வருகின்றார். இவர் அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் கூட. (எ)

* * *



மாதகல் தபால் கந்தோரடியைச் சேர்ந்த செல்லையா பாண்டித்துரை அண்மையில் யாழ் நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு வங்கி, தேசிய வீடமைப்புத் திணைக்களம் உட்பட மற்றும் பல நிறுவனங்களில் விலைமதிப்பாளராகக் கடமையாற்றிய இவர், தற்போது யாழ். நீதிமன்ற விலைமதிப்பாளராக பணியாற்றி வருகின்றார். அராலிவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும் இவர் பதவி வகித்து வருகின்றார்.(எ-135)

யாழ். ஓட்டுமடம் பகுதியில்

## 34 பேருக்கு 'கற்றாக்' இருப்பது மருத்துவ சோதனையில் கண்டுபிடிப்பு

திருநெல்வேலி வயன்ஸ்கழகம் அண்மையில் ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தில் நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமில் 40 பேருக்கு கண் பரிசோதனை நடத்தப்பட்டது.

இவர்களில் 34 பேருக்கு கண் பூவிழிப் படலம் (கற்றாக்) இருப்பது இப்பரிசோதனையின்போது கண்டறியப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ். ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் இந்தப் பரிசோதனைகளை நடத்தியிருந்தார்.

கண் பூவிழிப் படலம் (கற்றாக்) இருப்பதாக இப்பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் டாக்டர் குகதாசனினால் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கழகத் தலைவர் லயன் என்.ஜெயரட்ணம் தெரிவித்தார். (எ-135)

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக

தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்ட பிரிவு நடத்திவரும் உதைப்பந்தாட்டப் போட்டியின் அரைஇறுதி, இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு விழாவும்

இடம் : ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

சிங்கர் அனுசரணையுடன் குடாநாட்டில் முதன்முறையாக மின்னொளியில்

அரையிறுதியில் மோதும் அணிகள்

13.12.2003 இரவு 7.00 மணிக்கு
3ஆம் இடத்திற்கான ஆட்டம்

14.12.2003 இறுதி ஆட்டமும் / பரிசளிப்பு விழாவும்
(மட்டக்களப்பு மாவட்ட தெரிவு அணிக்கும் வலிகாமம் லீக் தெரிவு அணிக்குமான காட்சி உதைப்பந்தாட்டமும் இடம்பெறும்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

FREE! FREE!

இன்னும் பல நத்தார்ப் பரிசுகளுடன்

சிங்கர்
AT HOME WORLDWIDE
No.1, Stanley Road, Jaffna.
Tel : 021 222 5408

(C/31864) UTHAYAN Graphics



இன்று

உங்கள் இசை ஆவல்களைப் பூர்த்தி செய்ய எம்மிடம்

புதிய பழைய VIDEO CD'S

புதிய, பழைய, இடைக்கால AUDIO CD'S

அனைத்து வகையான MP3 CD'S

தமிழ், ஆங்கில DVD

கர்நாடக சங்கீத CD'S

இந்து, கிறிஸ்தவ பக்திப்பாடல் CD'S

SOFT WARE, GAMES CD'S

யாழ். குடாநாட்டில்
13.12.2003
பகல் 10.54, மணிமுதல்
11.32 மணிவரை வரும்
கும்பலக்கின
சுப முகூர்த்த
வேளையில்,
இசை சாம்ராச்சியம்
உதயமாகிறது.

க்கரின் CD சங்கமம்

மற்றும் CD கவர், BLANK CD, போன்றவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்:

Music World

பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். ☎: 021 222 6554

(25748) UTHAYAN Graphics


## திறந்த பல்கலை பரீட்சைத் திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ். திறந்த பல்கலைக்கழகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான முதலாம் கட்டப் பரீட்சை அடுத்தமாதம் 3ஆம் திகதி திருநெலவேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதுவரை டுள்ளியிடப்பட்ட ஒப்படைகளை மீளப்பெறாதவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பிராந்திய நிலையத்தில் அவற்றைப் பெற்றுக கொள்ளலாமென்றும் இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (எ-185)

## தொழிற்சங்க பொதுக்கூட்டம்

ஸ்ரீலங்கா சிமெந்து லிமிட்டட் தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் செ.தேவகுணாளன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஓய்வுபெற்றவர்கள், சேவையில் இருந்து விலகியவர்கள், இறந்தவர்கள் போன்றவர்களின் சம்பள நிலுவைகள் பற்றியவிடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறும சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஒ-ரி)

## நாவாந்துறையில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை தொழிற்சங்கப் பெண்களின் கூட்டமைப்பு நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் பொதுமக்களைப் பங்குபற்றி பயன்பெறுமாறு சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (எ-ரி)

## கலை விழா

வட்டுக்கோட்டை,டிசெ.13

அராலி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கல்வி நிலையம் நடத்தும் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் தம்பதிகள் கலந்துகொள்வர். சிறப்புரையைத் தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த கவியன்பன் நிகழ்த்துவார். (எ-161)

## கலந்துரையாடல்

அச்சுவேலி,டிசெ.13

திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையத்தில் பட்டப்பின் டிப்ளோமா பாடநெறிக்குப் பதிவு செய்த ஆசிரிய, மாணவர்கள் மற்றும் கற்பித்தல் பயிற்சி மேற்பார்வைக்கு நியமிக்கப்பட்டுள்ள முதன்மை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.(எ-11-185)

## சேவை நலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,டிசெ,13

கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கத்தின் சேவையைப் பாராட்டி கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் நடத்தும் சேவைநலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு செ.செல்வராசா தலைமையில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதபிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், ஆசியுரைகளை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இந்து சமய விவகார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் ஆகியோரும் -

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் கா.குகபாலன், தமிழீழ கல்விக் கழக துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்டர், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பொ.கமலநாதன், பொறியியலாளர் இ.நடராஜா, நல்லூர் ப.நோ.கூ.சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி உட்படப் பலரும் நிகழ்த்தவுள்ளனர். (எ-10)



உ

சாமியே சரணம் ஐயப்பா!

## கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய

## மகரஜோதி மண்டல விசேட உற்சவம்

*ஐயப்பன் அடியார்களே!*

இன்று (13.12.2003) சனிக்கிழமை காலை விசேட ஐயப்பன் ஹோமம் நடைபெறும். மாலை 6.00 மணிமுதல் நாகராஜ பூஜை

சர்ப்ப தோஷம், நாகதோஷம், செவ்வாய்தோஷம் உள்ளவர்களும் - சாமிமார்களும் - பால் அபிஷேகம் செய்து தோஷ நிவர்த்தி பெறலாம்.

நாளை (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை புஸ்போற்சவம் - பூ அபிஷேகம்

15.12.2003 திங்கட்கிழமை மாலை 6.00 மணிமுதல் கடுத்தசாமி பூஜை

16.12.2003 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிமுதல் கறுப்பண்ணசாமி விசேட பூஜை

17.12.2003 புதன்கிழமை மாலை 5.00 மணிமுதல் சபரீச ஐயப்பன் மணிகண்டனாகத் தோன்றி மஹிஷி வதம் செய்யும் வேட்டைத்திருவிழா

18.12.2003 வியாழக்கிழமை மாலை 7.00 மணிமுதல் "தீபஜோதி கற்பூர அணி"

19.12.2003 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிமுதல் மங்களம் காத்திடும் "ஸ்ரீ மஞ்சமாதா பூஜை" விசேட சுமங்கலி - கன்னி - தீப பூஜை நடைபெறும்.

ஐயப்பன் அடியார்கள் அனைவரும் கலந்து ஐயப்பன் திருவருளுக்குப் பாத்திரமாகுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (25758) (25-14-18) - **தேவஸ்தானத்தினர்.**



## காரைநகர் - ஈழத்துச் சிதம்பர சைவசமய அறப்பணி நிலையம்

## திறப்புவிழா விஞ்ஞாபனம்

**காலம்:** சுபானு வருடம் கார்த்திகை மாதம் 28ஆம் நாள் [14.12.2003] ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி.

### சைவப் பெருமக்களே!

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்திற்கு அருகல் சைவமும், தமிழும் மேன்மேலும் சிறப்புற்று வளர்ச்சியடைவதற்காக இந்து கலாசார விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டினூடாக கௌரவ *அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன்* அவர்களால் புதிதாக பல லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட பெரும் சைவசமய அறநெறி நிலையம் மக்களின் தேவைகளுக்காக அமைச்சர் அவர்களால் நிகழும் சுபானு வருடம் கார்த்திகை மாதம் 28ஆம் நாள் (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் திறந்து வைக்கப்படும். அன்றைய தினம் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குருமஹா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசார்ய சுவாமிகள் அவர்கள் கலந்து சிறப்பித்து அருளாசி வழங்குவார். மேலும் பல ஆதீனங்களும், பீடாதிபதிகளும் கலந்து அருளாசிகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள், சிறப்புரைகள் நிகழ்த்துவார்கள்.

இந்த வைபவத்தில் அனைத்து மக்களும் வந்து கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். இந்த வைபவத்தையொட்டி முதல் நாள் 13.12.2003 சனிக்கிழமை பிற்பகல் 6.00 மணிக்கு ஈழத்து மூத்த சிவாச்சாரியர்களால் பூர்வாங்கக்கிரியைகள் சிறப்பாக நடைபெறும்.

கார்த்திகை 27ஆம் நாள் (13.12.2003) சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு விநாயக வழிபாடு, தீபஸ்தாபனம், வாஸ்துசாந்தி, பிரவேசபலி, சங்குஸ்தாபனம், கணபதிஹோமம், நவக்கிரகஹோமம், லஷ்மிஹோமம், குபேரஹோமம், மிருத்திஞ்சஹோமம், வேதஸ்தோத்திர திருமுறைப் பாராயணம் முதலியனவும் இடம்பெறும். 14.12.2003 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மாகேசுவரபூசை நடைபெற்று அடியார்களுக்கு ஆரம்ப அன்னதானப்பணி இடம்பெறும்.

பசுவதை மஹா கொடிய பாவமாகும்.

### பங்குபற்றும் சிவாச்சாரியர்கள்

✦சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, கிரியா கலாபமுத்தாமணி, ஸரகமலா சாரங்க வித்தியா சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள் (நயினை - சுதுமலை), ✦மஹாராஜ ஸ்ரீ து.சண்முகநாதக் குருக்கள் (மாவை ஆதீனம்), ✦சிவஸ்ரீ குநகுலேஸ்வரக்குருக்கள் (கீரிமலை ஆதீனம்), ✦சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள் (வடகோவை), ✦சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் (காயத்திரி பீடாதிபதி, இணுவில்) மற்றும் பலரும் பங்குபற்றுவார்கள்.

*சர்வமதச இந்துமத குருபீடாதிபதியின் தலைமையில் நடைபெறும்.*

**ஈழத்துச் சிதம்பர சைவசமய அறப்பணி நிலையம்,
காரைநகர்.** (சி-31875)(14-18)



## O/L மாணவர்களுக்கான விசேட கணனிப் பயிற்சி

**1. Dip.in MS Office**
காலம் 2 மாதம்

**2. Certificate in Hardware Engineering**
பயிற்சிக் காலம் ஒரு மாதம்

✻ உத்தியோகத்தர்களுக்கான கணனிப்பயிற்சி
*மாலை 6 மணிக்கு*

ஆரம்பம்: 14.12.2003

**NORTH LANKA**

சங்கானை (MPCS இற்கு அருகில்)

(25762)(34-14-18)


## மரண அறிவித்தல்

### கந்தப்பிள்ளை செல்லையா
### (பிள்ளையார் ஸ்ரோர்ஸ், K.K.S)

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை செல்லையா அவர்கள் நேற்று (12.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை - தெய்வானையின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற தங்கம்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சேதுப்பிள்ளை மற்றும் முருகுப்பிள்ளை, சின்னத்துரை, பொன்னம்மா, தங்கம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2003) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

*சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.*
(25781) (14-18)

தகவல்:
க.தில்லைநாதன், ந.ரவீந்திரன்.
(G.S.அளவெட்டி கிழக்கு)
(மருமக்கள்)


## லஷ்சுமி சினிமா
இணுவில்

விஜய், ஜோதிகா மற்றும் விவேக் நடித்த

## குஷி
(தமிழ்)

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)

(C-31813)(32)

## நாகம்ஸ் சுன்னாகம்

மாதவன், ஜோதிகா, மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

## பிரியமான தோழி
(தமிழ்)

தினசரி காட்சிகள் :
11.00 3.00 7.00 (பி.நே.)

## லிபேட்டி
அச்சுவேலி

ஸ்ரீகாந்த், ஸ்நேகா (இரட்டை வேடம்), விவேக், மணிவண்ணன் நடித்த



## பார்த்திபன் கனவு
(தமிழ்)

காட்சிநேரம்: , 3.00, 7.00. (தினசரி)
சனி, ஞாயிறு- 11.00, 3.00, 7.00

## நிறைஞ்சனாஸ்

அஜித், மீராஜஸ்மின் நடித்த

## ஆஞ்சநேயா
(தமிழ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி சனி ஞாயிறு இரவு

**Get Carter**

இரவு 8.45 இற்கு (பு.நே.)

(C-31810)(32)

## ராஜா யாழ்ப்பாணம்

கருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடிக்கும்



## எனக்கு 20 உனக்கு 18
(தமிழ்)

காட்சிகள்:
10.30,2.30,6.30,9.30 (பி.நே.)

ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளலாம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகலிங்கம் மாணிக்கம்

பருத்தித்துறை, மணல் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் மாணிக்கம் 4ஆம் திகதி சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் செல்வமலர், செல்வராஜா (ஹொலண்ட்), காலஞ்சென்ற செல்லமாணிக்கம் (சிவா ரேடிங்கோ, பருத்தித்துறை), செல்வமணி (வவுனியா), செல்வமணி (லண்டன்), செல்வதி (பிரான்ஸ்), செல்வகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக தும்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி.குலராஜசிங்கம்
(மருமகன்).

*பருத்தித்துறை.* (சி-31877)

### சின்னத்துரை பரமநாதன்

கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கோவில் வாசல் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரமநாதன் நேற்று (12.12.2003) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவமணியின் அன்புக் கணவரும் பஜீதா, பஜீதரன், பானுஷந்தர், பவிராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2003) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

*கோவில் வாசல் சந்தி,
K.K.S. வீதி,
இணுவில்.* (25783)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விநாசித்தம்பி சின்னம்மா

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விநாசித்தம்பி சின்னம்மா அவர்கள் நேற்று (12.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பியின் அன்பு மனைவியும் செல்லமுத்து, சின்னத்துரை, சிவகுரு, அரசரத்தினம், பராசக்தி (லண்டன்), இராசம்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், தவமணி, அன்னம்மா, அற்புதமலர், கனகலிங்கம் (அமரர்), நவரத்தினம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2003.12.13) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வெள்ளாம்போக்கட்டி இந்துமயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*மீசாலை கிழக்கு,* ஒளிவதனா அரசரத்தினம் (ஆசிரியர்)
*மீசாலை.* கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை, பளை

### திருமதி தேவராசா குணபூஷணம்

நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவராசா குணபூஷணம் நேற்று (12.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சண்முகம் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரு கந்தையா - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும் கந்தையா தேவராசாவின் அன்பு மனைவியும் உருத்திரேஸ்வரி (கனடா), உருத்திரேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நல்லதம்பி பாலச்சந்திரனின் (கனடா) அன்பு மாமியும் சுதர்சன், சிந்துஷா, மீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2003) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.* (25768)(36-14-18)

தகவல்:
க.தேவராசா (கணவர்).

### வஸ்ரியாம்பிள்ளை சேவியர் ரைட்ரஸ்
### (துரைசிங்கம்-ஓய்வுபெற்றவர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கரம்பொன்னை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்ரியாம்பிள்ளை சேவியர் ரைட்ரஸ் (துரைசிங்கம்) நேற்று (12.12.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கிறிஸ்ரீனா (ராசாத்தி - கனடா) என்பவரின் அன்புக் கணவரும் தயா (கனடா), யூட் (ஜேர்மனி), நோயல் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லவுஸின் (கனடா), சோனியா (ஜேர்மனி), பிரேமா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மிலேனா, அன்ரியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பேபி யோசேப்பின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13-12-2003) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் கரம்பொன் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*135,3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.* (25778)(36-14-18)

தகவல்:
ச.பேனாட் (மைத்துனர்).

### திருமதி கணேசு காசிவிசாலாட்சியம்மா
### (குலமணி)

தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசு காசிவிசாலாட்சியம்மா (குலமணி) அவர்கள் நேற்று (12.12.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சினைத்தம்பி கணேசு (சாரதி C.T.B., காரைநகர்) அவர்களின் அன்புத் துணைவியும் சாந்தகுணலெட்சுமி (கனடா), இசைமணி, அருமைச்சித்திரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் குகராஜசிங்கம் (கனடா), காளிதாஸ் (அபுதாபி), மாதவன் (அதிபர், யா/ஊரி.அ.மி.த.க.வி.) ஆகியோரின் அன்பு மாமியாரும் குகசாந், குகசாந்தினி, நாகதீபிகா, நாகதர்சிகா, நாகதர்சிகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் காலஞ்சென்ற குமரகுரு (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்), தேனியம்மா, கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கனகரத்தினம் (சூரப்புலி), கனகசுந்தரம், காலஞ்சென்ற பரஞ்சோதி, வீரம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2003) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு 'சிவபதி' வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'சிவபதி'
வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டை.* (14-18) (சி-31871)

தகவல்:
க.மாதவன் (மருமகன்)
(அதிபர், யா/ஊரி அ.மி.த.க.வி., காரைநகர்)

### திருமதி செல்லத்துரை அன்னரட்ணம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை அன்னரட்ணம் அவர்கள் 11.12.2003 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் கதிரித்தம்பி செல்லத்துரை (பிரதம சிறைச்சாலை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் செல்வரட்ணம் (ஸ்கொடின் லீடர், றோயல் விமானப்படை, லண்டன்), செல்வமலர் (டாக்டர், அவுஸ்திரேலியா), K.S.துரைரட்ணம் (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்), விவேகானந்தன் (சேவாலங்கா, வவுனியா), ஸ்ரீகாந்தன் (புகையிரத நிலைய அதிகாரி, அவுஸ்திரேலியா), இன்பமலர் (அவுஸ்திரேலியா), நித்தியானந்தன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), நிர்மலகாந்தன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மராணி (லண்டன்), Dr.சதானந்தன் (டாக்டர், அவுஸ்திரேலியா), சுகுணாதேவி (அவுஸ்திரேலியா), சிவராஜா (பொறியியலாளர்,அவுஸ்திரேலியா), கௌரி (அவுஸ்திரேலியா), கோபிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காயத்திரி (கணக்காளர், லண்டன்), ரவிசங்கர் (பொறியியல்பீடம், அவுஸ்திரேலியா), தர்ஷன் (மாணவன், அவுஸ்திரேலியா), பிரதீபா (சேவாலங்கா, வவுனியா), ஹம்சானந்தி (விவசாயப் பாடசாலை, வவுனியா), வைஷ்ணவி (அவுஸ்திரேலியா), கௌசிகி (அவுஸ்திரேலியா), யானகா (அவுஸ்திரேலியா), சுஜித் (அவுஸ்திரேலியா), சுவேதா (அவுஸ்திரேலியா), நிஷானி (அவுஸ்திரேலியா), நிவாஷன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா, கனகம்மா, தங்கம்மா, கனகசபாபதி, அருளானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு (கணக்கர் மடம்) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*மலரகம்,
கருவேப்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.* (25773)

தகவல்:
**K.S.துரைரட்ணம்**
(சாந்தண்ணா - மகன்)
இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்ப்பாணம்.

## சாளம்பைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

03-03-1996ஆம் ஆண்டு வவுனியா சாளம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த தா.புலேந்திரராஜா, க. கனகலிங்கம், க.கனகேந்திரன் ஆகிய மூவரையும் கொலை செய்தார் என்று இராணுவ சிப்பாய் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. காயப்படுத்தப்பட்ட சிவயோகராணி புலேந்திரராஜாவின் மனைவியாவார்.

வழக்காளிகள் தரப்பில் அரச சட்டத்தரணி மாணிக்கவாசகம் கணேஷ்ராஜா ஆஜராகினார். எதிரி தரப்பில் அருணகிரிநாதன் ஆஜராகினார்.(ம)

## ஊடக அமைச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

இவ்விரு நிறுவனங்களுக்கும் ரூபவாஹினிக்கும் அரச விளம்பரங்கள் வழங்குவதை இடைநிறுத்துவதெனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ரூபவாஹினி, ஐ.ரி.என். ஆகியவை ஒளிபரப்பும் அரசியல் கலந்துரையாடல்கள் பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் மட்டும் சார்பானவையாக இடம் பெறுவதால், அமைச்சர்களோ அரச எம்.பிக்களோ இனி அந்தக் கலந்துரையாடல்களில் பங்கு பெறுவதில்லை எனவும் அமைச்சரவை இணக்கம் கண்டுள்ளது.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தார் எனக் கூறப்படுகிறது. அதே வேளை, நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்திருக்கிறார்.

# அமைச்சர் என்ற முறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டளைகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்று ஓர் ஆலோசனையை அவர் முன்வைத்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை மிகவும் முக்கியமான ஒருவிடயம்தான். சரியான சமயத்தில் எழுப்பியுள்ளார் என்றார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

அதேவேளை, சபை முதல்வரும் நீதி அமைச்சருமான டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் கூற்றை நிராகரித்தார்.

நிலையியற் கட்டளையின்படி ஆலோசனைக் குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் உரிமை சபாநாயகருக்கே உண்டு. ஆனால், தலைமைதாங்க வேண்டியது அமைச்சரும் பிரதி அமைச்சருமே என்றார் அமைச்சர் லொக்குபண்டார.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் தனது கருத்தை வெளியிட்டார். "ஜனாதிபதியை நாடாளுமன்றத்திற்கு வரும்படி அழைப்பு விட என்னால் முடியாது. அதற்கு இடமும் இல்லை.

ஆனால், இந்த மூன்று அமைச்சுகளினதும் அமைச்சர் என்ற முறையில் அவருக்கு அழைப்பு விடும் அதிகாரம் எனக்கு உண்டு" என்று சபாநாயகர் கூறினார்.

"சபாநாயகரின் இக்கூற்று தவறானது. உங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. ஏற்கனவே, ஜனாதிபதி தொடர்பாக தவறான தீர்ப்பு வழங்கியதாலேயே உங்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவுள்ளோம்" - என்று கண்டி மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான டி.எம்.ஜயரத்ன ஆட்சேபனை தெரிவித்தார்.

இதையடுத்தே, சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. சபாநாயகரின் தீர்ப்புக்கு சவாலிடவோ ஆட்சேபிக்கவோ உறுப்பினர்களுக்கு அதிகாரம் இல்லை என்று ஆளும் தரப்பினரும், ஜயரத்ன எம்.பிக்கு ஆதரவாக எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வாதப் பிரதிவாதம் செய்தனர்.

சபாநாயகர் சபையில் அமைதியை ஏற்படுத்த பிரயத்தனப்பட்டார். என்றாலும், நாற்பது நிமிடங்கள் சபை அல்லோலகல்லோலப்பட்டது.

இறுதியாக, கண்டி மாவட்ட எம்.பி. டி.எம். ஜயரத்ன தமக்கு எதிராகத் தெரிவித்த கூற்றுகளை வாபஸ் பெற வேண்டும் என்று சபாநாயகர் கண்டிப்பாக உத்தரவிட்டார். இதனை ஏற்றுக்கொண்ட ஜயரத்ன எம்.பி. தனது கூற்றுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

இக்கட்டத்தில், ஜே.வி.பி. உறுப்பினரான விமல் வீரவன்ஸ மற்றும் ஒரு சர்ச்சையை எழுப்பினார். அதாவது, 17ஆம் திகதி இந்த மூன்று அமைச்சுகள் தொடர்பாக என்ன செய்யப் போகின்றீர்கள் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

அதை அப்போது பார்த்துக்கொள்ளுங்கள் என்றார் தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

என்ன செய்வீர்கள்? பத்து லட்சம் பேரைத் திரட்டி ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடுவீர்கள். அல்லது ஜனாதிபதியுடன் கலந்துபேசி பிரதி அமைச்சர்களை நியமிப்பீர்கள். அதுவும் இல்லை என்றால் மூன்று அமைச்சுகளுக்குமான நிதி ஒதுக்கீடுகளை தோற்கடிப்பீர்கள். இந்த மூன்றில் ஒன்றைச் செய்வீர்கள்" - என்றார் விமல் வீரவன்ஸ.

அப்போது ஆத்திரம் அடைந்த நிலையில் எழுந்த அமைச்சர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார, அது எங்களுடைய வேலை, நீங்கள் வாயை மூடிக்கொண்டிருந்தால் போதும். அது உங்களுக்கு அவசியம் இல்லாதது என்றார். அதன்பின் சபையில் அமைதி ஏற்பட்டது.

## அரசு-புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சமரச பேச்சு நடந்து வருகிறது. இதனால், அமைதியான சூழ்நிலை நிலவுகிறது. சமரச பேச்சுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்படுவது பற்றி எனக்குத் தெரியாது.

இலங்கை இராணுவத்தை நவீனப்படுத்தவும், இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவும் இந்திய இராணுவ உதவியை நாடியுள்ளோம். கடந்த 9ஆம் திகதி இது சம்பந்தமாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்துப் பேசினேன். 1,200 இலங்கை இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படும்.

இது புதிதல்ல. ஏற்கனவே இது போன்ற ஒப்பந்தங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. நான்கூட இந்தியாவில் பயிற்சி பெற்றவன். விடுதலைப் புலிகளுடன் சமரச தீர்வு ஏற்படும் என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், நாங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இராணுவத்தைத் தயாராக வைத்துள்ளோம்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## திருவாவடுதுறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும் விசேட வழிபாட்டில் கலந்து கொள்வார்.

தொடர்ந்து வதிரி பரமானந்தா ஆச்சிரமம், ஏழாலை வசந்த நாகபூஷணி அம்மன் சைவச்சிறுவர் இல்லம், திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லம்-மருதனார் மடம் மற்றும் கைதடி நவீல்ட் பாடசாலை ஆகியவற்றிற்கும் விஜயம் செய்வார்.

இவர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஈழத்துச் சிதம்பரத்தில் இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் ஈழத்துச்சிதம்பர அறப்பணி மண்டபத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு ஆசிவழங்குவார்.

இந்து கலாசார அமைச்சினால் கல்லுண்டாயில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடுகளைக் கொண்ட திருவாவடுதுறை கிராமத்தையும் குரு மகா சந்நிதானம் அங்குராப்பணம் செய்து வைப்பார். அன்றையதினம் மாலை 4 மணிக்கு நல்லூர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும் ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார்.

# சமாதான முன்னெடுப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 15ஆம் திகதிக்குப் பின் பேச்சுக்கள் தொடரா என்றோ அல்லது 15ஆம் திகதிக்கு முன் பேச்சுக்கள் முடியும் என்றோ என்னால் உறுதியாகக் கூற முடியாது. பேச்சுக்களை விரைவுபடுத் துவதற்காகவே 15ஆம் திகதி என்ற காலநிர்ணயம் தலைவர்களால் அறிவிக்கப் பட்டது. சமீபகாலத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கு இடையில் நடைபெற்ற பேச் சுக்கள் ஒருவகையில் பயனுள்ளவையாக அமைந்தன என்று ஜனாதிபதி கூறினார். கடந்த காலத்தில் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் விவரம், புலிகளின் யோசனை தொடர்பான பிரதமரின் நிலைப்பாடு, எதிர்கால நடவடிக்கைகள் என்பன குறித்து பிரதமர் ஜனாதிபதிக்கு விரிவாக எடுத்துக் கூறியதே இதற்குக் காரணமாகும். இதனையிட்டு ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

- இவ்வாறு சரத் அமுனுகம கூறினார்.

சமாதான நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதியினால் பாதுகாப்பு அமைச்சில் இருந்து பிரதமருக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களுக்குள் உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிய விடயம் அடங்குமா? என்று ஊடகவியலாளர் ஒருவர் சரத் அமுனுகமவிடம் வினவினார்.

"அது தலைவர்களின் உயர்மட்டப் பேச்சுக்களின் மூலமே தீர்மானிக்கப்படும்" என்று அமுனுகம பதிலளித்தார்.


NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம்
A/L 2004
வட்டம் மட்டு சமனிலிகள் ஆரம்பம்: 13.12.2003 — Sat & Sun (9.00 -11.00)
எளிமையின் இயக்கம் புள்ளியியல் ஆரம்பம்: 13.12.2003 — Sat & Sun (4.00 - 6.00) (ப. நே.)
A/L 2005
உராய்வு Mon. & Thu. 5.00 - 6.00 p.m. ஆரம்பம்: 15.12.2003
நிகழ்தகவு Mon. & Tue. 4.00 - 5.00
(25714)
BY: P. செந்தில்நாதன் B.Sc.

A/L கணக்கீடு
"வியாபார இலாபநட்ட கணக்கு"
ஆரம்பம்: 15.12.2003 3.00 பு.நே.
ஆசிரியர்
R.டினேஸ்
I.B.S.
நல்லூர். (25717)

IIS
கல்வியாண்டு
2004/2005
புதிய பிரிவுகள் ஆரம்பம்
மேற்படி கல்வியாண்டுக்குரிய புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
மேலதிக விவரங்கள்:
(சி-31829) 15.12.2003 உதயனில்

IIS
புலமைப்பரிசில்
திட்டம்-2004
விண்ணப்பித்துவிட்டீர்களா?
இன்னும் 4 நாள்களே
உள்ளன
தவறவிடாதீர்கள்.
வருந்த நேரிடும்
(சி-31800)(36)

ஆரம்பமாகிறது
புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய
தரம் 6
மாணவர்களுக்கான புதிய
பாடத்திட்ட அறிமுகத்துடன்
வகுப்புகள் இன்று காலை
(25776) 8.30 இற்கு ஆரம்பம்.
ஏனைய வகுப்புகளுக்கும்
அனுமதிகள் வழங்கப்படும்.
சயன்ஸ் அக்கடமி நல்லூர்
சயன்ஸ் அக்கடமி அரியாலை

வடமராட்சியில்..... உங்களுக்காக.....
e Village Computer Park
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கும் நிறுவனம்
2004 கல்வி ஆண்டுக்கான புலமைப் பரிசில்தட்டம்
★விண்ணப்பித்து விட்டீர்களா?
இதுவரை விண்ணப்பிக்காதவர்களின் நலன்கருதி
G.C.E.(O/L) மாணவர்களின் வசதி கருதியும் விண்ணப்ப முடிவு திகதி 18.12.2003 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.
இட நெருக்கடியைத் தவிர்க்க அனுமதிக்கு முந்துங்கள்!
2004ஆம் ஆண்டு கணனிப் பாடநெறிகளின் விவரம்:
Diplomas In Professional Micro Soft Office XP.
In Desktop Publishing
In Hardware Engineering
In Computer Programming
In Net - work Engineering
Certificates In MS word , MS Excel, MS Access,
MS Power point,
Page Maker ,Corel Draw,Photo shop,
Web desiging,
Internet & E-mail
*Quick pick up in computer operating system
*Kids courses
விண்ணப்பப் படிவங்கள் பெற்றுக்கொள்ளவும்
மற்றும் மேலதிக விவரங்களுக்கும்
e வில்லேஜ் கணனிப் பூங்கா
கிராமக் கோட்டடி பிரதான வீதி, பருத்தித்துறை, T.P.: NO. 2263318
★ இலகு தவணைக்கட்டணம்
★ A/L பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்
★ மே மாதத்தில் ஆரம்பமாகின்றன.
இலவச ஆங்கில/சிங்கள வகுப்புகள்
கணனி கற்கை நெறி சம்பந்தமாக கொழும்பிலிருந்து வருகை தரும் விசேட அனுபவமுள்ள பயிற்றுவிப்பாளர்களின் பங்களிப்பு
(சி-31797)
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
..........கணனி உலக எதிர்காலத்தில்
..........உங்கள் வளமான வாழ்வு....... எங்கள் நிறுவனத்தில்.

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
கல்வியாண்டு 2004
புதிய பிரிவு
தரம் 3 முதல் O/L வரை
எமது வழமையான 'SUPER GRADE' ஆசிரிய குழுவினால்
கற்பிக்கப்படுகிறது.
ஆரம்பம்: 14.12.2003
ஞாயிறு காலை 8.00 (25636)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY:
MR.M.A.HARY
★ புதிய பிரிவு ஆரம்பம்:
14.12.2003 ஞாயிறு
மாலை 3 மணி (N.T)
Sunday / Saturday } 3 p.m. - 4 p.m.
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (25657)



முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
செல்வி புஸ்பராஜ் அம்சனா
சுவிஸில் உள்ள புஸ்பராஜ் - சிவகௌரி தம்பதிகளின் செல்வப் புதல்வி அம்சனா தனது முதலாவது பிறந்தநாளை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் இன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அச்சுவேலி வடக்கில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, மாமா, அத்தை, மச்சாள், உடுப்பிட்டியில் உள்ள அப்பப்பா, அப்பம்மா மற்றும் உறவினர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (31880)(36) த.சித்திவிநாயகம் (அம்மப்பா)

TO GOD BE THE GLORY
18 th ANNIVERSARY CELEBRATION
OF
ASSEMBLY OF GOD, CHUNNAKAM.
Come and Join us for a special Thanksgiving Service unto God and receive God's grace
Date : 14.12.2003
Time : 9.00 a.m. (SLT)
Venue : Assembly of God, Chunnakam
"The Lord Jesus Christ is the Only Hope this Hopeless World"
கர்த்தருக்கே மகிமை
18 ஆவது வருடாந்தக் கொண்டாட்டம்
அசெம்பிளி ஒவ் கோட், சுன்னாகம்.
கர்த்தருக்கு நன்றி செலுத்தி அவர் கிருபையைப் பெற்றுக்கொள்ள வாருங்கள்!
வந்து எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்!!
திகதி: 14.12.2003
நேரம்: காலை 9.00 மணி (புதிய நேரம்)
இடம்: அசெம்பிளி ஒவ் கோட், சுன்னாகம்.
"நம்பிக்கை அற்ற இவ்வுலகிற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே நம்பிக்கை"
(சி-31866)


## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் ச.பிரியதர்சன் அவர்களின் அன்புத் தந்தையார் சின்னையா சண்முகதாஸ் 12.12.2003 அன்று பி.ப. கொழும்பில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்

- நண்பர்கள் -
யாழ்ப்பாணம்.
(சி31879)(36)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.